அறிந்த தாங்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பேதம் பார்க்காமல், அனைவருக்கும் பொதுவானவராக இருந்து, பழம்பெருமை வாய்ந்த, மிகத் தொன்மையான இந்த அவையை அதற்குரிய மாண்புடன் நடத்திடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல. இங்கிருக்கக்கூடிய எல்லோருக்கும் இருக்கிறது. ஆகவே, இங்கிருக்கக்கூடிய அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அந்த நம்பிக்கை நிச்சயமாக இருக்கும். அதில், எந்த மாறுபாடும் இருக்க வாய்ப்பே கிடையாது, அதன் சாட்சிதான் மாண்புமிகு அவை முன்னவரும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் தங்களை இந்தப் பெருமைமிகு இருக்கையில் அழைத்து வந்து அமர வைத்தது.

லார்டு வெலிங்டன் அவர்களும், அவரது துணைவியாரும் இணைந்து இப்பேரவைக்குப் பரிசாக வழங்கிய அந்த அழகிய நாற்காலியில் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். அவையினுடைய மாண்பு கெடாது, எவ்வித விரோத உணர்ச்சிக்கும் இடம் தராமல், ஜனநாயக மரபுகளைக் காக்கக்கூடிய வகையில் ஆளுங்கட்சி செயல்படும் என்ற உறுதியை நான் உங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், பேரவைத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக் கூடிய மாண்புமிகு திரு.கு.பிச்சாண்டி அவர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். திருவண்ணாமலை நகர்மன்ற உறுப்பினராக 1986–ஆம் ஆண்டு மக்கள் பணியாற்றியவர். ஆறு முறை சட்டமன்ற உறுப்பினராக மக்களால் தேர்வு செய்யப்பட்ட பெருமைக்குரியவர் திரு.கு.பிச்சாண்டி அவர்கள். கடந்த சட்டமன்றப் பேரவையில் பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் துணைக் கொறடாவாக அவர் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார். அனைத்து விவாதங்களிலும் முழுமையாகப் பங்கெடுத்த பெருமை அவருக்குண்டு. மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் சொல்லக்கூடிய கருத்துகளையெல்லாம் ஆழமாக உள்வாங்கக் கூடியவர். அவை முன்னவர் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். பேரவை அலுவல் நேரம் நிறைவுபெறுகிற வரையிலே, ஏன் சில நேரம் மதிய உணவைக்கூட மறந்து இந்தப் பேரவையிலே அமர்ந்து பேரவை நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தவர் நம்முடைய திரு.பிச்சாண்டி அவர்கள். அனைவருடனும் அன்போடு பழகக்கூடியவர் : பாசத்தோடு பழகக்கூடியவர் மாண்புமிகு திரு.பிச்சாண்டி அவர்கள். எனவே, பேரவைத் துணைத் தலைவராக அவரை நாம் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அவரையும் மனமார நான் பாராட்டுகிறேன் ; வாழ்த்துகிறேன்.

பேரவைத் தலைவருக்கு இந்த அவையின் மாண்பைக் காப்பாற்ற நிச்சயமாக துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய திரு. பிச்சாண்டி அவர்கள் துணையாக இருப்பார். இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் தனிப்பட்ட எனக்குள்ள வருத்தம் அவைத் தலைவர் ஆனதன் மூலமாகத் தங்களது அரசியல் பணிகளை நாங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியாத சூழல் இப்போது எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள் ; இதே அவையில் திரு.கே.ஏ.மதியழகன் அவர்களைப் பேரவைத் தலைவர் பொறுப்பில் அமர வைத்து, எங்கள் உடன்பிறப்பாக இருந்து எங்களோடு இந்த மாபெரும் இயக்கத்தை வளர்க்கக் காரணகர்த்தாவாக இருந்த தாங்கள், இன்று அந்தப் பணியிலிருந்து அறுத்துக் கொண்டீர்கள் என்று சொல்ல மாட்டேன், ஒதுங்கியிருக்கிறீர்கள்'' என்று வாழ்த்தியதைத்தான் உங்களுக்கு நான் நினைவுபடுத்துகிறேன். ஆகவே, கழகப் பணி செய்ய முடியாமல் போகிறதே என்ற வருத்தம் எனது உள்ளத்தில் ஓர் ஓரத்தில் இருந்தாலும், இந்த இடத்துக்குப் பொருத்தமானவர் தாங்கள்தான் என்பதை எண்ணி அந்த வகையிலே தான் மனநிறைவு அடைகிறேன்.

தங்களுக்கும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சியினர் உட்பட அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது பாராட்டுதல்களை, வாழ்த்துகளை நன்றியோடு தெரிவித்துக்கொண்டு, வாருங்கள் நாம் அனைவரும் சேர்ந்து, நமக்கும் நாட்டு மக்களுக்குமான நல்லதோர் எதிர்காலத்தை அமைக்க இந்தச் சட்டமன்ற ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாப்போம்'' என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

# The Madras Temple Entry Indemnity Bill, 1939

## C. RAJAGOPALACHARIAR

**Hon'ble Former Chief Minister**

**3-8-1939**

I wish to assure Hon. Members that I propose, if at all it is physically possible, to deal fairly exhaustively with all matters and it will not be necessary for hon. Members to intervene in the middle, reminding us as to the several matters on which information has to be given. I have no doubt, at the end of it, if still there are matters to be explained, hon. Members will be at perfect liberty to ask questions and I do not at all dislike being interrupted or asked questions. It is only to respect their feelings that I am beginning like this. What I was trying to say is this: I have to follow a slightly unusual course in the case of this Bill, viz.,

I should have to begin with a relation of facts which ordinarily would not have been necessary in the case of other Bills.

"On or about the 14th June this year, 1939 there was a conference in Madura in respect of temple entry convened specially for that purpose . Hon. Members are



aware, no doubt, that for some years past, there has been agitation in respect of this, not only in Madura but in all places of this Province, and particularly in Madura there was plenty of propaganda carried on in regard to this matter and the public mind was agitated on this matter. At that conference the question was dealt with in a very practical manner and the attention of all gathered in conference as well as of the people of the city and the district was drawn to this question in a very emphatic manner and sustained interest was maintained; so that, on the 8th July the temple at Madura was opened by the trustee to the Harijans and other excluded classes in that district and worship was permitted and proceeded in this manner for several days. From the 8th to the 27th July some more temples were opened in sequence of the first big temple that was opened at Madura, viz., the famous shrine of Sri Meenakshi Sundareswarar on the 8th July. On the 9th July a Vaishnavite temple which cannot be said to be in the same city was opened; it is a very famous shrine which is intimately associated with the Saivite temple of Sri Meenakshi Sundareswarar temple at Madura. That is the temple of Sri Soundararaja Perumal which is about a few miles from Madura and which is actually in the Melur taluk. Then on the 16th July, the great Brahadeswarar temple at Tanjore was opened after consultation with the trustee. On the 26th July at Courtallam, in the Tinnevelly district, the very famous shrine of Sri Tirukuttalanathaswami, near the Falls, was opened. On the next day, i.e., the 27th July a very important temple and one of the most prominent in the southern part of our country, viz., Sri Kasi Viswanathaswami temple at Tenkasi was opened. All these temples, as the Hindu Members of this House are aware and as other hon. Members may also be aware, are situated in very orthodox parts of the Tamil country, where not only the orthodox people, viz., the Brahman communities are concerned, but where many other communities belonging to the non-Brahman classes as they are called, are Concerned, who are equally orthodox and sometimes more orthodox. The opening of these half-a-dozen temples is therefore counted upon by people who are interested in this reform as something most remarkable and as something that forms a landmark in the history of our country, so far as Hinduism is concerned.

"When these temples were opened, it was impossible to remain quiet. It was necessary to take such steps as are necessary to help the progress of this reform and to prevent evil consequences arising. The first question that arose naturally was as to what was the legal position so far as the opening of these temples was concerned. It was by an evil custom that certain classes were excluded from entering the temples. However bad it might be, however old it might be, and however much it might have been opposed to public policy as we now understand it, the courts by their decision created a state of things in law by which these acts of temple entry could amount to either actionable wrongs or even indeed to an offence. It was a very old decision. I think it was Sir T. Muthuswami Ayyar that decided that if, even with the most bona fide intention, a Harijan went into the temple, and was allowed by those in immediate charge of the temple, it would amount, because of the custom and because of the feelings of the other worshippers, to an offence under the Indian Penal Code, viz., the offence of defilement of the temple. That has been the custom which was converted into judge-made law and which converted bona fide acts into desecration which was punished under the Indian Penal Code. That was the state of law which we had to face.

"Now in Madura, let me say, people have seen the Harijans and the excluded classes going to the temple; people have observed, people have seen, that the world has not come down and that the sky has not tumbled down; people are enabled to see that this reform is possible, that this reform is not a mere vision and that therefore they ought to do it. Therefore it is necessary to indemnify acts done in violation of wrong laws-wrong in the sense that I have explained. The custom has to be broken, the reform has to be made possible-that is the justification for that part of the measure which deals with the indemnification of the acts done before the measure becomes law.

# நேர்மையால்
# உங்கள் புகழ் வளர ஆசைப்படுகிறேன்!

பெருந்தலைவர் **காமராஜர்**
மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்

**31–3–1962** அன்று
**பேரவைத் தலைவர் – துணைத் தலைவர் இருவரையும் பாராட்டி ஆற்றிய உரை**

"கனம் சபாநாயகர் (திரு.எஸ்.செல்லபாண்டியன்) அவர்களே, உதவி சபாநாயகர் (திரு.கே.பார்த்தசாரதி) அவர்களே, உங்கள் இருவரையும் இன்று போட்டி இல்லாமல் தேர்ந்தெடுத்ததற்காக நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சாதாரணமாக சபாநாயகர் தேர்தல் போட்டியில்லாமல் இருப்பதே நியாயம். ஆனால், பல்வேறு காரணங்களினால் சென்ற இரு தடவைகளிலும் போட்டியைத் தவிர்க்க முடியாத நிலைமையில் இருந்தோம்.



இன்று மூன்றாவது பொதுத் தேர்தல் முடிந்ததற்குப் பின்னால் போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கக்கூடிய ஒரு நல்ல மரபை ஏற்படுத்தியிருக்கிறோம். இது தொடர்ந்து நடைபெறவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

பொதுவாக, சபையின் நடவடிக்கைகளை நேர்மையாகவும், நீதியோடும் சபாநாயகர்களாக நடத்தக்கூடியவர்களைத்தான் இந்தச் சபை தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்திருக்கிறது. அதேபோலவே, நேர்மையாகவும், நீதி தவறாமல் நல்ல முறையிலே யார் சார்பிலும் இல்லாமல் நடுநிலைமை வகிக்கும் ஆற்றல் உள்ள உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அதற்கு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். என்னைப்போலவே இந்தச் சபையில் உள்ள எல்லா அங்கத்தினர்களும் மகிழ்ச்சி அடைகிறார்கள் என்றே நம்புகிறேன். உங்களுக்குப் பாராட்டுரை வழங்கிய எதிர்க்கட்சி நண்பர்கள் உங்கள் மேல் எவ்வளவு அன்பும், நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால், நான்தான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், நல்ல ஒரு சிறந்த நேர்மையானவரை நான் சார்ந்திருக்கிற கட்சியின் சார்பாக எல்லோருடைய பாராட்டுக்கும் உரியவராக இருக்கக்கூடிய வரை தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்ற பெருமை எனக்குத்தான் உண்டு.எங்களுக்குத்தான் உண்டு, ( ஆரவாரம் ) அதுமட்டுமல்ல, நண்பர் கலியாணசுந்தரம் அவர்கள் பேசும்பொழுது இதற்கு முன்னால் நடந்த இரண்டு தீர்ப்புகளை எடுத்துச் சொன்னார்கள். இரண்டும், சபாநாயகர்களாக இருந்த சிவசண்முகம் பிள்ளை அவர்களாலும், கிருஷ்ணாராவ் அவர்களாலும் வழங்கப்பட்ட தீர்ப்புகள். இருவரும் எங்கள் கட்சி சார்பாகப் போட்டிபோட்டு, எங்களுடைய சார்பாக சபாநாயகர் இடத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்கள் எப்படி நடுநிலைமையில் இருந்து நேர்மையாக நடந்து கொண்டவர்கள் என்பதை எதிர்க்கட்சியினரின் பாராட்டுதல் மூலம் தெரிந்து சந்தோஷப்படுகிறேன். அதைப்போலவே நீங்களும் நேர்மையாக நடக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். நீங்கள் நேர்மையாக நடந்துகொண்டு நல்ல முறையில் உங்கள் புகழ் வளர வேண்டும் என்றும் ஆசைப்படுகிறேன். நண்பர் கருணாநிதி அவர்கள் பத்தமடைப்பாய் மிருதுவாக இருக்கும் என்று சொன்னார்கள். மிருதுவாக மட்டுமல்ல (குறுக்கீடு) உறுதியாக மட்டுமல்ல, இன்று பத்தமடைப் பாய்க்கு உலகப் புகழ் உண்டு. (ஆரவாரம்) அந்தப் புகழ் ஓங்க நல்ல முறையிலே நடந்து இந்தச் சபையில் நடுநிலையாக நீங்கள் இருக்க வேண்டும். அதுதான் நம்முடைய மரபு, பரம்பரை வழக்கம்! அந்த வழக்கப்படி நடந்து, இந்தச் சபை நல்ல முறையில் நடக்க வேண்டும்.

புதிய உறுப்பினர்கள் பலர் வந்திருக்கிறார்கள். அவர்கள் வரம்புமீறித் தெரியாமல் பேசிவிடலாம். உங்களுடைய ஆணைகளை அன்போடு புன்முறுவல் தவழும் முகத்துடன் பிறப்பித்தால் வரம்பு மீறிச் செல்லக்கூடியவர்களை அணைத்துக் கொண்டு செல்லக் கூடிய ஆற்றல் படைத்தவராக இருக்க முடியும். அத்தகைய புன்முறுவல் தோற்றத்துடன் ஆணையிட்டு, அடக்கி நல்ல முறையிலே இந்தச் சபையின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இருக்கிறது என்ற முறையில் நீங்கள் நடந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கையும் உறுதியும் எனக்கு இருக்கிறது.

உங்கள்இருவரையும்நான்மீண்டும்பாராட்டிஎன்னுடையவாழ்த்துகளைத்தெரிவித்துக்கொண்டு, உரையை முடித்துக் கொள்கிறேன்''

# "காடுகள் நம் செல்வம் அதை வளர்க்க வேண்டும்"

**பெரியவர் மு.பக்தவத்சலம்**
**மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்**

**காடு வளர்ப்பு குறித்து மாண்புமிகு பேரவை உறுப்பினராக 8–3–1955 அன்று பேரவையில் ஆற்றிய உரை**

"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதலில் இந்த வெட்டுப் பிரேரணையைப் பிரேரித்த கனம் அங்கத்தினர் அவர்கள் பெரிய பிரசங்கமொன்று நிகழ்த்தினார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன். காடு எவ்வளவு சிறந்ததொரு செல்வம் என்பதை அவர் வற்புறுத்திப் பேசினார். காடுகளிலேதான் கவிகள் உண்டானார்கள். பெரிய ஞானிகள் உண்டானார்கள்.



ஆகவே, கனம் அங்கத்தினர் அவர்களும் காட்டுச் செல்வத்தின் அருமையைப் பற்றிச் சிந்திக்கும்போது அவர்களே ஒரு கவியாக மாறி ஒரு காவியத்தை நமக்கு அளித்தார்கள்.

என் எதிரிலே உட்கார்ந்திருக்கும் கனம் அங்கத்தினர் அவர்கள் உயர்ந்த ஒரு தத்துவத்தை நமக்கு விளக்கினார்கள். இங்குப் பேசிய எல்லா அங்கத்தினர்களும் ஒருவர் நீங்கல் இல்லாமல், காட்டுச் செல்வத்தை வளர்ப்பது பற்றியும், அதைப் பாதுகாப்பதன் அவசியத்தைப் பற்றியும் பேசினார்கள். சில சமயங்களில் எதிர்க்கட்சியினர் அபாண்டமாகக் குறை கூறினால் வருத்தம் வரலாம். அரசியல் வாதிகள் எல்லாவற்றிற்கும் தயாராய்த்தான் இருக்க வேண்டும். என் எதிரே உட்கார்ந்திருக்கும் கனம் அங்கத்தினர் "ஏதோ–vested interest–க்கு உடன்பட்டார்கள்" என்று ஆதாரமில்லாத ஒரு குற்றச்சாட்டைச் சுமத்துவது தவறு. பொதுவாக இந்த விவாதத்திலே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி; காட்டுச் செல்வத்தை மேன்மேலும் வளர்க்க வேண்டும் என்பதுதான் நான் உறுதியாக அனுசரித்து வருகின்ற கொள்கை . மழை பெய்வதற்குக் காடுகள் உபயோகமாக இருக்கின்றன என்பது ஒருபுறம் இருக்க நாம் எல்லோரும் எதிர்பார்க்கின்ற கைத்தொழில் அபிவிருத்திக்குக் காட்டுச் செல்வம் மிகவும் பயன்படக்கூடியதாக இருக்கிறது . பலவகைகளில் காட்டுச் செல்வம் மிகவும் அருமையானது . ஆகவே , இப்பொழுதிருக்கின்ற காடுகளை மேலும் வளர்ப்பதற்கு இந்தப் பிராந்தியங்கள் பயன்படும் என்று சொன்னாலும், நிலமில்லாதவர்களுடைய நிலை மிகவும் அனுதாபத்துடன் அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டியதுதான். எனக்கு நிலம் இல்லை. மரங்களை வெட்டி விவசாயம் செய்ய என்னை அனுமதிக்க வேண்டும் என்று ஒருவர் கேட்டால், நான் பரிசீலனை செய்வது என்னவென்றால், மேலும் காடுகளை வளர்ப்பதற்கு இவைகள் பயன்படுமா, அப்படிப் பயன்படும் என்று சொன்னால் அந்தக் காடுகளை அழித்து விவசாயத்திற்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய உறுதியான கொள்கை. அதற்கு எல்லா அங்கத்தினர்களும் ஆதரவளித்தது எனக்கு மிகுந்த திருப்தி. ஆனால், வெளியேவுள்ளவர்கள் புகார் சொல்வார்கள். அடிக்கடி என்னிடமும் புகார்கள் வருகின்றன. நிலமில்லாதவர்களுக்குக் காடுகளை அழித்துக் கொடுத்துவிடுங்கள். காட்டினால் ஒருவித பிரயோஜனமும் இல்லை என்று என்னிடம் வந்து சொல்வதை நான் அனுதாபத்துடன் கவனிப்பதுண்டு. மதுரையிலும் இன்னும் சில இடங்களிலும் ' ரிசர்வ்' காடுகளிலே சேர்ந்திருக்கின்ற பிராந்தியங்களாக இருந்தாலும் காடு வளர்ப்பதற்குப் பயன்படாது என்று ஏற்படுகிற இடங்களையெல்லாம் நான் அவைகளை விவசாயத்திற்கு நிரந்தரமாக "அசைன்" செய்வதற்கோ, இருபது ஆண்டுகளுக்காவது அசைன் செய்து பயிர்செய்வதற்கோ அனுமதித்துக் கொண்டு வருகிறேன். ஆனால், நிலமில்லாதவர்கள் எப்படியிருந்தபோதிலும் தங்களுக்கு விவசாயத்திற்காகக் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள். ஒரு ஜில்லாவில் நிலமில்லாதவர்கள் இரண்டு அல்லது மூன்று முறை என்னை வற்புறுத்திக் கேட்டார்கள். ஒன்றிரண்டு கனம் அங்கத்தினர்களும்கூடச் சேர்ந்துதான் கேட்டார்கள். நான் காட்டிலாக்காவைக் கலந்து பரிசீலிக்கின்றேன் என்று அவர்களிடம் சொன்னேன். அதற்கு அவர்கள் 'காட்டிலாக்காவைக் கேட்டுப் பிரயோஜனம் இல்லை. நீங்களே செய்யுங்கள்' என்று என்னிடம் சொன்னார்கள். நான், ''எப்படிச் செய்வது ?'' என்று அவர்களிடம் சொன்னேன். காட்டிலாக்கா அதிகாரிகளையும் நான் இதைப் பற்றிக் கேட்டேன் . அந்தப் பிராந்தியத்தில் இப்பொழுது விலையுயர்ந்த சந்தன மரங்கள் இருக்கின்றன. எப்படி அவைகளை அழித்துவிட்டுக் கொடுப்பது என்று அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு என்னிடம் வந்திருந்த நண்பர்களைக் கேட்டதற்கு "ஆம்" என்று ஒப்புக் கொண்டார்கள், மறுக்கவில்லை.

ஆகவே, காட்டுச் செல்வத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், மேலும் மேலும் அதை வளர்க்கவேண்டும் என்ற கொள்கையை ஆதரித்து எல்லா அங்கத்தினர்களும் இந்த விவாதத்தில் பேசியது, நான் உறுதியாக அனுசரிக்க வேண்டுமென்ற கொள்கையை நிறைவேற்றுவதற்கு பெரிய ஆதரவு கொடுப்பதாக இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்"

# “தமிழ்நாடு”
## பெயர் மாற்றத் தீர்மானம்

**பேரறிஞர் அண்ணா**
**மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்**

**18–7–1967 அன்று பேரவையில் நிகழ்த்திய புதுமை!**

சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே எல்லாக் கட்சியினராலும் நல்ல அளவுக்கு ஒப்புக் கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற இருக்கின்ற, “தமிழ்நாடு” என்று பெயரிடுகின்ற இந்த நிகழ்ச்சி இந்த அவையிலே இன்றைய தினம் உறுப்பினர்களாக இருக்கின்ற ஒவ்வொருவருடைய வாழ்நாளிலும் மிகுந்த மகிழ்ச்சியையும் நல்ல எழுச்சியையும் தரத்தக்க ஒரு திருநாள் ஆகும்.



இந்தத் திருநாளைக் காண்பதற்குப் பன்னெடுங்காலம் காத்துக் கொண்டிருக்க நேரிட்டதே என்பதுதான் மகிழ்ச்சியின் இடையிலே நமக்கு வருகின்ற ஒரு துயரமே தவிர, நெடுங்காலத்திற்கு முன்னாலே நடைபெற்றிருக்க வேண்டிய ஒரு நிகழ்ச்சியை மிகுந்த காலம் தாழ்த்தி இன்றைய தினம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம் என்றாலும், இதிலே எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டு இந்தத் தீர்மானத்திற்கு அவர்கள் தங்களுடைய ஆதரவைத் தந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள்கூட இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறார்களே தவிர வேறில்லை. அதிலே சில ஆலோசனைகளைச் சொல்லி இருக்கிறோம் என்று சொல்லியிருப்பது எதிர்க்கட்சியில் இருப்பவர்களுடைய கடமை என்ற வகையில் ஆலோசனைகளைச் சொல்ல வேண்டுமென்ற முறையிலேயே தவிர எதிர்க்கிறார்கள் என்று இல்லை. ஆகையினால், இந்தத் தீர்மானம் எல்லோருடைய ஆதரவையும் பெற்று இந்தியப் பேரரசுக்கு அனுப்பி வைக்கப்பட இருக்கிறது. இந்தியப் பேரரசிலே மிகுந்த செல்வாக்கோடு இருக்கின்ற இரண்டொரு தலைவர்களுடன் உரையாடுகின்ற வாய்ப்புக் கிடைத்தபோது இதைப்பற்றி அவர்கள் சொல்லும்போது, "தமிழக சட்டமன்றத்தில் இது நிறைவேற்றப்பட்டு அனுப்பப்படுமானால் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்துவதிலே தயக்கம் இருக்காது" என்பதனை முன்கூட்டியே என்னிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், அங்குள்ள பல தலைவர்கள்! அதனை அரசை நடத்துகிறவர்கள்கூட ஏற்றுக் கொள்கிறார்கள் என்று எண்ணத்தக்க விதத்தில் பத்து நாட்களுக்கு முன் பாராளுமன்றத்தில் இந்த மாநிலத்தைப் பற்றிப் பேசவேண்டிய வாய்ப்புக் கிடைத்த நேரத்தில் அங்குள்ள உள்துறை அமைச்சர் திரு. சவான் அவர்கள் "மெட்ராஸ் ஸ்டேட்" என்று பேசி பழக்கப்பட்டவர் மிகுந்த அக்கறையோடும் மிகுந்த கவனத்தோடும், "Tamil Nad" என்றுதான் பேசியிருக்கிறார். ஆக, இதை அவர்களும் ஏற்றுக்கொண்டு அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான ஒரு நல்ல வாய்ப்பை இன்றையதினம் இந்த அளவிலே அவையிலே நாம் பெற்று இருக்கிறோம்.

மதிப்புமிக்க திரு. ம.பொ.சி. அவர்கள், இதிலே மிகுந்தமனஎழுச்சிபெற்றுள்ளதுஇயற்கையானதாகும். அவர்கள் பல ஆண்டுகளாக, "தமிழ்நாடு" என்ற பெயர் இந்த நாட்டுக்கு இடப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையோடு பாடுபட்டவர்கள்; திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும், திராவிட முன்னேற்றக் கழகம் என்பதிலே, "திராவிட" என்பதை நினைத்துக் கொண்டிருப்பதாலே "தமிழ்நாடு" என்பதிலே அக்கறையில்லாமல் போய் விடுமோ என்று சிலர் எண்ணிய நேரத்தில் " தமிழ்நாடு" என்று பெயரிடுதல் வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வந்து கொண்டிருக்கிறோம். காங்கிரஸ் கட்சியிலுள்ளவர்களும், மற்றவர்கள் கொண்டு வருகிறார்களே என்பதினாலே முன்னாலே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும், இலக்கியத்தில் ஆதாரம் இருக்கிறதா என்று பல முறை கேட்டிருந்தாலும், இன்றைய தினம் அவர்களும் "தமிழ்நாடு" என்று சொல்லிக் கொள்வதில் மிகுந்த பெருமைப்படுகிறார்கள். ஆகையினால் இந்தத் தீர்மானம் எந்தவிதமான எதிர்ப்பும் இல்லாமல் இந்த அவையிலே நிறைவேற்றப்பட இருக்கிறது என்று கருதுகிறேன்.

அப்படிப்பட்ட ஒரு வெற்றி கிடைக்குமானால் அது இன்று கழகத்திற்கு வெற்றியல்ல; தமிழரசுக் கழகத்திற்கு வெற்றியல்ல; மற்றக் கட்சிகளுக்கும் வெற்றியல்ல; இது தமிழுக்கு வெற்றி! தமிழருக்கு வெற்றி! தமிழ் வரலாற்றுக்கு வெற்றி! தமிழ்நாட்டுக்கு வெற்றி! என்ற விதத்தில் அனைவரும் இந்த வெற்றியிலே பங்கு கொள்ள வேண்டும். "தமிழ்நாடு" என்ற பெயர் இருந்தால் வெளிநாடுகளில் உள்ளவர்கள் அறிந்து கொள்ளமாட்டார்கள் என்பது மட்டுமல்ல, நம்முடைய முன்னாள் தொழில் அமைச்சராக இருந்த திரு.வெங்கட்டராமன் அவர்கள் "ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையே செய்து

கொள்ளக்கூடிய ஒப்பந்தம் எல்லாம் திருத்தி எழுதப்பட வேண்டி வரும். அதனாலே, சிக்கல்கள் விளையும் என்றெல்லாம் சொன்னார்கள். அதிலிருந்து அவர்கள் வெளிநாடுகளுக்கெல்லாம் போய்வந்தார்கள் என்பதைத்தான் கவனப்படுத்துகிறார்களே தவிர உண்மையாகச் சிக்கல்கள் இருக்கின்றனவா என்பதைக் கவனப்படுத்தவில்லை. மதிப்பிற்குரிய நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்துச் சொன்னபடி "கோல்டு கோஸ்ட்" என்பது ஆகிவிட்டது. அதனால் எந்தவிதமான சர்வதேசச் சிக்கல்களும் ஏற்பட்டுவிடவில்லை. தமிழ்நாடு தனி நாடாக இந்தப் பெயரை இடவில்லை. இந்தியாவில் ஒரு பகுதியாக இருந்து கொண்டு இந்தப் பெயரை இடுவதால் இதிலே சர்வதேசச் சிக்கல்கள் எழுவதற்கு நியாயம் இல்லை. ஆகவே, இந்தத் தீர்மானத்தை அனைவரும் தங்கள் தங்கள் கட்சியின் சார்பில் ஆதரிக்க வேண்டுமென்பதை ஒரு கடமை உணர்ச்சியாகக் கொண்டதற்காக மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நண்பர் திரு.ஆதிமூலம் அவர்கள் "தமிழ்நாடு என்ற பெயர் மாற்றத்திற்காகத் தன்னைத் தானே தியாகம் செய்து கொண்ட சங்கரலிங்கனார் அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும்" என்று குறிப்பிட்டார்கள். அதையும் அத்தனை பேரும் உள்ளத்திலே, கருத்திலே கொள்ளுவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். அவருடைய எண்ணங்கள் இன்றைய தினம் ஈடேறத்தக்க நிலை கிடைத்திருப்பதும், அந்த நிலையை உருவாக்குவதிலே நாம் அனைவரும் பங்கு பெற்றிருக்கிறோம் என்பதும் நமக்கெல்லாம் நம் வாழ்நாள் முழுவதும் பெருமைப்படத்தக்க காரியமாகும். நம்முடைய பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் நெடுங்காலத்திற்குப் பிறகு நம்முடைய இல்லங்களிலே அமர்ந்து பேசிக் கொள்கின்ற நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள இருக்கிறார்கள். என்னுடைய பாட்டனார் காலத்திலேதான் நம்முடைய நாட்டுக்குத் "தமிழ்நாடு" என்று பெயர் இடப்பட்டது. எதிர்க்கட்சியில் உட்கார்ந்து கொண்டிருந்த என்னுடைய பாட்டனார் கருத்திருமன் இதை ஆதரித்தார் என்று கருத்திருமன் பேரப் பிள்ளைகளும், எங்களுடைய பேரப் பிள்ளைகளும், எதிர்காலத்திலே பேசக்கூடிய நல்ல நிலைமைகளையெல்லாம் அவர்கள் எண்ணிப் பார்ப்பார்களேயானால் நிச்சயமாக அந்த ஆலோசனையைக் கூடச் சொல்லாமல் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் ஒரு துளியும் ஐயப்பாடு கொள்ளவில்லை. ஆகையினால், இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு திரு. சி.என். அண்ணாதுரை : சட்டமன்றத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கின்ற இந்த நன்னாளில் " தமிழ்நாடு" என்று நான் சொன்னதும் "வாழ்க" என்று அவை உறுப்பினர்கள் சொல்வதற்குத் தங்களுடைய அனுமதியைக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அனுமதி அளிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : "தமிழ்நாடு" !

மாண்புமிகு உறுப்பினர்கள் : "வாழ்க" !

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : "தமிழ்நாடு" !

மாண்புமிகு உறுப்பினர்கள் : "வாழ்க" !

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: "தமிழ்நாடு" !

மாண்புமிகு உறுப்பினர்கள் : "வாழ்க" !

# மாநில முதலமைச்சர்கள் சுதந்திர நாளில் தேசியக் கொடியேற்றும் உரிமை தந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கு நன்றி!

**முத்தமிழறிஞர் கலைஞர்**
**தமிழக முன்னாள் முதலமைச்சர்**

**15–8–1974 அன்று கோட்டையில் முதன்முதல் தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய உரை!**

இந்தியப் பெருநாடு விடுதலைபெற்ற இந்தத் திருநாளில், என் அன்பு வாழ்த்துகளைத் தமிழ் நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, வீர சுதந்திரம் வேண்டி நின்று விடுதலைப் போரில் வீழ்ந்த மான மறவர் களுக்கும், தியாகச் செம்மல்களுக்கும் வணக்கத்தைச் செலுத்துகிறேன்.



மண் மீட்க எழுந்த போராட்டத்தின் முடிவில் வெற்றிக் களிப்புடன் பறந்து, பட்டொளி வீசிடும் தேசியக் கொடியை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்தின் முதலமைச்சர்கள்தான் இந்த நாளில் ஏற்றி வைக்க வேண்டுமென்று நமது தமிழக அரசு எழுப்பிய உரிமைக் குரலைப் புறக்கணிக்காமல் ஒப்புதல் தந்த மத்திய அரசுக்கும், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்ற நமது உறுதி படைத்த உள்ளத்திற்குக் கிடைத்த "விடுதலை நாள் பரிசு" இதுவென எண்ணி மகிழ்கிறோம். அண்ணல் காந்தியடிகளும், ஆசிய ஜோதி நேருவும், திலகரும் தீனபந்துவும், திறன்மிகு சிதம்பரனாரும், தியாகச் செம்மல் பெரியாரும், வித்தகர் இராஜாஜியும், வீரர் நேதாஜியும்—எண்ணற்ற இந்தியப் பெரு வீரர்களும் சிந்திய இரத்தத்தில் பூத்த புரட்சி மலர்தான் இந்த நாட்டின் சுதந்திரம்! அந்த மலரின் மணம், மாளிகைகளின் பலகணி வழியாக, தென்றலின் தோள்மீது ஏறி, வசதி படைத்தோர்க்கு மட்டுமே கிட்டும் என்ற நிலையை மாற்றி, ஏழை வீட்டுச் சாளரங்களிலும் நுழைந்திடும் வண்ணம் செய்திடல் வேண்டும்.

இதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள், "1947 ஆகஸ்டு 15 – அந்திய ஆதிக்கத்திற்குக் கணக்குத் தீர்த்த நாள்" என்றும், "ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடுகிற ஆகஸ்டு 15—சுதந்திரத்தின் பயன்களைக் கணக்குப் பார்க்கிற நாள்" என்றும் அழகுபடக் கூறினார்கள்.

சுதந்திர முழக்கம் செய்த தியாக சீலர்கள் எவரையும் இந்த அரசு மறக்கவில்லை. மதிக்கத் தவறவில்லை. பூலித்தேவனைத் தொடர்ந்து வெள்ளையரை எதிர்த்துக் குரல் ஒலித்த வீரபாண்டிய கட்டபொம்மனின் அழிந்துபோன பாஞ்சாலங்குறிச்சியையும் இதோ – மீண்டும் உருவாக்கிவிட்டோம். அந்தத் தீரனின் திருநாமம் என்றும் மறையாதிருக்கும் வகையில்! தில்லையாடி வள்ளியம்மைக்கு நினைவுச் சின்னம் எழுப்பியிருக்கிறோம்.

சிதம்பரனார் புகழ்பாட, அவர் சிறையில் இழுத்த செக்கைக் கண்டுபிடித்துச் சென்னை மாநகரில் காட்சிக்கு வைத்திருக்கிறோம். கவிதை வடிவில் விடுதலைப் போர்க் கருவிகளைத் தயாரித்துக் கொடுத்த கவியரசன் பாரதிக்குச் சிலை மட்டுமல்ல, எட்டையபுரத்தில் அவர் பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக்கியிருக்கிறோம்.

மூதறிஞர் இராஜாஜிக்கு நாம் எழுப்பும் நினைவாலயம் முடியும் தருவாயிலிருக்கிறது.

ஏழாயிரத்துக்கு மேற்பட்ட தியாகிகளுக்குத் திங்கள்தோறும் மானியம்—தமிழக அரசின் சார்பில் விடுதலைப் பட்டயம்—இப்படிக் கடமை தவறாது அந்நாளில் சுதந்திரப் போர்க்களங் கண்டவர்க்கு வழங்கிடும் அன்புக் காணிக்கையை இந்த அரசு தட்டாமல் தயங்காமல் வழங்கி வருகிறது.

வெள்ளையர் ஆதிக்கத்தை வெளியேற்றுவது மட்டும் சுதந்திரத்தின் நோக்கமல்லவே ! மக்களுக்குச் சுக வாழ்வு அளித்திடத் தொண்டாற்றி அதில் வெற்றி காண்பதும் முக்கியக் குறிக்கோள் அன்றோ ?

ஒரு நாட்டுக் குடிமகனின் இன்றியமையாத தேவைகளான உணவு, உடை, உறையுள்— இவைகளை நிறைவு செய்வதில் நாம் முழு வெற்றி பெற்றுவிட்டோமா ? இல்லை என்றுதானே பதில் எழுந்து தொல்லை தருகிறது, மனத்துக்கு ?

தமிழகத்தைப் பொறுத்தவரையில் – நமது அதிகாரம், நமது வசதி வாய்ப்புகளுக்கேற்றவாறு இயன்ற வரையில் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முயன்று வருகிறோம். அடித்தளத்து மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஏழை எளியோர் மேன்மை பெற நமது திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

நமது கண்ணொளி வழங்கும் தீவிரப் பணிகள், எல்லாப் பகுதிகளிலும் நடைபெற்று மக்களைக் களிப்பில் ஆழ்த்துகின்றன. காந்தியடிகள் கண்ட கனவை நனவாக்கி, கை ரிக்சாக்களை அறவே அகற்றி விட்டோம். ஊனமுற்றோர்க்கு உதவிட முனைந்துள்ளோம். குடியென்னும் கொடுமையை மட்டுமல்ல; குதிரைப் பந்தயமெனும் தீமையையும் இந்த ஆண்டு ஒழித்துவிட்டோம். இதோ பறக்கிற தேசியக் கொடி, இந்திய ஒருமைப்பாட்டுச் சின்னமெனத் திகழ்கிறது. ஆனால்—மதுவிலக்கும், குதிரைப் பந்தய ஒழிப்பும்— மகாத்மாவின் கொள்கைகள்; எனினும், அவை அனைத்திந்திய அளவில் நடைமுறைப் படுத்தப்படவில்லை. இந்திய ஒருமைப்பாட்டை நிலைநாட்ட, தமிழகம் எடுத்துள்ள இந்த நல்ல முடிவுகளை இந்திய மாநிலங்கள் அனைத்தும் பின்பற்ற, பேரரசின் அதிகாரத்திலிருப்போர் வழிவகை காண வேண்டும்.

தன்னிறைவுடன் விளங்கிய தமிழ் மாநிலத்தில் உணவுப் பிரச்சினை நமக்கு வேதனையளிக்கும் ஒரு சம்பவம் !



சமுதாயத்தின் தேவைகளை தனியொருவன் தன் சுய நலத்திற்காகச் சுருட்டிக்கொள்ள முற்படுவதால் ஏற்படும் தீமைகளில் ஒன்றுதான் இந்த உணவுப் பிரச்சினை!

பிரச்சினையைக் கண்டு ஓடாமல், ஒளியாமல் அல்லது அலட்சியப்படுத்தாமல் அரசு எடுத்த நடவடிக்கைகள் – பொது மக்கள் தந்த ஒத்துழைப்பு – இவைகளின் காரணமாக சமூக விரோத வன்முறைச் சக்திகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டன.

பதுக்கல் பூதங்கள், கடத்தல் பிசாசுகள், தங்கள் பேழைகளை நிரப்பிக்கொள்ள ஏழைகளின் வயிற்றில் அடிப்பது மன்னிக்க முடியாத துரோகம். அவர்கள் கடுமையான சட்டத்துக்குள், பொறியில் அகப்பட்ட எலிபோல் ஆக்கப்படுவார்கள் என்பதை இந்த நாளில் நான் எச்சரிக்காமல் இருக்க முடியாது. எதையும் பேசித் தீர்க்க முன்வராமல் சட்டத்தின் சந்து பொந்துகளில் நுழைய முனைவது, சமுதாய நலனுக்காகச் செய்யப்படும் காரியங்களைத் தடுக்கக் குறுக்கே நின்று மிரட்டுவது இவைகளை இந்த அரசு தயவுதாட்சண்யமில்லாமல் சந்திக்கும், சமாளிக்கும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுதந்திரம்–எல்லா மக்களுக்கும் தான்! ஒருவன் வாழ ஒருவர் வீழ அல்ல!

"சிற்றாறும், வரப்பெடுத்த வயலும்,
ஆறு தேக்கிய நல் வாய்க்காலும்
நெற்சேர உழுது உழுது பயன்விளைக்கும்
நிறை உழைப்புத் தோள்களுக்குப்"
பயன்படாத சுதந்திரம் –
"பொற்றுகளைக் கடல் முத்தை,
மணிக் குலத்தைப் போய் எடுக்க"
மூச்சு அடக்கியோர்க்குப்
பயன்படாத சுதந்திரம்–பாலைவனம்
நிலமாகத்தான் கருதப்படும்–அதனைச்
சோலைவனத்துச் சுந்தர நிலமாக்க
இந்த நாளில் அனைவரும் உறுதி எடுப்போம்.

விலைவாசிஏற்றம்–வேலையில்லாத்திண்டாட்டம் எனும்வேதனைச்சூழலுக்கிடையேசுதந்திரத்திருநாள் எனும் மகிழ்ச்சி ஒரு தேன் துளிதான் எனினும், அதன் சுவை குன்றிடும் எனக் கூறுவார் இல்லை. ஆயினும், தேசிய அளவில் மிகப் பெரியதொரு பொருளாதார மாற்றத்தைச் செய்து தீர வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம் என்பதை மறந்திடலாகாது. அரசியல் அமைப்பிலும், பொருளாதாரத் துறையிலும் துணிந்து எடுக்கின்ற புரட்சிகரமான நடவடிக்கைகளின் மூலமே இந்தியாவை ஒளிபொருந்திய நாடாகத் திகழ வைக்க முடியும். இந்த அசைக்க முடியாத பேருண்மைக்குத் தலைவணங்கி, தொண்டினைத் தொடருவோம்! தூய நல் விளைவுகளைச் சேர்ப்போம்" என்று கூறி, என் இதய வாழ்த்துகளை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

தமிழ்நாடு சட்டமன்ற
நூற்றாண்டு விழா

# விடுதலை நாள் விழாவில் முதல்வர்கள் கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்த கலைஞரைப் பாராட்டுகிறேன்

மக்கள் திலகம் எம்.ஜி.இராமச்சந்திரன்
மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர்

15–8–1977 அன்று
சுதந்திரத் திருநாள் விழாவில் ஆற்றிய உரையில்



**1977** ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15 விடுதலை நாள் விழா அன்று சென்னை புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில், அந்நாளைய முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்கள். அப்போது அவர் ஆற்றிய உரையில், ஆளுநருக்குப் பதிலாக மாநில முதல்வர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைக்க வேண்டுமென்று போராடி, உரிமை பெற்றுத் தந்த தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களைப் பாராட்டுகிறேன் என்று கூறிப் புகழ்ந்தார்.

அவரது உரை வருமாறு :–

“ஒரு நாடு அடிமைப்பட்டுக் கிடக்கின்ற மாபெரும் கொடுமையைவிட வேறு ஒரு கொடுமை உலகத்தில் எங்கும் இருக்க முடியாது. இங்கே கொடியேற்றி வைக்கின்ற நேரத்தில் என் நினைவுகள் பல ஆண்டுகளுக்கு முன் செல்கின்றன. அப்போது நடைபெற்ற சுதந்திரப் போராட்ட முயற்சிகள் என் கண்முன் தோன்றின. சுதந்திரப் போராட்டத்திலே கலந்து கொண்டு தங்கள் உடைமைகளையும், சொத்து, சுகங்களையும், பதவிகளையும், பட்டங்களையும் துறந்து இந்த நாடு சுதந்திர நாடாக மிளிர வேண்டும் என்று பலர் செய்த தியாகத்தை நாம் இந்த நேரத்தில் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறோம். கொடியேற்றிய நேரத்தில் ஒரு நிகழ்ச்சி எனக்கு நினைவிற்கு வந்தது. அப்போது ஆங்கிலேயர்கள் இந்தக் கோட்டையைச் சுற்றித் தங்கள் படையை நிறுத்திப் பாதுகாத்துக் கொண்டிருந்த நேரம், நாடெங்கும் சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம், கோட்டையிலே கொடியேற்ற முடியுமா என்ற கேள்வி தியாகத் தொண்டில் ஈடுபட்டவர்களுக்குக்கூட சந்தேகக் குறியாக இருந்த சூழ்நிலையில் ஒருநாள் விடியற்காலையில் அப்போது இங்கேயிருந்த வெள்ளையர் ஆட்சியைக் காப்பாற்ற இந்தக் கோட்டையைச் சுற்றியிருந்த வீரர்கள் மேலே பார்த்தபோது, தேசியக் கொடி ஒன்று பறந்து கொண்டிருந்ததைக் கண்டு திகைத்தார்கள். யாரோ ஓர் இளைஞர் கொஞ்சம்கூட தன்னுடைய உயிருக்காகக் கவலைப்படாமல், தன்னுடைய உணர்வை, மக்களுடைய எண்ணத்தை உலகத்திற்கு எடுத்துக் காட்ட அந்தக் கொடியினை இங்கே ஏற்றி வைத்திருந்தான் என்பதை எண்ணித்தான் திகைத்தது உண்டு. இன்று அந்த வீரனுக்கு நான் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், வேறு எந்த நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தாலும், அவர்கள் நாட்டிற்கு நல்லது செய்தால் அவர்களைப் போற்ற வேண்டியது மனிதத் தன்மையுள்ள ஒவ்வொருவருடைய கடமையாகும். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்தச் சுதந்திரக் கொடியை இங்கே ஏற்றி வைப்பது மேதகு ஆளுநர் என்ற முறையில் இருந்தது. அந்தமுறையை மாற்ற வேண்டுமென்று கோரிய, இதற்காகப் போராடிய அந்த உரிமையைப் பெற்றுத் தந்த, இன்றைய தினம் முதலமைச்சராக இருக்கிற நான், இந்தக் கொடியை ஏற்றி வைக்கிற அளவிற்கு உரிமையைப் பெற்றுத் தந்த கலைஞர் கருணாநிதி அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு நாடு சுதந்திர நாடு என்று சொல்லவேண்டுமென்றால் அந்த நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழ்ந்து, பேச்சுரிமை, எழுத்துரிமை, எண்ணுகிற உரிமை இவைகள் அத்தனையையும் பெற்று வாழவேண்டும். நாமனைவரும் சாதி பேதமின்றி, வேறுபட்ட கருத்துகள் இருந்தால் அதனை வன்முறைக்கு இடமில்லாத வகையில் பேசித் தீர்த்துக் கொள்கிற வகையில் நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து இந்திய சுதந்திரத்தைக் காப்போம்” என்று குறிப்பிட்டார்.

Dr. Tamilisai Soundararajan

RAJ BHAVAN
Hyderabad - 500 041



GOVERNOR
TELANGANA

&

LIEUTENANT GOVERNOR OF PUDUCHERRY

தமிழகச் சட்டப்பேரவையின் நூற்றாண்டு விழா ஆகஸ்ட் 2-ஆம் தேதி கொண்டாடப்படுவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த ஒரு நூற்றாண்டாக தமிழகத்தின் வளர்ச்சிக்காகவும் தமிழக மக்களின் முன்னேற்றத்திற்காகவும் மட்டுமல்லாமல் சமூக நீதியை நிலைநாட்டும் பல முற்போக்கான சட்டங்களை இயற்றிய வரலாறு கண்டது தமிழக சட்டப்பேரவை. இந்த நூற்றாண்டு விழா சிறப்பு மிக்க தமிழகச் சட்டப்பேரவையின் மரபுகளைகளையும் மாண்புகளையும் பறைசாற்றுவதாக அமையும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த தருணத்தில் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் படத்திறப்பு விழா நடைபெறுவது சிறப்பான ஒன்று.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக, 1957 முதல் 13 முறை சட்டப்பேரவை உறுப்பினராக மட்டுமல்லாமல் ஐந்துமுறை முதலமைச்சராகவும் சிறந்த முறையில் பணியாற்றிய டாக்டர் கலைஞரின் உருவப்படத்தை மாண்புமிகு குடியரசுத் தலைவர் தமிழகச் சட்டப்பேரவையில் திறந்து வைப்பது ஓர் வரலாறு.

இனிவரும் காலங்களிலும் தமிழகச் சட்டப்பேரவை அதன் மாண்புகள் சிறக்க பணியாற்றி இந்திய ஜனநாயகத்தின் வலுவான தூணாகச் செயலாற்றும் என்று நம்புகிறேன். தமிழகச் சட்டப்பேரவையின் நூற்றாண்டு விழா மற்றும் டாக்டர் கலைஞர் படத்திறப்பு விழா சிறப்பாக அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

(டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன்)

Phone : 23014481



# Congress Parliamentary Party

Sonia Gandhi
Chairperson

## MESSAGE

On the auspicious occasion of the Centenary of the elected Legislature of Tamil Nadu, I send my warm felicitations to all members of the Legislative assembly past and present, as well as to the people of Tamil Nadu.

The Tamil Legislature has a very long and unique history. Modern day Tamil Nadu, formerly known as Madras State, used to be a residuary part of the erstwhile Madras Presidency and became a part of the Madras Legislative Council which was set up in 1921 under the Government of India Act 1919. Its first meeting was held on 9th January 1921 at Fort St.George and its only apt that the centenary celebration is being held at the same historic location – the seat of the Legislative Assembly of Tamil Nadu.

It is also a matter of pride that this historic occasion will witness the unveiling of the portrait of Dr Kalaignar M Karunanidhi ji, who was truly a People's Leader, and the five term Chief Minister of the state under whose enlightened and progressive leadership, Tamil Nadu became an inspiration to the whole country for its crusade for social justice, and the welfare of the people. The history of the elected legislative assembly in Tamil Nadu is inextricably linked to Kalaignar, whose brilliant oratory in the legislature for over 50 years gave strength, substance and vigour to the institution. It is only fitting that his portrait will be unveiled to mark this auspicious occasion.

I congratulate Thiru MK Stalin and all members of the DMK for their initiative to commemorate this important Centenary of an institution that has symbolized the finest traditions of democracy.


New Delhi
August 1, 2021

# மொழிவாரி மாநிலங்கள் அமையவேண்டும்

## தோழர் ப. ஜீவானந்தம்

### மாண்புமிகு பேரவை உறுப்பினராக 15–7–1953 அன்று தமிழக சட்டப் பேரவையில் ஆற்றிய உரை

இந்தியச் சுதந்திரப் போராட்ட காலத்தில், எப்படி நம் நாட்டில் பறந்து கொண்டிருந்த யூனியன் ஜாக் கொடியை அகற்றி, இந்தியத் தேசியக் கொடியை உயர்த்திக் கொண்டு, தெலுங்கர்களும், தமிழர்களும், மலையாளிளும் கன்னடர்களும் வங்கத்தவர்களும் சிந்துக்களும், ரஜபுத்திரர்களும், சிறைச்சாலையிலும் சரி, தொழிற்சாலையிலும் சரி, போர்க் களத்திலும் சரி, போராட்டக் களத்திலும் சரி, மைதானத்திலும் சரி, மந்தை வெளியிலும் சரி, உயிரை உயிர் என்று மதிக்காது, தங்கள் குருதி ஆற்று வெள்ளமாக ஓடிய போதிலுங்கூடக் கடைசி மூச்சு வரையில் போராடினார்களோ, அதேபோல, அதே பரம்பரையில் வந்திருக்கின்ற மக்கள்



அவசியமேற்பட்டால் நாளைக்கும், அப்படியே போராடுவார்கள்!

மொழிவாரி மாகாணங்கள் அமைய வேண்டுமென்று அவர்கள் கோருவது தங்கள் ஐக்கியத்தை சிதைத்துக் கொள்வதற்காக அல்ல.! ஐக்கிய இந்தியா துண்டு துண்டாக உடைந்து போகவேண்டுமென்ற சதிகார எண்ணத்தால் அல்ல! மொழிவாரியாக மாகாணங்களை அமைத்துக்கொண்டு, தங்களுடைய கலையை தங்களுடைய மொழியை, தங்களுடைய நாகரீகத்தை, தங்களுடைய பண்பாட்டை எல்லா வழிகளிலும் உயர்த்திக் கொள்வதோடுகூட நூற்றுக்கு நூறு பங்கு சாதாரணப் பாமர மக்களும் கூடத் தங்கள் மாகாண அரசியலிலே பங்கெடுத்துக் கொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்க வேண்டும்; ஒரு வழியை அமைத்துக் கொள்ளவேண்டுமென்ற

எண்ணத்தால்தான் என்பதை ஆளும் கட்சியினாலும் சரி, அவர் பக்கத்திலுள்ளோர்களும் சரி நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

ஆகவேதான் நான் சொல்லுகிறேன். மொழிவாரியாக மாகாணங்கள் அமைப்பதில் அமைத்துக்கொள்வதில் சகோதரச் சண்டைகள் வேண்டாம்; நமக்குள்ளேயே ஒருவருக்கொருவர் போராட்டங்கள் வேண்டாம். தற்போது எழுந்திருக்கின்ற சண்டையும்கூட இந்தத் தாலூக்கா அத்துடன் சேருவதா ? இத்துடன் சேருவதா ? என்ற எல்லையை நிர்ணயிப்பதில் ஏற்பட்டிருக்கும் தகராறுதான்; எல்லைகளைச் சண்டை சச்சரவுகள் இன்றி, சமாதான முறையிலேயே, ஜனநாயக ரீதியாக நிர்ணயிக்க முடியும் என்றுதான் கம்யூனிஸ்டு கட்சி கூறுகிறது. ஜனநாயக ரீதியில், ஜனநாயக அடிப்படையில், ஒரு பிரதேசத்தில் வாழும் மக்கள் எம்மொழி பேசி வருகிறார்கள். அப்பிரதேசத்தில் எம்மொழி வழங்கி வருகிறது என்பதைப்பற்றி விசாரிக்க ஒரு கமிஷனை நியமித்து, அதன் மூலமாக எந்தப் பிரதேசத்தை எந்த மொழிவாரி மாகாணத்தோடு இணைக்கவேண்டுமெனச் சுலபமாக வரையறுத்து. சச்சரவுக்கே இடமில்லாத, அபிப்பிராய பேதத்திற்கே இடமில்லாத ஒரு எல்லைக் கோட்டை நிர்ணயிக்க முடியும். Contiguity of language இவைகளை வைத்து முடிவுசெய்ய முடியும். தாயகத்தோடு அதைச் சேர்க்க வேண்டுமென்பதைப்பற்றி எல்லைக் கமிஷன்களை நியமித்துச் சுலபமாகத் தீர்க்கமுடியும். ஸ்ரீ சிவஞான கிராமணியாரிடமும் பேசினேன் மற்ற கட்சிகளிடமும் பேசினேன். இதர கட்சிகளும் ஆட்சேபிக்கவில்லை. Contiguity –ஐ வைத்துக் கொண்டு எல்லையை நிர்ணயித்தோமானால் இந்தச் சண்டைக்கே இடமில்லை.

எல்லைக் கமிஷனை நியமிக்க வேண்டும் என்ற ஜனநாயகக் கொள்கைக்காகவே நண்பர் வினாயகம் அவர்கள் சித்தூரில் போராட்டத்தை நடத்தினார்கள். ஸ்ரீ சிவஞான கிராமணியும் மறியல் போராட்டத்தை நடத்தினார்கள் ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவத்தை ஒப்புக்கொண்டு எல்லைக் கமிஷன் அமைக்கப்படுமென அறிவித்தபின்தான் போராட்டம் நிறுத்தப்பட்டது. பெல்லாரியிலும் போராட்டம் நடந்து வருகிறது. பிரிவினை மூலமாகச் சிக்கல் இல்லாத பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும். அதற்குத்தக்க வழியில்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். உடனடியாக எல்லா மொழிவாரி மாகாணங்களையும் அமைப்பதாக அறிவித்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்தால் போதும். இந்தப் பிரதேசம் எந்த ராஜ்யத்தோடு சேர்ந்திருக்கவேண்டுமென்பதைப்பற்றிச் சச்சரவுக்கே இடமில்லை. இதைத்தான் கம்யூனிஸ்டு கட்சி அழுத்தந்திருத்தமாக வற்புறுத்தி வந்திருக்கிறது. உடனடியாக மொழிவாரியாக எல்லா மாகாணங்களும் அமைக்கப்படவேண்டுமென்பதுதான் அவர்களது நீண்ட நாளைய கோரிக்கை.

எனவே, கடைசியாகக் கேட்டுக் கொள்கிறேன். நமக்குள் எல்லை நிர்ணயிப்பது சம்பந்தமாகச் சண்டை வேண்டாம். ஆந்திர மக்களுடைய புதிய ராஜ்யம் நீண்ட காலப் போராட்டத்தின் வெற்றியின் சின்னமாக உதயமாகப் போகிறது. அதில் ஆரம்பத்தில் எவ்வளவு பலவீனமிருந்தாலும் எவ்வளவு குறைபாடுகள் இருந்தாலும், அவைகள் எல்லாவற்றையும், 'சிந்தனை துணிந்த தெலுங்கர்கள்', சமாளித்து அதைச் செழிப்படையச் செய்வார்கள்; அதையடுத்து ஐக்கிய தமிழகம் வரப்போவது நிச்சயம். ஐக்கிய கேரளம் ஏற்படப்போவது நிச்சயம். யாரும் இனிமேல் அவைகளைத் தடுத்து நிறுத்தமுடியாது. ஐக்கிய கர்நாடகம். ஐக்கிய மகாராஷ்டிரம், ஐக்கிய குஜராத்து அமைவதும் நிச்சயம். ஐக்கிய இந்தியா மொழிவாரியாக அமைக்கப்பட்ட பல ராஜ்யங்கள் சேர்ந்து இருக்கப்போகிறது. அப்படி ஒன்று சேர்ந்த இந்திய யூனியன் உலகத்திலே ஜெகஜோதியாகப் பிரகாசிக்கப் போகின்றது என்பதை இந்த சந்தோஷ வேளையிலே இப்படிப்பட்ட மகிழ்ச்சிகரமான தருணத்தில் நான் தெரிவித்துக் கொண்டு, கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில், இந்த மசோதாவை, இதில் இவ்வளவு குறைபாடுகள் இருந்த போதிலும் கூட– மொழிவாரி மாகாணங்களின் கோரிக்கைக்கெல்லாம் முதல் வெற்றியாக வந்திருக்கிறது என்பதற்காகவும், முதற்படியாக வந்திருக்கிறதென்றும், ஆந்திரச் சகோதரர்களின் நீண்ட காலப் போராட்டத்தின் பயனாக வந்திருக்கிறதென்பதற்காகவும், மகிழ்ச்சியாக வரவேற்கிறேன். அவர்கள் மேலும்மேலும் வெற்றிபெற வேண்டிக் கொள்கிறேன். இதே ரீதியில் மற்ற மொழிவாரி மாகாணங்களையும் அமைக்க சர்க்கார் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

# My Colourless Budget

## C. SUBRAMANIAM
### Hon'ble Former Finance Minister

### General Discussion
### On The Budget For The Year 1953-54
### On 21-3-1953



"My Budget has been characterized as a colourless Budget. I take it as a compliment, because I intended it to be a colourless Budget during the interim period. In fact, if there is any colour in it, I would feel aggrieved, but I am glad that it has been accepted by a large section in this House as colourless and that is what I intended it to be.

That is because, we are in a transition period and it is no good we should embark on any expenditure which anybody may object to. Especially pending partition, it would be wrong on our part to commit the coming Governments to any large expenditure. They will have to assess their resources and also make their own policies and then frame their Budget. That is why, I have contended myself mainly with Part I of the Budget which is only a continuation of the existing schemes. With regard to Part II Schemes as Hon. Members would have noticed we have taken only schemes to an extent of 65 Lakhs which have been necessitated by the existing schemes.

In this connection, I would also like to mention that this period of transition is proving to be a very difficult one for the administration. Hon. Members, especially from the Andhra side are under the impression that as a matter of fact, Tamil friends are interested in delaying the formation of the province. Let them be disillusioned about it. As far as I am concerned, I pressed before Mr. Justice Wanchoo that the partition should be made even on the 1st of April, not because of any other difficulty but because of the administrative difficulties. In fact, during this interim period we find it very difficult to take decisions on certain matters, because even a colourless thing gets some colour added to it because of the background of partition. And what I would have ordinarily rejected saying that the scheme is not necessary, I hesitate to do so now, because motives are likely to be attributed if it is a case relating to the Andhra area. Therefore, the question of taking decisions on such matters is becoming more and more difficult. Therefore we have to postpone taking decisions. And if we have to postpone taking decisions, to that extent administration gets deteriorated and it becomes loose to that extent. Therefore, it is necessary in the interests of both the States, the new Andhra State as well as the residuary State that this partition should come into existence as early as possible, because if the transition period happens to be a long one, I have absolutely no doubt in my mind that administration will get deteriorated and whatever recovery we have been able to make during the one year it will be difficult to regain it and the new States would find it very difficult to push through their schemes efficiently and expeditiously after their formation. That is why I wish to assure Hon. Members from the Andhra side that we are not standing in the way of the formation of the State and that we are not interested in delaying the formation of the State, but that we aré interested in seeing that the formation of the State takes place as early as possible.

Sir, this perhaps is the last Budget session of the composite House. This House will be meeting separately for each area for the consideration of the final Budget later on and I will bé failing in my duty if I do not express my gratitude to all the Hon. Members here for the kindness they have shown me.

I said that this will be the last Budget meeting of the composite legislature. Here I will have to make special mention about the Hon. Leader of the Opposition. He has been very kind and very co-operative and I have been able to get on with the business of the House very easily.

I am glad, Sir, that we will not be losing the services of the Hon. the Leader of the Opposition even after partition. As an old friend of mine I will always value his presence here and also value his co-operation and his assistance. I value his criticism moré than his compliments, because when he makes compliments I do not know where I am. But I welcome his criticisms more than his compliments.

Sir, I wish this House well and also the Andhra State which is going to be formed soon. I wish them all happiness and hope they will all prosper and be good and friendly neighbours".|




# புதியதொரு வரலாறு படைத்திடும் எனது முயற்சிக்கு ஊக்கமளித்திடுவீர்!

**மாண்புமிகு மு.க.ஸ்டாலின்**
**தமிழக முதலமைச்சர்**

## 24–6–2021 அன்று பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் ஆற்றிய பதிலுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடியால் தட்டி தமிழினத்தை எழுப்பிய தந்தை பெரியாரையும், அன்பெனும் உயிராய் ஒருங்கிணைத்த பேரறிஞர் அண்ணா அவர்களையும், ( மேசையைத் தட்டும் ஒலி ) தனித்தனி ஊரில் பிறந்தவர்களையும் 'உடன்பிறப்பு' என்ற ஒற்றைச் சொல்லால் ஈர்த்த ( மேசையைத் தட்டும் ஒலி ) முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும் நெஞ்சில் தாங்கி எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கடந்த 21–ஆம் தேதி, இந்த மாபெரும் சட்டமன்றத்தில் தமிழ்நாடு அரசின் நோக்கங்களையும், எண்ணங்களையும் எடுத்துக்காட்டக்கூடிய நல்லதோர் உரையை ஆற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு, இந்த அரசின் முதலமைச்சர் என்ற முறையிலும், தனிப்பட்ட நிலையிலும் எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்களது உரைமீதான விவாதத்தில் உரையாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவித்து எனது பதிலுரையைத் தொடங்கும் அதேவேளையில், என்னை இந்த மாமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கக்கூடிய கொளத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற மகத்தான வெற்றிக்குக் காரணமான அனைத்துக்கழக உடன்பிறப்புகளுக்கும், ( மேசையைத் தட்டும் ஒலி ) தோளோடு தோள் நின்று பணியாற்றிய தோழமைக் கட்சியினருக்கும், பெரும் எதிர்பார்ப்புகளுடன் தங்களுக்குச் சேவை செய்வதற்கான பெரும் வாய்ப்பினை எங்கள் மீது நம்பிக்கை வைத்து வழங்கியிருக்கக்கூடிய அருந்தமிழ்நாட்டு மக்களுக்கும் முதற்கண்


DELL

என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ( மேசையைத் தட்டும் ஒலி )

தமிழ்நாடு முதலமைச்சர் என்ற இந்த அரிய ஆசனத்தைப் பார்க்கும்போதும், அதிலே அமரும்போதும், என்னுடைய எண்ணங்கள், கடந்த ஒரு நூற்றாண்டு வரலாற்று நிகழ்வுகளையும், முதலமைச்சராகப் பொறுப்பேற்று, அந்த வரலாற்றைப் படைத்த தனிப்பெரும் நாயகர்களையும் சுற்றிச் சுழல்கின்றன. அதன் காரணமாக மெய்சிலிர்ப்பும், பிரமிப்பும், வியப்பும் உண்டாகின்றன.

குறிப்பாக, திராவிட இயக்கத்தின் முன்னோடியான நீதிக்கட்சி 1920 ஆம் ஆண்டு முதல் 1937 ஆம் ஆண்டுவரை சுமார் 17 ஆண்டுகள் தமிழ்நாட்டை ஆட்சி செய்தது. முதன்முதலாக சமூக நீதிக்கான ஆணைகளை வழங்கி, வடமொழி ஆதிக்கத்தைத்தகர்த்து,மகளிருக்கானஉரிமைகளை அங்கீகாரம் செய்து, அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் தந்து, கல்வித் துறையில் சீர்திருத்தங்களைப் புகுத்தி, சமுதாய மாற்றங்களுக்கான விதைகளை விதைத்து, சமூக நீதியை நீரூற்றி வளர்த்த கட்சி, ஆங்கிலேயரின் இரட்டை ஆட்சி முறையில் மிகவும் குறைவான சட்ட அதிகாரங்களை வைத்துக்கொண்டு, தொலை நோக்குத் திட்டங்களையும் அக்காலத்தில் எவரும் சிந்தித்திராத சீர்திருத்தங்களையும் நிறைவேற்றிய கட்சி.

திராவிட இயக்கத்தின் தாய்க்கழகமான நீதிக்கட்சி, இந்தச் சென்னை மாகாணத்தில் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து 100 ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்றைக்கிருந்த மிகக்குறைவான அதிகாரங்களைக் கொண்டே வகுப்புவாரி உரிமையை நிலைநாட்டியது நீதிக்கட்சி! பட்டியலின மக்களது நலனைப் பேணியது நீதிக்கட்சி! திருக்கோயில்களைக் காத்தது நீதிக்கட்சி ! ( மேசையைத் தட்டும் ஒலி ) அத்தகைய நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்து 100 ஆண்டுகளைக் கடந்துவிட்ட இந்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்திருப்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.! ( மேசையைத் தட்டும் ஒலி )

தியாகராயரும், நடேசனாரும். டி.எம். நாயரும் போட்ட சமூகநீதி, சமத்துவ சமுதாயம் காணும் அடித்தளத்தில் அமைந்துள்ள ஆட்சிதான் இன்றைய தி.மு.க. ஆட்சி! 1967 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பில் முதன்முதலாக திராவிட முன்னேற்றக் கழகம் அமர்ந்தபோது, "நீதிக்கட்சி ஆட்சியினுடைய தொடர்ச்சிதான் இந்த ஆட்சி" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்! அதே வழியில் எங்களது ஆட்சியும் நீதிக்கட்சியின் தொடர்ச்சிதான் என்பதைப் பெருமையோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்! ( மேசையைத் தட்டும் ஒலி )

நீதிக்கட்சியின் தொடர்ச்சி பேரறிஞர் அண்ணா! பேரறிஞர் அண்ணாவின் தொடர்ச்சி முத்தமிழறிஞர் கலைஞர்! (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் கலைஞரின் தொடர்ச்சி நான்! ஏன், இந்த அரசு! ( மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத்தை நம்மால்தான் வாழ வைக்க முடியும். தமிழினத்தை நம்மால்தான் வளர்ச்சி பெற வைக்க முடியும்! என்ற நம்பிக்கையோடு தி.மு கழகத்தை ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள் தமிழ்நாட்டு மக்கள்! இந்த அரசின் கொள்கைகளை தமிழ்நாடு எட்ட வேண்டிய இலக்கை, எமது தொலைநோக்குப் பார்வையைத்தான் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அன்று நீதிக் கட்சியின் முதலாவது (First Prime Minister) பிரதம அமைச்சராக இருந்த கடலூர் ஏ.சுப்பராயலு ரெட்டியார் அவர்களையும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராசர் அவர்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்து, ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தி, முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்களையும், 5 முறை முதலமைச்சர் பொறுப்பேற்று, 19 ஆண்டுகள் ஆட்சி செய்த சாதனைச் செல்வர், நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சராக இருந்த தகுதிமிக்க ஏனைய சான்றோர்களையும், இந்த நேரத்தில் நினைவுகூர்வது என்னுடைய கடமைஆகும். நமது முன்னோர்களை நினைவுகூர்வது என்பது, தமிழர் பண்பாட்டின் தவிர்க்க முடியாத முக்கியமான கூறு என்பதை மறந்துவிட முடியாது.

கடந்த 2 நாட்களாக இந்த அவையிலே நடந்திருக்கக்கூடிய விவாதத்திலே திராவிட முன்னேற்றக் கழகம், அ.தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, பாரதிய ஜனதா கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்

கட்சி, மறுமலர்ச்சி தி.மு.க., மனித நேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி ஆகிய கட்சிகளைச் சார்ந்த 22 மாண்புமிகு உறுப்பினர்கள், ஆளுநர் உரையின்மீது தங்களுடைய சீரிய கருத்துகளை மையப்படுத்தி இங்கே உரையாற்றி இருக்கிறார்கள்.

உரையாற்றிய உங்கள் அனைவரது கருத்துகளையும் இந்த அரசுக்கு நீங்கள் சொல்லும் ஆரோக்கியமான ஆலோசனைகளாகவே நான் எடுத்துக் கொள்கிறேன். ஏனென்றால், நான் பேரறிஞர் அண்ணாவினுடைய அரசியல் வாரிசு; (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் கலைஞருடைய கொள்கை வாரிசு; ( மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும்போது முன்வைத்த கோரிக்கைகள், தொகுதி சார்ந்த பிரச்சினைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களால் குறித்து வைக்கப்பட்டிருக்கின்றன. துறை அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து நிச்சயமாக உறுதியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ( மேசையைத் தட்டும் ஒலி )

ஐந்தாண்டுகால ஆட்சி உரிமை கொண்ட அரசு இது. இதில் செயல்படுத்தக்கூடிய திட்டங்கள், கொள்கைகள், கோரிக்கைகள் ஆகிய அனைத்தையும் ஆளுநர் உரையில் மட்டுமே முழுமையாகச் சொல்லிவிட முடியாது. ஆளுநர் உரை என்பது, அரசாங்கத்தின் ஓராண்டுக்கான கொள்கை விளக்கச் சுருக்கம். அதில் அரசாங்கத்தின் ஐந்தாண்டுகளுக்கான நோக்கம். திட்டம், அணுகுமுறை, செயல்பாடுகள் என அனைத்தையும் அடக்கிவிட முடியாது.

ஆளுநர் உரை ஒரு முன்னோட்டம்தான். அனைவருக்கும் எளிதில் புரியும்படிச் சொல்ல வேண்டும் என்றால், இது ஒரு " ட்ரெய்லர் " மாதிரி ( மேசையைத் தட்டும் ஒலி)." முழு நீளத் திரைப்படத்தை விரைவில் வெள்ளித்திரையில் காண்க" என்று முன்பெல்லாம் சொல்லப்பட்டு வந்ததைப்போல, இந்த அரசு வகுத்திருக்கும் பாதை, அதில் மேற்கொள்ள உள்ள பயணம், பயணத்தில் எதிர்கொள்ள இருக்கக்கூடிய இடர்ப்பாடுகள்,அந்த இடர்ப்பாடுகளைக் களைந்தெறியும் சூட்சுமங்கள், சவால்கள் அவற்றைச் சந்திப்பதற்கான சாதுர்யங்கள் என அனைத்தும் விரைவில் இந்தப் பேரவையிலே வைக்கப்படவுள்ள நிதிநிலை அறிக்கையில் விரிவாக இடம்பெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.


"பொறுத்தார் பூமி ஆள்வார்" என்பது பழமொழி. நாங்கள் 10 ஆண்டுகள் பொறுத்திருந்தோம்; ( மேசையைத் தட்டும் ஒலி ) இப்போதுதான் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்திருக்கிறோம். ( மேசையைத் தட்டும் ஒலி ) கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றிக் காட்டுவோம். அதில் உங்களுக்கு ஒரு துளிகூடச் சந்தேகம் வேண்டாம். ( மேசையைத் தட்டும் ஒலி )

"தேர்தல் அறிக்கையில் 505 வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். அதில் எதையும் நிறைவேற்றவில்லை"என்றுமாண்புமிகுஎதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்து இன்றோடு 49 நாட்கள்தான் ஆகி இருக்கிறது. ஆனாலும், என் மீதும், திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீதும் இருக்கின்ற நம்பிக்கையின் காரணமாக, இப்போதே அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி இருக்கலாமே என்ற எதிர்பார்ப்பை வெளிப்படுத்தியிருக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு ( மேசையைத் தட்டும் ஒலி ) முதலில் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிச்சயமாக நிறைவேற்றப்படும். அதில் எந்தவிதமான சந்தேகமும் யாரும் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

> இந்தியாவின் நெம்பர் 1 முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்பதில் எனக்குப் பெருமை இல்லை.
> இந்தியாவில் தமிழகமே முதல் மாநிலம் என்பது தான் எனக்குப் பெருமை!
>
> – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்




தமிழ் நாடு அரசு
GOVERNMENT OF TAMIL NADU
CHIEF MINISTER








Green MAGIC
Premium


தமிழ் நாடு அரசு
MENT OF TAMIL NADU


கலைஞர் நினைவு நூலகம்

ஆட்சிக்கு வந்த முதல் நாளில் இருந்து நாங்கள் மக்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொண்டுதான் வருகிறோம். அதற்கான பணிகளில்தான் எங்களை நாங்கள் ஒப்படைத்துக் கொண்டிருக்கிறோம்.

பல்வேறு ஊடகங்களில் தி.மு.க. அரசினுடைய முதல் முப்பது நாட்கள் எப்படி இருக்கிறது என்று கேள்வி கேட்டு, அதற்குப் பொதுமக்கள் அளித்த பதில்களை அனைவரும் பார்த்திருப்பீர்கள். தி.மு.க.வுக்கு வாக்களிக்கவில்லையே என்று பலரும் தங்களது வருத்தத்தைப் பதிவு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி ), "எங்களுக்கு வாக்களித்தவர்கள், இவர்களுக்கு வாக்களித்தோமே என்று மகிழ்ச்சி அடையக்கூடிய வகையிலே, வாக்களிக்கத் தவறியவர்கள் இவர்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே என்று வருத்தப்படக்கூடிய வகையிலும் எனது பணி இருக்கும்" என்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய நினைவிடத்தில் தி.மு.க. வெற்றி பெற்றவுடன் ஊடகங்கள் வாயிலாக நான் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவித்தேன். அந்த வகையில் நம்முடைய பணிகள் சிறப்பாக அமைந்திருக்கின்றன என்று எண்ணி, இன்னும் சிறப்பாகச் செயல்பட உத்வேகம் கொள்கிறேன்.

ஆளுநர் மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டவுடன் தலைமைச் செயலகத்திற்குச் சென்று நான் பொறுப்பேற்றேன். பொறுப்பேற்றவுடனே கொரோனா நிவாரண நிதியாக 4,000 ரூபாய் வழங்க உத்தரவிட்டேன். ( மேசையைத் தட்டும் ஒலி) முதல் தவணையாக 2,000 ரூபாய் மே மாதத்திலேயே வழங்கப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 அன்று மேலும் 2,000 ரூபாய் வழங்கப்பட்டது. மொத்தம் 8,393 கோடி ரூபாய்ச் செலவில் 2 கோடியே 11 இலட்சம் குடும்பங்கள் இதனால் பயனடைந்திருக்கின்றன.

ஆவின் பால் விலையை லிட்டருக்கு 3 ரூபாய் குறைத்துள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) அது, 16–5–2021 முதலே செயல்பாட்டுக்கு வந்தது. அனைத்து மகளிரும் நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் செய்யலாம் என உத்தரவிட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) திருநங்கைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கும் இந்தச் சலுகை நீட்டிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

என்னிடம் தரப்பட்ட மனுக்களை 100 நாட்களில் தீர்த்து வைக்க 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' எனும் திட்டத்தைத் தொடங்கினேன். இன்று காலை வரை ஆதாரத்தோடு, புள்ளி விவரங்களோடு சொல்லவேண்டுமென்று சொன்னால், 75 ஆயிரத்து 546 மனுக்களுக்கு ( மேசையைத் தட்டும் ஒலி ) இதுவரை தீர்வு காணப்பட்டிருக்கிறது.

தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் கொரோனா நோயாளிகளுக்கான கட்டணத்தை முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் அரசே செலுத்த உத்தரவிட்டோம். இதனால், 20 ஆயிரத்து 520 பேர் பயனடைந்துள்ளனர். ( மேசையைத் தட்டும் ஒலி ) கருப்புப் பூஞ்சை நோய் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கக்கூடிய 330 பேருக்கு, 77 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது. கொரோனாவைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த கட்டளை மையம் "War Room" உருவாக்கப்பட்டது. தடுப்பூசிதான் உயிர்க்கவசம் என்பதால், தடுப்பூசி போடுவது மக்கள் இயக்கமாகவே மாற்றப்பட்டது. இதன் விளைவாக, மக்கள் மத்தியில் மாபெரும் விழிப்புணர்வு ஏற்பட்டு, இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து 47 நாட்களில் 65 இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டிருக்கின்றன. ( மேசையைத் தட்டும் ஒலி ) ஏற்கெனவே போடப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கையை விட இது இருமடங்கு அதிகமாகும்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், கொரோனாவைப் பற்றி அனைவரும் பேசினார்கள். நாங்கள் ஆட்சிக்கு வரும்போது கொரோனா உச்சத்தில் இருந்தது. மே 7–ஆம் நாள், தமிழ்நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை, நாளொன்றுக்கு 26 ஆயிரமாக இருந்தது. அது 36 ஆயிரமாக உயர்ந்து கொண்டிருந்தது. மருத்துவ வல்லுநர்களை விசாரித்தபோது, " இது 50 ஆயிரம் ஆகும்; ஏன்

அதைவிட தாண்டிக்கூடப் போகும்'' என்றெல்லாம் சொன்னார்கள்.

தொடக்கத்தில் கடும் சவாலாகத் தெரிந்தது. ஆனால், அரசு எடுத்த போர்க்கால நடவடிக்கைகளின் காரணமாக அப்படியே படிப்படியாகக் குறைந்து, 7000 க்கும்கீழ் வந்துவிட்டது. ( மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் படிப்படியாகக் குறைந்து விடும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. படுக்கைகள் இல்லை, ஆக்ஸிஜன் (oxygen) வசதி இல்லை என்ற சூழலில்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். "இல்லை, இல்லை'' என்ற சொல்லை இல்லாமல் ஆக்கியிருக்கிறோம். இந்த ஆட்சியில் ( மேசையைத் தட்டும் ஒலி) புதிய படுக்கைகள் உருவாக்கப்பட்டன. ஆக்சிஜன் வசதி கொண்டவையாக, தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகளாக உருவாக்கப்பட்டன. கடந்த ஒன்றரை மாத காலத்தில் மட்டும் 89 ஆயிரத்து 618 படுக்கைகள் தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை இந்த மன்றத்தின் வாயிலாகப் பொது மக்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கொரோனா மூன்றாவது அலை வரக்கூடாது, வந்தாலும், அதனைத் தாங்கி எதிர்கொள்ளும் சக்தி இன்றைய அரசுக்கு இருக்கிறது. அரசு எடுத்த நடவடிக்கை காரணமாகத்தான் தொற்று குறைந்தது. ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தங்கள் ஆட்சியில் அதிகபட்சமாக 7,000 பேர் மட்டுமே பாதிக்கப்பட்டதாகவும், தி.மு.க, ஆட்சியில் 26 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டதாகவும் சொல்லி இருக்கிறார்கள். பிப்ரவரி மாதம் 26–ஆம் தேதி தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதை மனதில் கொண்டு இப்படிச் சொல்கிறார். மே 6 ஆம் தேதி வரைக்கும் முதலமைச்சராக இருந்தவர் அவர்தான்.

கடந்த 22 ஆம் தேதி அவையில் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தமிழ்நாட்டில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட 26–2–2021 ஆம் தேதியுடன் தனது கடமையும் பொறுப்பும் முடிந்ததைப் போலப் பேசினார்கள். "தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட 26–2–2021 அன்று 481 பேருக்குத்தான் கொரோனா பாதிப்பு இருந்தது. 'அப்போது தேர்தல் நடத்தை விதிமுறைகளும் அமலுக்கு வந்தன. அதனால் அதிகாரிகளுடன் பேச முடியவில்லை; இருந்தாலும், தலைமைச் செயலாளருடன் பேசி, மாவட்ட கலெக்டர்கள், மருத்துவ நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தக் கூறினேன். ஆனால், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருப்பதால், தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெறவேண்டுமென்று தலைமைச் செயலாளர் கூறினார். இதுகுறித்து தேர்தல் ஆணையத்திற்கு நான் கடிதம் எழுதினேன். ஆனால், தேர்தல் ஆணையத்திலிருந்து பதில் கடிதம் தலைமைச் செயலாளருக்குத்தான் வந்தது. தலைமைச் செயலாளர்தான் ஆலோசனை நடத்தினார். நான் முதலமைச்சராக இருந்தபோது, கொரோனா தடுப்புப் பணியில் தமிழகம் முதலிடத்தில் இருந்தது'' என்று பேசினார்கள். 26–2–2021 க்குப் பிறகு, அன்றைய முதலமைச்சர் அவர்கள் எந்த அரசுப் பணிகளையும் பார்க்கவில்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி. ( மேசையைத் தட்டும் ஒலி )

12–4–2021 அன்று கொரோனா தடுப்புப் பணிகள் குறித்து கோட்டையில் மூத்த அமைச்சர்கள், அரசு அதிகாரிகளோடு அன்றைய முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள். அப்போது தமிழ்நாட்டில் இருந்த பாதிப்பு 6,711. 17–4–2021 அன்று தலைமைச் செயலாளர் தலைமையில் ஆலோசனை நடந்தது. இந்த ஆலோசனை அனைத்தும் அன்றைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதாக அரசு செய்திக் குறிப்பு கூறுகிறது. அன்றைய தினம் கொரோனா பாதிப்பு 9,344. 18–4–2021 அன்று உயர் அதிகாரிகளை அழைத்து அன்றைய முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை நடத்தியிருக்கிறார். அதற்கு மறுநாள் தமிழ்நாட்டில் பாதிப்பு 10,941. 26–4–2021 அன்று அதிகளவிலான தடுப்பூசிகளை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு பிரதமருக்கு அன்றைய முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார். அன்றைய தினம் தமிழ்நாட்டில் பாதிப்பு 15,684 ஆகிவிட்டது. 28–4–2021 அன்று தடுப்பூசி கொள்முதல் குறித்து அன்றைய முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அரசின் செய்திக் குறிப்பு சொல்கிறது. அன்றைய பாதிப்பு 16,665. இதுதான் உண்மையான நிலைமை. அதாவது, ஏப்ரல் மாதத்தில் முழுமையாக அன்றைய முதலமைச்சர் மேற்பார்வையில்தான் பணிகள் நடந்துள்ளன. ஆனால் கொரோனா கட்டுப்படுத்தப்படவில்லை என்பதுதான் உண்மை. மே 2–ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டன. அன்றைய தினம் ஏற்பட்ட பாதிப்பு

20,768. இவை அனைத்துக்கும் முந்தைய அ.தி.மு.க. அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.

மார்ச் 6–ஆம் தேதியில் இருந்தே தமிழ்நாட்டில் கொரோனா ஆதிக்கம் அதிகமாகிவிட்டது. மார்ச் 30–ஆம் தேதியே தமிழ்நாட்டில் கொரோனா இரண்டாவது அலை வீசி வருகிறது என்று குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், தமிழ்நாடு கல்வித் துறைக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. ஏப்ரல் 6–ஆம் தேதி முதல் அதிகமாகப் பரவத் தொடங்கிவிட்டது. பாதிப்பு எண்ணிக்கை 5,000 – லிருந்து 19,000 ஆக ஆனது. எனவே, கொரோனாவை அ.தி.மு.க. அரசு கட்டுப்படுத்திவிட்டது என்ற வாதம் மிக, மிகத் தவறானது. ( மேசையைத் தட்டும் ஒலி ) அவரை யாராவது கொரோனா தடுப்புப் பணிகளில் ஈடுபடக் கூடாது என்று அவருடைய கையைக் கட்டிப் போட்டு வைத்திருந்தார்களா எனத் தெரியவில்லை. 'நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்' என்று ஒரு திரைப்படம் வந்தது. ( மேசையைத் தட்டும் ஒலி ) அதைப்போல பிப்ரவரி 26 முதல் மே 6 வரையிலான இரண்டு மாதத்திற்கும் மேலான ஆட்சியை அ.தி.மு.க. மறந்து விட்டதா என்று நான் கேட்க விரும்புகிறேன். ( மேசையைத் தட்டும் ஒலி ) ஆட்சிக்கு வரப்போவதில்லை என்று தெரிந்ததும், அலட்சியமாக இருந்ததனுடைய விளைவுதான் பாதிப்பு எண்ணிக்கை 26,000 எனக் கூடியது. ( மேசையைத் தட்டும் ஒலி ) இத்தகைய மோசமான சூழலைக் கட்டுப்படுத்தியதுதான் தி.மு.க. அரசின் மகத்தான சாதனை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ( மேசையைத் தட்டும் ஒலி )

கொரோனா வந்தபோது, அதுபற்றி எதுவும் தெரியவில்லை; மருத்துவர்களுக்கே தெரியவில்லை; மருந்தும் இல்லை; தடுப்பூசியும் இல்லை என்று இப்போதிருக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழப்பமான சூழலில்தான் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டச் சொன்னேன். பலமுறை நான் சொன்னேன். "ஸ்டாலின் என்ன டாக்டரா ?" என்று இப்போதிருக்கிற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். நான் உள்ளபடியே கோபப்படவில்லை.

உண்மை என்னவென்றால், கொரோனாவுக்குப் பிறகு தமிழ்நாட்டில் அனைத்துப் பொதுமக்களும் டாக்டர் ஆகிவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அதுதான் உண்மை. எல்லோருமே இன்றைக்குப் பாதி டாக்டர்கள், இப்போது அப்படித்தான் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, இனிமேல் நாம் யாருமே யாரையுமே, "நீங்கள் டாக்டரா ?" என்று கேட்க முடியாது. ( மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு நிலைமை ஆகிவிட்டது.

நான் எதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டச் சொன்னேன் என்றால், அனைத்துத் தரப்பினரது ஆலோசனைகளையும் கேட்கவேண்டும் என்பதற்காகத்தான். கழக ஆட்சி அமைந்ததும், அனைத்துச் சட்டமன்றக் கட்சித் தலைவர்களை உள்ளடக்கி உட்படுத்தி ஒரு குழுவை நியமித்தோம். அ.தி.மு.க. சார்பிலே முன்னாள் அமைச்சர், மருத்துவர், மாண்புமிகு விஜயபாஸ்கர் அவர்கள்கூட அதில் இடம்பெற்றிருக்கிறார்கள். இந்தக் குழுவின் ஆலோசனைகளைப் பெற்றுத்தான், இன்றைய அரசு செயல்படுகிறது. எனவே, கொரோனா தடுப்புப் பணிகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கோரிக்கைகளையும், ஆலோசனைகளையும் தங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மூலமாக அரசுக்கு நீங்கள் தொடர்ந்து சொல்ல வேண்டும் என்று இந்த நேரத்திலே உரிமையோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இது அரசியல் பிரச்சினை அல்ல; கட்சிப் பிரச்சினையும் அல்ல ; ஆட்சியின் பிரச்சினையும் அல்ல ; மக்கள் பிரச்சினை. மக்கள் நலன் சார்ந்திருக்கக்கூடிய பிரச்சினை. ( மேசையைத் தட்டும் ஒலி ) எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது, "நான் தவறாகச் சொல்லவில்லை; அனைவரும் சேர்ந்து செயல்பட வேண்டும்" என்று சொன்னார்கள். அதற்காக அவருக்கு நான் மீண்டும் மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ( மேசையைத் தட்டும் ஒலி ) அனைவரும் சேர்ந்து செயல்பட்டு, அனைத்துத் தரப்பினரது ஆலோசனைகளையும் பெற்று, கொரோனாவுக்கு முழுமையான முற்றுப்புள்ளியை இந்த அரசு வைக்கும் என்று நான் உறுதிபட இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி )

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. அரசு செய்துள்ள சாதனைகளைத் தொடர்ந்து சொல்லவேண்டுமானால், தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகப் போராடியவர்கள் மீது போடப்பட்ட





வழக்குகள், மக்களுக்காகக் குரல் கொடுத்த அரசியல் கட்சித் தலைவர்கள் மீதான வழக்குகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஸ்டெர்லைட் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் வாரிசுகள், அதாவது 17 பேருக்கு அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ற வேலை வழங்கப்பட்டிருக்கிறது. ( மேசையைத் தட்டும் ஒலி ) ஸ்டெர்லைட் போராட்டத்தில் தாக்கப்பட்டுக் காயமடைந்த 94 பேருக்கு தலா 1 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. ( மேசையைத் தட்டும் ஒலி )

கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகள் வழங்க அனைத்துச் சட்டமன்றக் கட்சி உறுப்பினர்கள் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. செங்கல்பட்டில் இருக்கும் தடுப்பூசி மையத்தையும், ஊட்டியில் உள்ள ஃபாஸ்டர் நிறுவனத்தையும் செயல்பட வைக்க மாண்புமிகு பிரதமரை வலியுறுத்தியிருக்கிறோம். ஊடகவியலாளர்கள், கொரோனா தொற்றால் இறக்க நேரிட்டால் 10 இலட்சம் ரூபாய் நிவாரணம் என அறிவித்து அதையும் செயல்படுத்தியிருக்கிறோம். சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து ஆக்சிஜன், ரெகுலேட்டர்கள், ஆக்சிஜன் நிரப்ப சிலிண்டர்கள் வாங்கப்பட்டன.

கொரோனா தொற்றால் பெற்றோர்கள் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு, 5 இலட்சம் ரூபாய் வைப்பு நிதி மற்றும் மாதாந்திர உதவித் தொகை ரூ.3,000, பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகளுக்கு உடனடி நிவாரணமாக ரூபாய் 3 இலட்சம், கல்வி மற்றும் விடுதிக் கட்டணத்தை அரசே ஏற்கும் என, இப்படிப் பல்வேறு சலுகைகளை அறிவித்துச் செயல்படுத்தியிருக்கிறோம்.

திருக்கோயில்களில் மாத ஊதியமின்றிப் பணியாற்றக்கூடிய அர்ச்சகர்கள், பட்டாச் சாரியார்கள், பூசாரிகளுக்கு ரூ.4,000/–, மருத்துவ முன்களப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை, காவலர் முதல் ஆய்வாளர் வரைக்கும் ரூ.5,000/– ஊக்கத் தொகை, திருநங்கையருக்கு நிவாரண உதவி அளித்திருக்கிறோம். கொரோனா தடுப்புப் பணியின்போது இறந்த மருத்துவர்கள், காவல்துறையினர் குடும்பத்தினருக்கு ரூபாய் 25 இலட்சம் நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

சென்னையில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பன்னோக்கு மருத்துவமனை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரையில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பெயரில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாபெரும் நூலகம் அமைக்கப்பட அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. ( மேசையைத் தட்டும் ஒலி ) தமிழ் எழுத்தாளர்களுக்கு “இலக்கிய மாமணி விருது” வழங்கப்படும் என்றும், அவர்கள் வசிப்பதற்கு அரசு சார்பில் வீடு வழங்க, “கனவு இல்லம்” என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. திருவாரூர் மாவட்டத்தில் 30 கோடி ரூபாய் செலவில் நெல் சேமிப்புக் கிடங்குகள், உலர்களங்கள் அமைக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழின் தலைசிறந்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களது நினைவைப் போற்றும் வகையில் கோவில்பட்டியில் சிலை அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

NEET தேர்வு தாக்கம் குறித்து ஆராய்வதற்காக ஓய்வு பெற்ற நீதியரசர் ஏ.கே.இராஜன் உயர்நிலைக்குழு, தொழிற்கல்வியில் பள்ளி மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்க ஓய்வுபெற்ற தலைமைநீதியரசர் முருகேசன் தலைமையில் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவிற்குப் பேராசிரியர் ஜெயரஞ்சன் உள்ளிட்ட 8 ஆளுமைகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பதினான்கு வகையான மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் 977 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன. அரியலூர், கடலூர் மாவட்டங்களில் ஓ.என்.ஜி.சி நிறுவனம் அனுமதி கேட்ட 15 எண்ணெய்க் கிணறுகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி )

மேட்டூர் அணை ஜூன் 12–ஆம் நாள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, 4,001 கிலோ மீட்டர் தொலைவிலான காவிரி கால்வாய்கள் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி )

தமிழ்நாட்டுக்குத் தேவையான 25 முக்கியக் கோரிக்கைகளோடு மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்து, அவற்றை விளக்கமாக எடுத்து வைத்திருக்கிறோம். மேகதாது அணை கட்டும் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று தெரிவித்து, கர்நாடக அரசுக்குக் கண்டனம் தெரிவித்தோம்.

டவ்–தே புயலில் காணாமல் போன 21 மீனவர்களின் குடும்பங்களுக்கு, தலா 20 இலட்சம்

ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. 'மின்னகம்' என்ற புதிய மின் நுகர்வோர் சேவை மையத்தைத் தொடங்கி வைத்திருக்கிறோம்.

அதுமட்டுமின்றி, மூன்று நாட்களுக்கு முன்பு ஆளுநரின் உரையின் மூலமாக ஏராளமான கொள்கை அறிவிப்புகளை செய்திருக்கிறோம். இந்த ஆட்சி, 'எதுவும் செய்யவில்லை' என்று கூறுபவர்களுக்கு இதுதான் என்னுடைய பதில்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஐம்பது நாட்களுக்குள் செய்திருக்கக்கூடிய மிக முக்கியமான சில சாதனைகளில் சிலவற்றைத்தான் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இவற்றை எதிர்க்கட்சிகள் வேண்டுமானால் மறைக்கலாம். ஆனால், மக்களுக்கு நிச்சயமாக நன்கு தெரியும்.

### நான்கின் பலத்தில் தி.மு.க நிற்கிறது

ஆளுநர் உரை குறித்துப் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே" என்பார்கள். இந்த அறிக்கையில் மணியோசையும் இல்லை. யானையும் இல்லை'' என்று சொன்னார்கள். யானை என்றுசொன்னதற்காகநான் அவரைப்பாராட்டுகிறேன். அடக்கப்பட்ட யானைக்குத்தான் மணி கட்டுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. என்பது யாராலும் அடக்க முடியாத யானை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான்கு கால்கள்தான் யானையினுடைய பலம். 'சமூக நீதி, சுயமரியாதை, மொழி–இனப்பற்று, மாநில உரிமை (மேசையைத் தட்டும் ஒலி) ஆகிய நான்கின் பலத்தில்தான் தி.மு.கவும் நிற்கிறது : (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசும் நிற்கிறது. ( மேசையைத் தட்டும் ஒலி ) இந்த ஆளுநர் உரையைப் படிப்பவர் கண்களுக்குச் சமூக நீதியும், சுயமரியாதையும், தமிழுக்கும். தமிழர்களுக்கும் நாங்கள் செய்ய இருக்கும் நன்மைகளும், மாநில உரிமைகளுக்கான எங்களது முழக்கங்களும் நிச்சயம் தெரியும்.

### தேய்ந்து ஓய்ந்து கிடக்கும் தமிழ்நாட்டின் கருவூலம்

தமிழ்நாட்டின் கருவூலம் எப்படித் திசைமாறி, உருமாறித் தேய்ந்து ஓய்ந்து கிடக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். அதைச் சீர்ப்படுத்துவதே எங்களுடைய முதல் வேலை. அதையெல்லாம் மனதில் வைத்துத்தான், இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் பேராசிரியர் ரகுராம் ராஜன் அவர்கள் உள்ளிட்ட பொருளாதார அறிஞர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்திருக்கிறோம். இன்றைய நிதி நிலைமையில், ஏழை எளிய, நடுத்தர மக்களும்,பாட்டாளிவர்க்கத்தினரும்வாழ்வாதாரத்தை இழந்து நிற்பதால், அவர்களுக்கு நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளித்து வருகிறோம். இருப்பதை எப்படிப் பெருக்குவது, பெருக்கியதை எப்படிப் பகிர்ந்தளிப்பது, மாநிலத்தின் வளத்தையும் நலத்தையும் எப்படிப் பேணுவது, உயர்த்துவது என்பதை ஆழ்ந்து, ஆராய்ந்து, "சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல்" செயலாற்றுவோம் என்ற என்னுடைய உறுதியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தான் கோருகிறேன். ( மேசையைத் தட்டும் ஒலி )

அவசரப்பட்டு ஆளுநர் உரையிலே ; அது இல்லையே இது இல்லையே என்றெல்லாம் சொன்னீர்கள். தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள வாக்குறுதிகள், ஆளுநர் உரையில் இடம் பெற்றுள்ளன. அவற்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

### வேளாண்மைக்குத் தனி நிதிநிலை அறிக்கை

வேளாண்மைக்குத் தனி நிதிநிலை அறிக்கை; (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் உழவர் சந்தைகள்; (மேசையைத்தட்டும்ஒலி)இந்திய அலுவல்மொழிகளில் ஒன்றாகத் தமிழ் இருக்க வேண்டும் ; ( மேசையைத் தட்டும் ஒலி ) சிறு, குறு தொழில்கள் மீட்டெடுப்பு; வட மாவட்டங்களில் தொழில் பெருக்கம், புதிய துணை நகரங்கள் : தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு நிறுவனங்களிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் தமிழர்களுக்கு முன்னுரிமை ; ( மேசையைத் தட்டும் ஒலி ); 69 விழுக்காடு இடஒதுக்கீட்டுக்குப் பாதுகாப்பு : ( மேசையைத் தட்டும் ஒலி ); மேகதாது அணைக்கு எதிர்ப்பு : கச்சத்தீவு மீட்பு : நீட் ரத்து : உள்ளாட்சித் தேர்தல் பட்டியலினத்தவர் பணியிடம் நிரப்புதல்; சென்னைப் பெருநகர வெள்ளநீர் மேலாண்மைக் குழு, திருக்கோயில்களின் பராமரிப்பைச் செம்மைப்படுத்த ஆலோசனை வழங்க மாநில அளவில் உயர்மட்ட ஆலோசனைக் குழு: பணிபுரியும் மகளிருக்கு மாவட்டந்தோறும் மகளிர் விடுதிகள்; சச்சார் குழுவின் பரிந்துரைகளை இந்த அரசு திறம்படச் செயல்படுத்தும், சேவைகள் உரிமைச் சட்டம் அறிமுகப்படுத்தப்படும்; நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை; பொருளாதாரத்தை மீட்க வல்லுநர் குழு; இப்படி எத்தனையோ அறிவிப்புகள் ஆளுநர் உரையில் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் தி.மு.க வின் தேர்தல்





முதல்வரின் கொரோனா
ஒழிப்புப் பணிகளில் சில


























அறிக்கையில் இருப்பவைதான். ஆளுநர் உரையிலே இருப்பதை எல்லாம் விடுத்து, இது இதெல்லாம் இல்லையே என்று ஆதங்கப்படுபவர்களுக்கு "திருச்சியிலே நின்றுகொண்டு, அங்கே இருக்கும் மலைக்கோட்டையையும் கரைபுரண்டோடும் காவிரியையும், கல்லணையையும் காணாமல், "தில்லை நடராசர் எங்கே ?" என்று கேட்பவர்களைப் பற்றி என்ன நினைப்பீர்கள் ?" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதையே நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி )

எங்களது பழைய கொள்கைகளுக்கு மாறுபாடு இருந்தால் சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு, 'அதைக் குறிப்பிடவில்லை இதைக் குறிப்பிடவில்லை' என்பது சரியான குற்றச்சாட்டாக இருக்க முடியாது. ஒரு புத்தகத்தில் அனைவருடைய பெயரும் இருக்க வேண்டுமென்று சொன்னால் அது டெலிபோன் டைரக்டரியாகத்தான் இருக்க முடியும் ( மேசையைத் தட்டும் ஒலி ) இந்த ஆளுநர் உரை என்பது, தி.மு.க அரசாங்கம் போகும் பாதையை டைரக்ட் பண்ணும் புத்தகம். ( மேசையைத் தட்டும் ஒலி ) இந்த உரை மீது கருத்து சொன்ன, ஆலோசனைகள் சொன்ன அத்தனை பேருக்கும், அதேபோல் நன்றி தெரிவித்துப் பாராட்டிய அத்தனை பேருக்கும், ஒருவேளை நன்றி தெரிவிக்க மறந்த அனைவருக்கும் நான் இந்த நேரத்தில் நன்றி சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல், ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ள முக்கிய கருத்துகளுக்குச் செயல்வடிவம் கொடுத்திடுவதற்கான சில அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன். கொரோனா நோய்த்தொற்று குறைந்துள்ளபோதும், அந்தத் தொற்றால்பாதிக்கப்பட்டு,குணமடைந்தவர்களுக்குச் சில பிரச்சினைகள் ( Complications ) வருவதாகப் பலரும் தெரிவித்துள்ளனர்; தொடந்து தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தொடர்ந்து கிசிச்சை பெறுவதற்கு, அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் சிறப்புச் சிகிச்சை மையங்கள் (Post-Covid Clinics) தொடங்கப்படும். தேவைப்படும் உயர் சிகிச்சை மருத்துவர்களோடு (Specialist Doctors) இந்த மையங்கள் செயல்படும்.

## இளைஞர்களுக்கும் மகளிர்க்கும் வேலை வாய்ப்புகள்

நம் இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் தகுந்த வேலைவாய்ப்பு கிடைப்பதே அவர்களின் முன்னேற்றத்திற்கும் நம் தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமையும் என நான் உறுதியாக நம்புகிறேன். இந்த நோக்கத்தோடுதான் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள வட மாவட்டங்களில் அதிக வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடிய தொழிற்சாலைகளை அமைப்போம் என்று அறிவித்திருக்கிறோம். இதன் முதற்கட்டமாக, செய்யாறில் 12,000 பேருக்கும், திண்டிவனத்தில் 10,000 பேருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய பெரும் தொழிற்சாலைகள் அமையவுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

## வழக்குகள் திரும்பப் பெறப்படும்

கடந்த ஆட்சியில் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக ஊடகங்கள்மீது அரசு தொடர்ந்த வழக்குகள், மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராகப் போராடிய விவசாயிகள் மீதான வழக்குகள், குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகப் போராடியவர்கள் மீதான வழக்குகள், மீத்தேன் – நியூட்ரினோ – கூடங்குளம் அணு உலை, சேலம் எட்டுவழிச் சாலை ஆகிய திட்டங்களுக்கு எதிராக அறவழியில் போராடிய மக்கள் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படும். ( மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்றத்தாழ்வை இடித்து, சமூகத்தைச் சமப்படுத்தப் போராடிய தந்தை பெரியார் பெயரால் 240 சமத்துவபுரங்களைக் கட்டினார் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சமத்துவபுரங்கள் சரியாகப் பராமரிக்கப்படாத அவல நிலையில் இப்போது இருக்கின்றன! அந்தச் சமத்துவபுரங்கள் உடனடியாகச் சீரமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், திருக்கோயில்களின் புனரமைப்புக்காக 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்ற வாக்குறுதி இருந்தது. அதற்கு முதற்கட்டமாக இந்த நிதியாண்டில் 100 கோடி ரூபாய் செலவில் திருக்கோயில்களைத் தொன்மைமாறாமல் புதுப்பிக்க, (மேசையைத் தட்டும் ஒலி) திருக்குளங்களைச் சீரமைத்திட,

திருத் தேர்களைப் புதுப்பித்துத் திருவிழாக்கள் நடத்திடத் தேவையான பணிகள் 100 திருக்கோயில்களில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர், ஆளுநர் உரையைப் பலபடப் பாராட்டிப் போற்றிப் புகழ்ந்தும், ஒரு சிலர்–குறிப்பாக எதிர்க்கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் குறைகள் எனச் சிலவற்றைச் சுட்டிக்காட்டியும் பேசியிருக்கிறார்கள். ஆளுநர் உரையில் எதுவுமே இல்லை என்பதைப் போலப் பேசுவது உண்மையான நிலை என்று ஆகிவிடாது; மக்களும் அப்படிக் கருதிவிட மாட்டார்கள் ; அவர்கள் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அதிகாரிகளிடையே நான் பேசும்போது முதல் கூட்டத்திலேயே சொன்னேன். "எனக்குப் புகழுரை வேண்டாம்; உண்மைகளைச் சொல்லுங்கள்" என்று வலியுறுத்தியிருக்கிறேன். அப்படி நான் சொன்னது ஆக்கபூர்வமான கருத்துகளை எடுத்துரைக்க வேண்டும் என்கிற அந்த நல்லெண்ணத்தில்தான். ஆனால், நிறைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, இல்லாத குறைகளை உருவாக்கி, ஓங்கி உரைப்பது ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு வழிகாட்டுவது ஆகாது. எனினும், எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் குறைகளைத் தேடிக் கண்டுபிடித்துச் சொல்லத்தான் செய்வார்கள்; அதனால்தான் அவர்கள் எதிர்க்கட்சி; மாற்றுக் கருத்துகளை – வேறுபட்ட எண்ணங்களை வெளிப்படுத்த ஜனநாயகம் இடமளித்திருக்கிறது. புகழுக்கு மயங்கவும் மாட்டேன். குறைகூறுவதால் குன்றிவிடவும் மாட்டேன். ( மேசையைத் தட்டும் ஒலி ) ஏனென்றால், இரண்டையுமே அதிகளவு எனது வாழ்க்கையில் நான் பார்த்துவிட்டேன். ( மேசையைத் தட்டும் ஒலி ) புகழுரைகள், என்னை அதிகளவு அடக்கமானவனாகவும், புகழ்ந்துரைக்கும்போது அது என்னை மேலும் பக்குவப்படுத்துவதற்கும் நான் பயன்படுத்துவேன். எச்சரிக்கை உள்ளவனாகவும் அது ஆக்கி இருக்கிறது. ஏன், என்மீது இதுவரை சொல்லப்பட்ட பழிகள், அவமானங்கள் ஆகியவை என்னை மேலும்மேலும் உழைக்கவும், உண்மையாக இருக்கவும்தான் தூண்டுகின்றன. ( மேசையைத் தட்டும் ஒலி ) அப்படித்தான் நான் பயன்படுத்தப் போகிறேன்.

ஏனெனில், இந்த மன்றத்தில் வைக்கப்பட்ட புகழுரை, இகழுரை இரண்டையும் எனக்கான உரமாகவே கொண்டு எனது அரசியல் பயணத்தை நான் தொடர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மாபெரும் தலைவரின் மகனாக இருந்தாலும், அந்தப் பகட்டோடு நான் என்றைக்கும் நடந்துகொண்டது கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தலைவருக்குக் கடைசித்தொண்டனாகத்தான்நான்நடந்துகொண்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது எனது இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தெரியும்; அந்தத் தலைவருக்கும் தெரியும்.

என்னுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் அந்த அன்புத் தலைவர், வங்கக் கடலோரத்தில் அல்ல; கோடிக்கணக்கான மக்களுடைய இதயத்தில் குடி கொண்டிருக்கிறார். ( மேசையைத் தட்டும் ஒலி ) முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் மறைவுக்குப் பிறகு அவர் இடத்தில் தலைமைத் தொண்டனாகத்தான் நான் உட்கார்ந்திருக்கிறேனே தவிர, பேரறிஞர் அண்ணாவின் இடத்தில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் இடத்தில் உட்கார்ந்துவிட்டேன் என்ற கர்வம் எனக்கு ஒரு துளியும் கிடையாது. ; ( மேசையைத் தட்டும் ஒலி ) இன்றல்ல ; அது என்றும் இருக்காது. ( மேசையைத் தட்டும் ஒலி )

இத்தகைய மனநிலை கொண்ட நான் இந்த அவைக்குச் சொல்ல விரும்புவது, அரசியல் எல்லைகளைக் கடந்து, விருப்பு வெறுப்புகளைக் கடந்து, தமிழ்நாட்டு மக்களுக்காக நம்மை நாமே ஒப்படைத்துக் கொள்வோம் என்பதுதான் !

ஆறாவது முறையாக, கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல், தமிழ்நாட்டு மக்களுக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும் அளித்திடும் வகையில் எப்படி நானும், அமைச்சர் பெருமக்களும் ஓயாது, ஓடியாடிப் பணியாற்றிக் கொண்டிருக்கிறோமோ, இதையெல்லாம் இந்த நாடறியும் ! நல்லவர்கள் அறிவார்கள் !

நோபல் பரிசு பெற்ற அபிஜித் பானர்ஜி முதல் 'இந்து'என்.ராம் வரை ; பொருளாதார நிபுணர் கவுசிக் பாசு, ஒன்றிய அரசின் முன்னாள் நிதி அமைச்சரும் பொருளியல் சிந்தனையாளருமான ப.சிதம்பரம் தொடங்கி, நடுநிலை நாளேடுகள் மற்றும் இதழ்கள் வரை, கழக அரசு குறுகிய காலத்தில் நிகழ்த்தியிருக்கக்கூடிய இந்தச் சாதனைகளை




GASTRO
LIVER CLINIC


தமிழ்நாடு அரசு
GOVERNMENT OF TAMIL NADU





தமிழ்நாடு அரசு
GOVERNMENT OF TAMIL NADU












கீழடி - முக்கியத்துவம்
கீழடி - முக்கியத்துவம்


அரசின் ஓய்விலாப் பணிகள்
Inclusion is not an Option




மகளிர் மேம்பாட்டு நிறுவனம் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
நலத்திட்ட உதவிகள்
தலைமை


மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை
இன்னுயிர் காப்போம் திட்டம்
தொடங்கி








வரவேற்றுப் பாராட்டியிருக்கிறார்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) கழக அரசின் சாதனைகளுக்கு அவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் மனமுவந்து வழங்கியிருக்கிறார்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் எல்லாம் என்னுடைய நன்றிக்குரியவர்கள்!

எங்களைப் பொறுத்தவரையில், தேர்தல் கால வாக்குறுதிகளை வாக்குகளை, ஈர்ப்பதற்கான காந்தம் எனக் கருதாமல், நாட்டின் மேம்பாட்டுக்கு, நாட்டு மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உறுதியாகச் செய்தே தீர வேண்டிய செயல்கள் என்றே நாங்கள் கருதுகிறோம்; "சொன்னதைச் செய்வோம். செய்வதைச் சொல்வோம்" (மேசையைத் தட்டும் ஒலி) என்பது, முத்தமிழறிஞர் கலைஞர் எங்களுக்குத் தந்த ஆரம்பக் கல்வி அது. கழகம் மகத்தான வெற்றி பெற்று ஆறாவது முறை ஆட்சி அமைக்கக் காரணமான தமிழ்நாட்டு மக்களை இருகரம் கூப்பி, என்னுடைய தலை தாழ்த்தி, எனது பணிவு அனைத்தையும் ஒருங்கே திரட்டி மீண்டும் வணங்குகிறேன்; மனமும், வாயும் மணக்க மணக்க, பல்லாயிரம் முறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றத்தைப் படைத்த தமிழ்நாட்டு மக்களை மறந்துவிட முடியுமா? இராமலிங்க அடிகள் மனம் உருகிச் சொன்னதைப் போல,

**"பெற்ற தாய்தனை மக மறந்தாலும்,**
**பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்,**
**உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்,**
**உயிரை மேவிய உடல் மறந்தாலும்,**
**கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்,**
**கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும்"**

எங்கள் இதயத்தின் இயங்கு சக்தியாக இருக்கும் தமிழ்நாட்டு மக்களை என்றைக்கும் நாங்கள் மறக்க மாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆறாவது முறையாக அமைந்துள்ள கழக ஆட்சியின் முதலாவது ஆளுநர் உரை என்பதால், அரசியல், கட்சி, இந்த வேறுபாடுகளை எல்லாம் மறந்து, குறை எதுவும் இருப்பின் பொருட்படுத்தாமல், அதையும் மறந்து, மாண்புமிகு உறுப்பினர் திரு.உதயசூரியன் அவர்கள் முன்மொழிந்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள் வழிமொழிந்த இந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை அனைவரும் ஆதரித்து, புதியதொரு வரலாறு படைத்திடும் எனது முயற்சிக்கு ஊக்கமளித்திடுவீர் என்று அன்புடன், பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிற அதேநேரத்தில், மக்களுக்குப் பணியாற்ற வேண்டியது ஓர் அரசினுடைய கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு இந்த மாமன்றத்தில் கூடியிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இந்த விளக்கங்களுக்குப் பிறகு என்னுடைய விளக்கங்களை ஏற்று நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது திருத்தங்களைக் கொடுத்துள்ள உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டும் எனக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி! வணக்கம்! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)




# அருந்ததியர் சமுதாயம் சார்ந்த முதல் பேரவைத் தலைவர் திரு. ப.தனபால் அவர்களைப் பாராட்டுகிறேன்


செல்வி ஜெ.ஜெயலலிதா

## மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் 10.10.2012 அன்று பேரவையில் ஆற்றிய உரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் ப.தனபால் அவர்களே, ஜனநாயகம் என்பது பண்பட்டதும், பயனுடையதும், ஆற்றல் மிகுந்ததும், அருமை வாய்ந்ததுமான ஆட்சி முறையாகும். ஆள்பவர், ஆளப்படுபவர் என்ற பேதம் இல்லாமல், நாட்டிலுள்ள அனைவரின் நன்மையையும், முன்னேற்றத்தையும் குறிக்கோளாகக் கொண்டதுதான் ஜனநாயகம் ஆகும். ஜனநாயகத்தில் மக்கள்தான் அரசின் கொள்கைகளைத் தீர்மானிக்கின்றனர். இப்படிப்பட்ட உயரிய ஜனநாயக ஆட்சியில் சுதந்திரமாகக் கருத்துகளைப் பிரதிபலிக்கும் இடமாக இந்தச் சட்டமன்றம் திகழ்கின்றது.

வரலாற்றுச் சிறப்பும், பெருமையும் கொண்டு விளங்குகிற இந்தப் பேரவையின் தலைவராகத் தாங்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு எனது பாராட்டினை நான் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவில் உள்ள பல அரசியல் தலைவர்களும் பாராட்டும் அளவிற்குச் சிறந்து விளங்கும் இந்தப் பேரவையில் தாங்கள் பேரவைத் தலைவராக வீற்றிருப்பது கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப் பேரவை வேற்றுமையில் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும் என்பதன் அடிப்படையிலேயே தாங்களும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறீர்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராகத் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், இந்த நிமிடம் முதல் அவையில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் கட்சி வேறுபாடின்றி நியாயமான தீர்ப்பினை வழங்கக்கூடிய பொறுப்பினைத் தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தாங்கள் இங்குள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் பொதுவானவர். இங்குள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் பாதுகாவலராகத் தாங்கள் விளங்குகின்றீர்கள். சட்டமன்ற வரலாற்றிலேயே சட்டமன்ற விதிகளையும், மரபுகளையும் கரைத்துக் குடித்தவர் திரு.ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் என்று சொல்வார்கள். ''மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது'' என்ற பழமொழிக்கேற்ப, தோற்றத்திலே சிறியவராக இருந்தாலும், அவையை நடத்துவதிலும், ஆங்கிலத்தில் உரையாடுவதிலும்



கைதேர்ந்தவர்; மிகச் சிறந்த பேரவைத் தலைவர் என அனைத்துக் கட்சியினராலும் பாராட்டப் பெற்றவர்.


அவரைப் போன்றே, டாக்டர் யு.கிருஷ்ணா ராவ் அவர்களும் நடுநிலையோடு செயல்பட்டார். 1957 முதல் 1962 வரை பேரவைத் தலைவராக இருந்தார். அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவரைப் பாராட்டுகையில், "நான் அந்த ஐந்து வருடங்களில் – பெருமையோடு சொல்லிக் கொள்வேன் – எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்தாலும், அப்போது சட்டமன்றத் தலைவராக இருந்த மறைந்த டாக்டர் யு.கிருஷ்ணா ராவ் அவர்கள், எதிர்க்கட்சியில் இருந்த நாங்கள் யாரும் வருத்தப்படத்தக்க விதத்தில் ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை" என்று கூறினார். அந்த அளவுக்கு நடுநிலைமையுடன் செயல்பட்டவர் டாக்டர் யு.கிருஷ்ணா ராவ் அவர்கள்.

சட்டமன்ற ஜனநாயகம் என்பது, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு அவற்றை முழு அளவில் உறுதிப்படுத்தும் ஒரு சீரிய அமைப்பாகும். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களது ஜனநாயகக் கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும். உண்மையை உரைப்பவர்களாகவும், உரிமைக்குக் குரல் கொடுப்பவர்களாகவும், மாற்றாரை மதிக்கும் தன்மை கொண்டவர்களாகவும், நியாயத்திற்குத் தலை வணங்குகிறவர்களாகவும் சட்டமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் அமைய வேண்டும்.

பொதுவாக சட்டமன்றத்திலே பொதுப் பிரச்சினைகளான வறுமை ஒழித்தல், வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல், குடிநீர் வசதிகள் செய்து தருதல், உற்பத்தியைப் பெருக்குதல், பொருளாதாரத்தை மேம்படுத்துதல், தொழில் வளத்தைப் பெருக்குதல், வாழ்வில் மக்களை முன்னேற்றம் அடையச் செய்தல் ஆகியவற்றைப் பற்றி உறுப்பினர்களிடையே கருத்தொற்றுமை உண்டு. இந்தக் கொள்கைகளில் ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் எந்தவித வேறுபாடும் இருக்க முடியாது. அதேசமயத்தில் அதை நிறைவேற்றுகின்ற முறையில், திட்டங்களின் வடிவமைப்பில் வேறுபாடுகள் இருப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இவ்வாறு ஒருமனதாக, அதாவது unanimous ஆக முடிவெடுக்க முடியாத சூழ்நிலையில், வேறுபாட்டினை ஒற்றுமையின் அடிப்படையில்; உடன்பாட்டின் அடிப்படையில்; அதாவது consensus இன் அடிப்படையில் களைவதுதான் சிறந்த ஜனநாயக முறையாக இருக்கும். இல்லையெனில், ஜனநாயகம் செயலிழந்து, பேச்சு சுதந்திரம் மட்டுமே மிஞ்சியிருக்கும். எனவே, ஜனநாயகம் தழைத்தோங்கும் வகையில் உறுப்பினர்களின் செயல்பாடுகள் அமைய வேண்டும் என்பதை இந்தத் தருணத்தில் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய தாங்கள் சாதாரண ஏழை விவசாயக் குடும்பத்தில், பின்தங்கிய பகுதியில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து, முதுகலைப் பட்டம் பெற்றவர். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, தமிழக சட்டமன்ற வரலாற்றில் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த முதல் பேரவைத் தலைவர் தாங்கள்தான் என்பதிலும், முதன் முறையாக அருந்ததியர் சமுதாயத்தைச் சார்ந்த தாங்கள் இந்தப் பேரவையின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளீர்கள் என்பதிலும் எனக்கு மிக்க மகிழ்ச்சி. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றத்தில் தாங்கள் வரலாறு படைத்திருக்கிறீர்கள்.

வீணையிலிருந்து சரியான இசை வரவேண்டும் என்றால், அதனுடைய தந்திகள், அதாவது வீணையின் நரம்புகள் இறுக்கமாகவும் இல்லாமல், தளர்வாகவும் இல்லாமல் நடுநிலைமையில் இருக்க வேண்டும். அதுபோல், இந்த அவை சீரோடும், சிறப்போடும் நடைபெற வேண்டுமென்றால் அதற்கு இன்றியமையாததாக விளங்குவது நடுநிலைமை. அப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இந்த நடுநிலைமை தங்களிடம் இயற்கையாகவே அமைந்துள்ளதால், இந்த அவையைச் சீரோடும், சிறப்போடும் தாங்கள் நிச்சயம் நடத்துவீர்கள் என்ற நம்பிக்கையினைத் தெரிவித்துக்கொண்டு, தங்களுடைய தலைமையின் கீழ் இந்தப் பேரவையின் கண்ணியம் மேலும் சிறப்புறும் என்று சொல்லி, அனைவரின் பாராட்டுதல்களுக்கும் உரியவரான தங்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.



सत्यमेव जयते

**SHARAD PAWAR**
Member of Parliament
(Rajya Sabha)

3rd August, 2021

I have received your letter regarding the Centenary Celebrations of the Tamil Nadu Legislature.

My hearty congratulations to Tamil Nadu Legislature for completing 100 years. Tamil Nadu Legislature has weathered through challenging political, social changes but still managed to stay strong on the principle of elections. This symbolises and reinforces the spirit of democracy that India embodies. I extend my best wishes to the Government and people of Tamil Nadu once again.

With regards,

Yours Sincerely

**(SHARAD PAWAR)**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 75–வது சுதந்திரத் திருநாளையொட்டி 15–8–2021 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்திடும் காட்சி.

# இந்தியத் திருநாட்டை வழிநடத்திடக் கிடைத்த ஒப்பற்ற ஆயுதம் காந்தியச் சிந்தனைகள் !

**மாண்புமிகு மு.க. ஸ்டாலின்**
**தமிழ்நாடு முதலமைச்சர்**

## 15.8.2021 அன்று கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து நிகழ்த்திய சுதந்திரத் திருநாள் உரை

தாயின் மணிக்கொடி பாரீர் – அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!
ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் – அதன்
உச்சியின் மேல் வந்தே மாதரம் என்றே
பாங்கின் எழுதித் திகழும் – செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர் !
கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர் – எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம் !
நம்பற்குரியர் அவ்வீரர் – தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பீர் !

நானூறு ஆண்டுகள் பழைமை கொண்ட இந்தக் கோட்டையில் இந்திய நாட்டின் மூவண்ணக் கொடியை ஏற்றி வைக்க தங்களது உயிரையும் இரத்தத்தையும்– வாழ்க்கையையும் செயல்பாட்டையும் வழங்கிய இந்த நாட்டின் தியாகிகள் அனைவருக்கும் நான் எனது வீர வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

இந்த மாட்சிமை பொருந்திய கோட்டையில் விண்முட்ட அமைந்துள்ள கம்பத்தில் கொடியேற்றும் வாய்ப்பினை எனக்கு வழங்கிய தமிழ்நாட்டு மக்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே!

சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அவர்களே! நீதியரசர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே!

காவல்துறைத் தலைவர் உள்ளிட்ட காவல் அதிகாரிகளே!

சிறப்பு விருந்தினர்களே!

சுதந்திரப் போராட்டத் தியாகிகளே!

அவர்களது குடும்பத்தினரே!

மாணவச் செல்வங்களே! வணக்கம்!

இந்தியா தனது 75–ஆவது சுதந்திர நாளைக் கொண்டாடும் மகத்தான இப்பொழுதில், கோட்டைக் கொத்தளத்தில் கொடியேற்றும் மாபெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை நினைத்து மகிழ்கிறேன். சுதந்திர நாளன்று யார் முதலமைச்சராக இருக்கிறார்களோ, அவர்கள்தான் கொடி ஏற்ற வேண்டும் என்ற சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 15–8–2021 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் 75வது சுதந்திரத் திருநாளையொட்டி நடைபெற்ற அணிவகுப்பினைப் பார்வையிட்டார்கள்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 15–8–2021 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில் 75வது சுதந்திரத் திருநாளையொட்டி நடைபெற்ற காவல்துறை அணிவகுப்பு மரியாதையை ஏற்றார்கள்.

ஆகஸ்ட்–15 சுதந்திர நாளன்று முதலமைச்சரும், ஜனவரி–26 குடியரசு நாளன்று ஆளுநரும் கொடியேற்றலாம் என்ற ஆலோசனையை அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அதனை ஏற்றுக்கொள்ள வைத்தவர் நம்முடைய தலைவர் கலைஞர். 15.8.1974 அன்று முதன்முதலாக இந்தக் கோட்டையில் ஒரு முதலமைச்சராகக் கொடியேற்றினார் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். அதன்பிறகு எத்தனையோ முதலமைச்சர்கள் வந்தாலும், அவர்களுக்கும் கொடியேற்றும் வாய்ப்பைப் பெற்றுத் தந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டு முதலமைச்சர்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவின் அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் அந்த உரிமையைப் பெற்றுக் கொடுத்த மாபெரும் சுதந்திரச் சிந்தனையாளர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அவரை வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன்.

இன்று, இந்தியச் சுதந்திரத்தின் 75–ஆவது ஆண்டு விழாவை நாம் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். இது மட்டுமல்ல, இன்னும் ஏராளமான பெருமைகள் இந்த ஆண்டுக்கு உண்டு. தமிழ்நாடு சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவினை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களை அழைத்துச் சில நாட்களுக்கு முன்னால் நடத்தினோம்! திராவிட இயக்கத்தின் ஆணிவேராகத் திகழ்ந்த நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்ததன் நூற்றாண்டு விழாவும் இந்த ஆண்டுதான்! தென்னாப்பிரிக்காவில் இருந்து திரும்பிய மகாத்மா காந்தி அவர்கள், மதுரைக்கு வருகை தந்தபோது ஏழைத் தமிழ் மக்களைப் பார்த்துத் தமது உயர்ரக ஆடையைக் களைந்து அரையாடையை உடுத்தத் தொடங்கியதன் நூற்றாண்டும் இந்த ஆண்டுதான்! செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன்என்றெல்லாம் போற்றப்படும் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு 150–ஆவது பிறந்தநாள் கொண்டாட இருப்பதும் இந்த ஆண்டு தான்! சுதந்திரம் அடைவதற்கு முன்னதாகவே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று பாடிய மகாகவி சுப்பிரமணிய பாரதி மறைந்து 100 ஆண்டுகள் ஆகிறது இந்த ஆண்டோடு! இப்படி எவ்வளவோ வரலாற்றுப் புகழ் பெற்ற ஆண்டாக இந்த 2021 அமைந்துள்ளது!

தனிப்பட்ட முறையில் எனக்கு ஏற்படும் பெருமிதம் என்னவென்றால் நமது அரசு ஆறாவது முறையாக ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்து இருக்கிறது. எனது பொது வாழ்க்கையில் அரை நூற்றாண்டு காலம் உழைத்த நான், அப்படி உழைத்த நான் தமிழ்நாட்டு மக்களால் முதலமைச்சராக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளேன் என்ற மகிழ்ச்சியுடன் இந்த விழாவில் நான் கலந்து கொண்டிருக்கிறேன்.

75 – ஆவது சுதந்திர நாளை நினைவுகூரும் வகையில் மிகப்பெரிய தூணை இன்று உருவாக்கி இருக்கிறோம். அது வெறும் கல்லாலும் சிமெண்டாலும் செங்கல்லாலும் கட்டப்பட்டது அல்ல. நம்முடைய விடுதலைப் போராட்ட வீரர்களின் ரத்தத்தால், எலும்பால், சதையால் உருவாக்கப்பட்டதுதான் அந்தத் தூண்!

சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், அதற்கு 150 ஆண்டுகளுக்கு முன்னதாகவே விடுதலைக்காகப் போராடிய மண்தான் நம்முடைய தமிழ் மண்.

பூலித்தேவர், வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், தளபதி சுந்தரலிங்கம், ஊமைத்துரை, தீரன் சின்னமலை, சின்ன மருது, பெரிய மருது, வ.உ.சி., மகாகவி பாரதி, சுப்பிரமணிய சிவா, டி.எஸ்.எஸ்.ராஜன், தில்லையாடி வள்ளியம்மை, தந்தை பெரியார், திரு. வி.க., நாமக்கல் ராமலிங்கம், ம.சிங்காரவேலர், பாரதிதாசன், பசும்பொன் முத்துராமலிங்க தேவர், திருப்பூர் குமரன், ராஜாஜி, காமராசர், ஏ.எம். ஈஸ்வரன், ஓமந்தூர் ராமசாமி, ஜீவா, கேப்டன் லட்சுமி, ம.பொ.சிவஞானம், கே.பி. சுந்தராம்பாள்

இத்தகைய தமிழ்நாட்டுத் தியாகிகளின் மூச்சுக்காற்றைக் கொண்டு கட்டப்பட்டதுதான் இந்த நினைவுத் தூண்.

இந்திய விடுதலைப் போராட்டத்துக்குத் தமிழ்நாடு அளித்த பங்களிப்பு குறித்த முழுமையான ஆவணம் ஒன்றைத் தயாரித்து தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடும் முயற்சியைத் தமிழ்நாடு அரசு உறுதியாகச் செய்யும். நான் சொன்ன தியாகிகள், தமிழ்நாட்டுத் தியாகிகள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்தியாவின் தியாகிகள். விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு, நமது நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட தியாகிகளுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் உதவிகள் வழங்குவதில் தமிழ்நாடு அரசு எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது. அந்த வகையில், மாநில அரசால் விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்படும்







மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 75–வது சுதந்திரத் திருநாளையொட்டி 15–8–2021 அன்று சென்னை, தலைமைச் செயலகக் கோட்டைக் கொத்தளத்தில் முதன்முறையாகத் தேசியக் கொடியினை ஏற்றி வைத்துச் சுதந்திரத் திருநாள் சிறப்புரையாற்றுதல்.

ஓய்வூதியத் தொகை 17 ஆயிரம் ரூபாயில் இருந்து 18 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும். குடும்ப ஓய்வூதியத் தொகை 8,500 ரூபாயில் இருந்து 9 ஆயிரம் ரூபாய் ஆகவும் உயர்த்தப்படும் என்பதை இந்த வேளையில் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டு விடுதலைப் போராட்ட தியாகிகளை நினைவு கூர்வதில் நமது அரசு எப்போதும் தவறியது இல்லை.

சீன நாட்டால் இந்தியாவுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டபோது 1962 – ஆம் ஆண்டு, இந்திய நாட்டின் பாதுகாப்பே முக்கியம் என்று அறிவித்து நிதியை திரட்டிக் கொடுத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்! 1971–ஆம் ஆண்டு இந்தியாவைப் பாகிஸ்தான் அச்சுறுத்தியபோது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் பாகிஸ்தான் படையெடுப்புக் கண்டனத் தீர்மானம் போட்டவர் முதல்வர் கலைஞர் அவர்கள்! அதோடு நில்லாது அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் நாட்டுப் பாதுகாப்புக்காக ஆறுகோடி ரூபாய் நிதி வழங்கியவர் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள்!

அப்போது அனைத்து மாநிலங்களும் வழங்கிய தொகை மொத்தம் 25 கோடி ரூபாய்! அதில் 6 கோடி ரூபாயை வழங்கியது திமுக அரசு!

* அந்தப் போரில் வீரமரணம் அடைந்த ராணுவ வீரர்களுக்கு நிதியும் நிலமும் வழங்கிய அரசு கலைஞரின் அரசு! 1999 – ஆம் ஆண்டு கார்கில் போரின்போது அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் மூன்று தவணைகளாக மொத்தம் 50 கோடி ரூபாய் வழங்கிய அரசு முதல்வர் கலைஞரின் அரசு! * பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்குகோட்டை! * பாரதியின் இல்லம் அரசு இல்லம் ஆனது! * காமராசர் மணிமண்டபம்! * இராஜாஜி நினைவாலயம்! * தில்லையாடி வள்ளியம்மாள் மணிமண்டபம்! * வ.உ.சி. இழுத்த செக்கு நினைவுச் சின்னம் ஆனது! விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இலவசப் பேருந்து பயணம் * தியாகிகள் மணிமண்டபம் * சுதந்திரப் பொன் விழா நினைவுச் சின்னம்! * பூலித்தேவன் நினைவு மண்டபம்! * தியாகி விஸ்வநாத தாஸ் வாழ்ந்த இல்லம் புதுப்பிப்பு! * மாவீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு வீடு! * நேதாஜிக்குச் சிலை! * கக்கனுக்குச் சிலை! * சிப்பாய்க் கலகத்துக்கு நினைவுத்தூண்!

இப்படி நாட்டுக்காக உழைத்த தியாகிகளை நமது அரசு எப்பொழுதும் போற்றி வருகிறது. அந்த வரிசையில் தியாகத்தின் திருவுருவான வ.உ.சி.

அவர்களின் 150–ஆவது பிறந்தநாளை அரசு சார்பில் எழுச்சியோடும் உணர்ச்சியோடும் கொண்டாடத் திட்டமிட்டுள்ளோம்.


வெள்ளையருக்கு எதிராகக் கப்பல் விட்டவர் வ.உ.சிதம்பரனார் அவர்கள். சுதேசி என்பது ஏட்டளவில் மட்டுமல்ல, நம்முடைய சிந்தனையாக, செயலாக மாற வேண்டும் என்று நினைத்தவர் வ.உ.சி.அவர்கள். அரசியல் விடுதலை மட்டும் போதாது பொருளாதார விடுதலையும் வேண்டும் என்று நினைத்தவர். அனைத்து விதத்திலும் தன்னிறைவு பெற்ற நாடாக நாம் மாற வேண்டும் என்று வ.உ.சி. அவர்கள் கனவு கண்டார்கள்.

அத்தகைய கனவைக் கொண்ட அரசாக நமது அரசு செயல்பட்டு வருகிறது. "எல்லார்க்கும் எல்லாம் என்ற திசை நோக்கிச் செல்லட்டும் இந்த வையம்" என்பதைப் போன்ற பொற்காலத்தை உருவாக்க உறுதி கொண்டுள்ளது இந்த அரசு.

கொரோனா என்ற பெருந்தொற்றுக் காலமானது நமக்கு ஏராளமான படிப்பினைகளைக் கொடுத்திருக்கிறது. மருத்துவ நெருக்கடி, மனநல நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, சூழல் நெருக்கடி எனப்பல்வேறு நெருக்கடிகளுக்குஇடையில்மக்களைக் கொண்டுபோய் நிறுத்திவிட்டது கொரோனா. இதிலிருந்து மக்களை மீட்பதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. இந்த முயற்சிகளுக்கு அடித்தளமான மருத்துவர்கள், செவிலியர்கள், முன்களப் பணியாளர்கள், அரசின் நிர்வாகத்தின் அனைத்து அலுவலர்கள் அனைவரையும் இந்த நாளில் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இந்தளவுக்கு மக்கள் மீண்டுவர உங்களது அர்ப்பணிப்புதான் காரணம்.

தமிழ்நாடு முதலமைச்சராக நான் பொறுப்பேற்றதிலிருந்து இன்று 101–ஆவது நாள். தமிழ்நாடு அரசின் நிதி நிலை தொடர்பான வெள்ளை அறிக்கையையும், 2021–22–ஆம் ஆண்டுக்கான தமிழக நிதி நிலை அறிக்கையையும் தாக்கல் செய்த நிலையில், தமிழ்நாட்டின் நிதி நிலையை தமிழக மக்கள் நன்கு அறிந்திருக்கக் கூடும். இத்தகைய நிதிச் சுமையோடு முதலமைச்சராக முதன்முறையாகப் பொறுப்பேற்ற இந்த அரசு கொரோனா என்கிற கொடிய நோய்த் தொற்றை மேலாண்மை செய்து மக்களைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில், பல்வேறு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி, அதில் வெற்றியும் கண்டிருக்கிறது.

- கொரோனாவாலும் ஊரடங்காலும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் 4 ஆயிரம் ரூபாய் இரு தவணைகளில் வழங்கப்பட்டது, 14 அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய மளிகைத் தொகுப்பு வழங்கப்பட்டது.
- கொள்முதல் விலையைக் குறைக்காமல், ஆவின் பாலின் விற்பனை விலை லிட்டருக்கு மூன்று ரூபாய் குறைப்பு.
- பெட்ரோல் விலை மூன்று ரூபாய் குறைப்பு.
- மகளிர், திருநங்கையர், மாற்றுத் திறனாளிகளுக்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம்.
- தேர்தல் பரப்புரையின்போது பெறப்பட்ட மனுக்களுக்கு "உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை" மூலமாகத் தீர்வு காணப்பட்டுள்ளது.
- திருக்கோவில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை.
- அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக நியமனம்.
- தமிழ்நாட்டுக்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்த "தகைசால் தமிழர்" என்ற பெயரில் புதிய விருது உருவாக்கப்பட்டு, இளம் வயது முதல் தற்போது வரை பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பல்வேறு தியாகங்களைச் செய்த மாபெரும் பொதுவுடைமைப் போராளியும் முதுபெரும் தலைவருமான திரு.சங்கரய்யா அவர்களுக்கு இந்த ஆண்டு வழங்கப்பட்டு இருக்கிறது.
- போதிய திரவ ஆக்சிஜன், ஆக்சிஜன் படுக்கைகளைக் குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்து காட்டியிருக்கிறோம்.
- 3 கோடி மக்களுக்குக் கொரோனா தடுப்பூசி செலுத்தியிருக்கிறோம். தடுப்பூசி வீணடிக்கப்பட்ட நிலையை மாற்றிக் கூடுதல் தடுப்பூசிகள் செலுத்தி இந்தியாவுக்கே முன்மாதிரி மாநிலமாகத் தமிழ்நாட்டை மாற்றியுள்ளோம்.



மாண்புமிகு முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின் அவர்கள்
திறந்து வைத்த
75ஆம் ஆண்டு
சுதந்திரத் திருநாள்
நினைவுத்தூண்



- உலகத்தரத்தில் புதிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கிண்டி கிங் நோய்த் தடுப்பு வளாகத்தில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது.
- தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகள், சிகிச்சைகள், மருந்துகள், இயன்முறைச் சிகிச்சை உள்ளிட்ட மருத்துவச் சேவைகளை நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று வழங்கும் முன்னோடித் திட்டமான "மக்களைத்தேடி மருத்துவம் தொடங்கப்பட்டுள்ளது".

அமைச்சரவைக் கூட்டமாக இருந்தாலும், அரசுக்கு ஆலோசனை சொல்வதற்காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழுக் கூட்டமாக இருந்தாலும் ஒன்றை நான் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறேன். சமூகம் – அரசியல்– பொருளாதாரம் ஆகிய மூன்றிலும் தமிழ்நாடு என்பது ஒருசேர வளர வேண்டும் என்பதுதான் நம்முடைய கனவாக இருக்க வேண்டும். அனைவரின் கனவையும் நிறைவேற்ற நமது அரசு பாடுபட்டு வருகிறது.

அரசின் பொருளாதாரமும் தனிமனிதர்களின் பொருளாதாரமும் தன்னிறைவு பெற்றதாக மாற வேண்டும். நம்முடைய தமிழ்ச் சமூகமானது சிந்தனையால், பண்பாட்டால், நாகரிகத்தால் பழக்க வழக்கத்தால் உயர்வடைய வேண்டும். அதாவது ஏற்றத்தாழ்வு அற்ற, உயர்வு தாழ்வு அற்ற ஒரு மனித உரிமைச் சமூகமாக நாம் மாற வேண்டும். அதைத்தான் நம்முடைய சுதந்திரப் போராட்டத் தியாகிகள் விரும்பினார்கள். அதற்காகத்தான் போராடினார்கள். அதற்காகத்தான் தியாகம் செய்தார்கள். சிறை சென்றோர் – செக்கிழுத்தோர் – கல்லுடைத்தோர் – அடி உதைபட்டோர் –அவலங்களைச் சுமந்தோர் – உயிரைக் கொடுத்தோர் ஆகிய அனைவரும் மேன்மைமிகு தமிழ்நாட்டை உருவாக்க நினைத்தார்கள். அத்தகைய தமிழ்நாட்டை உருவாக்க நினைக்கும் தமிழ்நாடு அரசுக்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்; உறுதுணையாக இருக்க வேண்டும்.

மகாத்மா காந்திக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையேயான உறவு ஆழமானது. தென் ஆப்பிரிக்காவில் மகாத்மா காந்தி நடத்திய அத்தனைப் போராட்டங்களிலும் தமிழர்கள் முன்னின்றனர். அங்கு நடைபெற்ற இன வெறியின் உக்கிரத்தைத் தாங்கிய தமிழர்கள் தன் உடன்பிறந்த சகோதரர்கள் என்று மகாத்மா காந்தி அறிவித்தார். தமிழர்கள் மகாத்மா காந்தியை நெஞ்சார நேசித்தார்கள். மகாத்மா காந்தியும் தமிழர்கள் மட்டுமின்றி தமிழ் மொழி மீதும் அளவில்லா அன்பு கொண்டிருந்தார். ஐரோப்பாவிற்கு எப்படி இத்தாலிய மொழியோ அப்படி இந்தியாவிற்குத் தமிழ்மொழி என அறிவித்து லண்டன் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் தமிழை விருப்பப்பாடமாகச் சேர்க்க வேண்டும் என்றும் இந்தியாவின் பிற பகுதிகளில் வசிப்பவர்கள் நம் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மகாத்மா காந்தி தம் வாழ்நாளில் 20 முறை தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்தார். நூறு ஆண்டுகளுக்கு முன் மதுரைக்கு வந்த மகாத்மா காந்தியை, மேலாடை துறந்த மகாத்மாவாகத் தமிழ்நாடு வழியனுப்பி வைத்தது. அதை நினைவுகூரும் வகையில் மகாத்மா குறித்த அரிய கலைப்பொருட்களைக் கொண்ட மதுரை மகாத்மா காந்தி அருங்காட்சியகம் பொதுமக்களையும் தலைமுறையினரையும் ஈர்க்கும் வகையில் ஆறு கோடி ரூபாய்ச் செலவில் நவீன முறையில் புதுப்பிக்கப்படும். சாதி, மதம், இனம் குறித்த பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருக்கும் இந்தியத் திருநாட்டை வழிநடத்தக் கிடைத்த ஒப்பற்ற ஆயுதம் காந்தியச் சிந்தனைகள் என்னும் கருத்தை இளைஞர் மனதில் ஆழப் பதியவைக்க இன்று சூளுரைப்போம் !

அனைவருக்கும் சுதந்திர நாள்
நல்வாழ்த்துகள்!

வாழ்க தமிழ்நாடு! வாழ்க இந்தியா! வணக்கம்!

# COMMUNIST PARTY OF INDIA



**D. RAJA**
*General Secretary*

**July 31, 2021**

It is a matter of great pride and happiness for all the citizens of the country and of Tamil Nadu in particular that celebrations are organised to commemorate the centenary of Tamil Nadu Legislature. It is also a matter of great happiness that the portrait of Dr. Kalaignar M. Karunanidhi is being unveiled in Tamil Nadu Legislative Assembly by the Honourable President of India.

Dr. Kalaignar was one of the great statesmen of the country. He was a member of the Tamil Nadu Assembly for 13 times and Chief Minister for five times.

In fact, the contributions of Dr. Kalaignar in shaping the political course of the nation, in developing the state of Tamil Nadu and in protecting the rights of Tamil people and Tamil language are unforgettable.

He played a key role along with Anna in changing the name of Madras state to Tamil Nadu. He was also instrumental in having the pro-poor, pro-people issues on the agenda of the government. After Anna, while following his footsteps he made his imprint and impact in the contemporary history of Tamil Nadu and in India in defending democracy, secularism and social justice. It is because of Kalaignar, the name, Madras, became Chennai. Personally, I am privy to the efforts made by Kalaignar in this regard.

It is befitting to unveil his portrait on the occasion of the commemoration of the centenary of Tamil Nadu Legislature.

On behalf of my Party — the CPI — and on my personal behalf I pay our rich tributes to Dr. Kalaignar and congratulations to Tamil Nadu Legislature.

With regards,

Yours sincerely,

D Raja

D RAJA
General Secretary

# நூற்றாண்டு விழா கண்ட சென்னை மாகாண - தமிழக சட்டமன்றம்

### "ஒருவனை ஒருவன் அடுதலும், தொலைதலும் புதுவதன்று உலகத் தியற்கை"

என்பது புறநானூறு. தமிழகத்தில் மட்டுமல்ல இந்திய நாடு முழுவதிலும் இருந்த அரசர்கள் ஒற்றுமையுடன் இல்லாமல் தமக்குள் அடிக்கடி சண்டையிட்டு வந்ததால் இந்திய நாடு அந்நியர்களின் வேட்டைக் காடாகியது. வாணிகம் புரிய வந்த டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், பிரிட்டிஷ்காரர்கள், எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு இந்தியாவைக் கூறு போட்டனர்.

இறுதியில் பிரிட்டிஷ்காரர்களே இந்தியா முழுவதையும் உரிமை கொண்டு 200 ஆண்டு காலம் அடிமைப்படுத்தியிருந்தனர். உண்மையில் அவர்கள் நாடு பிடிப்பதற்காக இந்தியாவிற்கு வரவில்லை!

கிழக்கிந்தியக் கம்பெனி என்ற பெயரில் ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்து, வாணிகம் செய்யத் தொடங்கிச் சிறிது சிறிதாக இந்தியத் திருநாட்டைத் தம் ஆளுகையின் கீழ் கொண்டு வந்தனர். தமிழகம் உள்ளிட்ட இந்தியாவின் மாநிலங்களை மதராஸ், மும்பை, கொல்கத்தா என மூன்று மாகாணங்களாகப் பிரித்துக் கொண்டு, அம்மாகாணங்களில் ஆளுநர்களை நியமித்து, தம் ஆதிக்கத்தைச் செலுத்தினர்.

1799 இல் தொடங்கப்பட்ட ஆளுநர்களின் நிருவாகச் சபைகளுக்கு ஒழுங்குமுறைகளை இயற்றும் அதிகாரம் தரப்பட்டிருந்தது. சட்டமன்றம் என்ற அமைப்பு இல்லை. அந்தந்த நிருவாகச் சபைகளே ஒழுங்கு முறைகளை வகுத்துச் செயல்படத் தொடங்கின.

#### 1833 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம்

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் 1773ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ஓர் ஒழுங்குமுறைச் சட்டத்தின் படி, 1833 ஆம் ஆண்டில் பட்டயச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டப்படி கொல்கத்தாவில் இருந்த கவர்னர், கவர்னர் ஜெனரல் ஆனார். கவர்னர் – ஜெனரலின் கீழ் ஒரு நிருவாகச் சபை ஏற்படுத்தப்பட்டது. கவர்னர் ஜெனரலின் நிர்வாகச் சபையில் ஏற்கனவே இருந்த மூன்று உறுப்பினர்களுடன் சட்டம் இயற்றுவதற்கென்றே நான்காவது உறுப்பினராக இந்தியாவில் ஆங்கிலேயக் கல்வி முறையை அறிமுகப்படுத்திய மெகாலே பிரபு நியமிக்கப்பட்டார்.

மெகாலே பிரபு, இந்தியாவுக்குப் பிரதிநிதித்துவ அமைப்பு வேண்டுமென்றும், ஒரு சிறந்த அரசமைப்புச் சட்டம் வேண்டுமென்றும் விரும்பினார். அதனால், மாகாண ஆளுநர்களின் நிருவாகச் சபைகளிடமிருந்த சட்டமியற்றும் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு கவர்னர் – ஜெனரலின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. அவரது நிருவாகச் சபையின் நடவடிக்கைக் குறிப்புகள் பொதுமக்கள் அறியும் வண்ணம் அரசிதழில் ( gazette ) வெளியிடப்பட்டன.

#### 1853 ஆம் ஆண்டு பட்டயச் சட்டம்

இந்தச் சட்டத்தின்படி, வங்காள உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி, துணை நீதிபதி, சென்னை, மும்பை, உத்தரப் பிரதேசம், வடமேற்கு மாகாணங்கள் ஆகிய ஒவ்வொன்றிற்கும் ஒரு பிரதிநிதி உட்பட மொத்தம் பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்ட கவர்னர்–ஜெனரல் சபை அமைக்கப்பட்டது. சட்டமன்றத்திற்கெனச் சிறப்புரிமைகள் இருக்க வேண்டும் என்பதற்காகச் சட்ட உறுப்பினர், சட்டமியற்றும் கூட்டங்களில் மட்டுமல்லாது, இதர கூட்டங்களிலும் கலந்து கொண்டு முழு உறுப்பினர் என்ற உரிமை பெறுவதற்கு மெகாலே பிரபு வழிவகுத்தார். மேலும், இச்சட்டத்தின்படி அமைந்த சட்டமன்ற நடவடிக்கைகளைக் காணப் பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

1857ஆம் ஆண்டு இங்கிலாந்து பேரரசி விக்டோரியா மகாராணி வெளியிட்ட பிரகடனத்தின்மூலம் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகத்திடமிருந்து இந்திய நாட்டின் பகுதிகள் அவரது நேரடி ஆட்சியின்கீழ் வந்தன. கிழக்கிந்தியக் கம்பெனியின் பொறுப்புகளை இங்கிலாந்து பாராளுமன்றம் எடுத்துக் கொண்டது. அரசுச்

செயலாளர் ஒருவர், இந்திய விவகாரங்களைக் கவனிக்க நியமிக்கப்பட்டார். கவர்னர்–ஜெனரலாக அப்போது பொறுப்பு வகித்த கானிங் பிரபு, வைசராய் என அழைக்கப்பட்டார்.

### 1861ஆம் ஆண்டு இந்தியச் சட்டமன்றங்கள் சட்டம்

1861ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நிறைவேற்றப்பட்ட இந்தியச் சட்டமன்றங்கள் சட்டம், சட்டமன்றங்களின் வளர்ச்சியில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. மாகாண ஆளுநர்களின் நிருவாக அவைகளிடமிருந்து பறிக்கப்பட்ட சட்டமியற்றும் அதிகாரங்கள், மீண்டும் அந்த அவைகளிடம் அளிக்கப்பட்டன. சட்டங்களையும், ஒழுங்குமுறை விதிகளையும் மட்டும் இயற்ற, தலைமை வழக்கறிஞர் மற்றும் நான்கு முதல் எட்டு வரையிலான கூடுதல் உறுப்பினர்களையும், ஆளுநர், தனது நிருவாகச் சபையில் சேர்த்துக் கொள்ள இச்சட்டம் வழிவகை செய்தது. இவர்களில் குறைந்தது பாதி பேருக்கு மேல், அதிகாரிகளாக இருக்க வேண்டும் என்றும், இதன் உறுப்பினர்கள் இரண்டாண்டு காலம் பதவி வகிப்பர் என்றும், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளை இயற்ற நடைபெறும் கூட்டங்களில் மட்டுமே அவர்கள் கலந்து கொண்டு வாக்களிக்க முடியும் என்றும் இச்சட்டம் முடிவு செய்தது.

1862ஆம் ஆண்டு இச்சட்டத்திற்கான விதிகள் இயற்றப்பட்டு, அவை நடவடிக்கைகள் முறைப்படுத்தப்பட்டன. அவை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வெளியிடவும் சுருக்கமாக நிகழ்ச்சிகளை அரசிதழில் வெளியிடவும் வழிவகை செய்யப்பட்டது. கவர்னர்–ஜெனரலின் ஒப்புதல், மாகாணச் சட்டங்கள் நிறைவேறுவதற்கு அவசியமாக்கப்பட்டது.

### 1892 ஆம் ஆண்டு இந்தியச் சட்டமன்றங்கள் சட்டம்

இங்கிலாந்து காமன்ஸ் சபை உறுப்பினரான திரு.பிராட்லா என்பவர், இந்திய நாட்டின் நிருவாகத்தில், அந்த மக்களும் பங்கு வகிக்க வேண்டும் என்ற அடிப்படையில், சார்பாண்மைக் கொள்கையின்படி (Principle of Representation) தேர்தல்கள் நடத்தி, இடங்கள் அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளுக்கு வலுவூட்டினார். 1892 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்தியச் சட்டமன்றங்கள் சட்டத்தின்படி, சட்டமியற்றும் மன்றத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்த்தப்பட்டது. அதில் அரசு அதிகாரிகள் 9 பேர் அளவுக்கு இடம்பெறவும், அரசு சார்பற்றவர்கள் மீதமுள்ள இடங்களுக்குப் பொறுப்பு ஏற்கவும் இச்சட்டம் வகை செய்தது. இந்தச் சட்டம், முந்தைய சட்டத்தைவிட மேம்பட்டதாயிருந்தது. ஏனெனில், சட்டமியற்றல் மட்டுமல்லாது, அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கையை விவாதிக்கவும், சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, பொதுப் பிரச்சினைகளைப்பற்றி வினாக்கள் எழுப்பி அரசிடம் பதில் பெறவும் இது வழிகோலியது. 1892 சட்டத்தின்படி அமைந்த முதலாவது சட்டமன்றத்தின் முதல் கூட்டம் 17–1–1893 அன்று மாலை 3–00 மணிக்கு புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள மண்டபத்தில் நடைபெற்றது. இந்த மன்றம் முதன்முதலாக 1893–1894 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை 2–5–1893 அன்று விவாதித்தது. விவாதத்தில் இரண்டு உறுப்பினர்கள் பங்குகொண்டனர்.

### 1909 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம் – மிண்டோ–மார்லி சீர்திருத்தங்கள்

மிண்டோ – மார்லி சீர்திருத்தங்களின் அடிப்படையில் இயற்றப்பட்ட 1909 ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம், இந்திய மக்களுக்குப் பொறுப்பாட்சியில் அதிகப் பங்கு வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்த கோரிக்கையை ஓரளவிற்கு நிறைவு செய்தது. சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை இருபதிலிருந்து அதிகபட்சம் 50–ஆக உயர்த்தப்பட்டது. ஆளுநரின் நிருவாகச் சபை உறுப்பினர்கள் நான்கு பேரைத் தவிர, 42 உறுப்பினர்களில் 21 பேர் தேர்ந்தெடுக்கப் படக்கூடியவர்கள். மாநகராட்சி, நகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும், நிலச்சுவான்தார்கள், தோட்டமுதலாளிகள், வணிக நிறுவனங்கள், சென்னைப் பல்கலைக் கழகம் உள்ளிட்டோருக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. நியமனம் செய்யப் பெறும் 21 உறுப்பினர்களில், 16 உறுப்பினர்கள் அலுவலர்களாவர். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மூன்று ஆண்டு காலம் பதவி வகித்தனர்.

1909ஆம் ஆண்டின் சட்டப்படி 1910, 1913, 1916, 1919 ஆகிய ஆண்டுகளில் தேர்தல்கள் நடைபெற்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைவிட ஆளுநரால் நியமிக்கப்பட்டவர்களே அதிக எண்ணிக்கையில் இடம்பெற்றனர். அனைத்து உறுப்பினர்களையும் மக்களே தேர்ந்தெடுக்கும் தேர்தல்களாக இவை

அமையவில்லை. ஆயினும் முதன்முறையாக ஒருவகை மறைமுகத் தேர்தல்களை இச்சட்டம் அமலாக்கியது. இதனை அடித்தளமாகக் கொண்டே, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டமன்றமானது பின்னர் அமைந்தது.

இச்சட்டத்தின் கீழ், முதன்முறையாக, ஆளுநரின் நிருவாகச் சபையில் இந்தியர் ஒருவருக்கு இடம் அளிக்கப்பட்டது.

### 1910–இல் கட்டப்பட்ட சட்டமன்ற மண்டபம்!

சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 50–ஆக அதிகரிக்கப்பட்டதால், அதற்கான மண்டபம் புனித ஜார்ஜ் கோட்டையிலேயே 1910–இல் புதிதாகக் கட்டப்பட்டது. 1746 இல் பிரெஞ்சுக்காரர்களால் கோட்டையிலிருந்து வெளியே புதுச்சேரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட கருப்புப் படிகத்தாலான 32 தூண்கள், 1761 இல் மீண்டும் சென்னைக்கு எடுத்து வரப்பட்டன. 1910 இல் சட்டமன்ற மண்டபம் கட்டப்பட்டபோது அவற்றில் 20 தூண்கள் கட்டடத்தில் நிறுவப்பட்டு, இப்போதும் அவை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

### 1919 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டப்படி தோன்றிய சட்டமன்றம்

மாண்டேகு – செம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தங்களின் அடிப்படையில் 1919–இல் இயற்றப்பட்ட இச்சட்டம், இந்திய மக்களுக்கு ஒரு பொறுப்பான ஆட்சி அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்ற எண்ணமும், ஆட்சியில் இந்தியர்களுக்கு அதிக அளவு பங்கு இருக்கவேண்டும் என்ற கோரிக்கைகளும் நிறைவேறக் காரணமாயிருந்தது. வரி அல்லது தீர்வை செலுத்துவோருக்கு மட்டும் வாக்குரிமை இருந்தது என்றாலும், இந்தியாவில் முதன் முதலில் பெருமளவில் தேர்தல்கள் நடைபெற இச்சட்டம் வகை செய்தது. சட்டமன்றங்களில் மக்கள் பிரதிநிதிகள் மிக அதிக அளவில் இடம்பெற்றனர். அதிகாரிகளின் மேலாதிக்கம் குறைந்து, மக்கள் பிரதிநிதிகளின் குரல் ஒலிக்கத் தொடங்கியது. அதுவரை ஆளுநரின் நிருவாகச் சபையின் நிழலாக இருந்த சட்டமன்றம், தனித்து இயங்கும் ஓர் அமைப்பாக மாறியது. இம்மன்றமே, தனித்தியங்கும் சட்டமன்றத்தின் தொடக்கம் எனக் கருதப்படுகிறது.

### சென்னை மாகாண சட்டமன்றம்

சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை, Madras Legislative Council என்றழைக்கப்பெற்ற இச்சட்டமன்றம், 127 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. அவர்களில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் 98 பேர். ஆளுநரால் நியமிக்கப்பெறும் 25 பேரில் ஆதி திராவிடர்களும், அதிகாரிகளும் அடங்குவர். 4 பேர் ஆளுநரின் நிருவாகச் சபை உறுப்பினர்கள். இந்த நால்வரும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தும், அவர்கள் மீது சட்டமன்றம் ஆளுமை செலுத்த இயலாது. இச்சட்டத்தினால் மத்தியில் மாகாணங்களவை, சட்டமன்றப் பேரவை என்று இரண்டு அவைகள் அமைந்தன. மேலும், இச்சட்டம் சட்டமன்றங்களில் இரட்டை ஆட்சி முறையை அறிமுகப்படுத்தியது.

மாகாணம் சம்பந்தப்பட்ட பொருள்களில் காவல், பாசனம், நில வருவாய், வறட்சி நிவாரணம், கடன்கள், தொழிற்சாலைகள் போன்ற முக்கிய துறைகள், ஆளுநரின் நிருவாகச் சபை உறுப்பினர்களின் பொறுப்பில் வைக்கப்பட்டன. இவை ஒதுக்கப்பட்ட துறைகள் (Reserved Subjects) எனவும், தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவையின் அதிகாரத்திற்கு உட்பட்ட கலால், உள்ளாட்சி, பொதுச் சுகாதாரம், பொதுப்பணிகள், வேளாண்மை, மீனளம் போன்ற பொருட்கள் மாற்றப்பட்ட துறைகள் (Transferred Subjects) எனவும் அழைக்கப்பெற்றன. பொதுவாக இச்சட்டமன்றத்தின் பதவிக்காலம் மூன்றாண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டது. சிறப்பு நேர்வுகளில் பதவிக் காலத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கவும் இச்சட்டம் வழிவகை செய்தது.

### பிரிட்டிஷ் இளவரசர் கன்னாட் கோமகன் திறந்துவைத்தார்

1919–இல் இயற்றப்பட்ட சட்டத்தின்படி 1920 டிசம்பரில் நடைபெற்ற தேர்தலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளைக் கொண்டு தனித் தன்மையுடன் செயல்பட்ட இச்சட்டமன்றம் 12–1–1921 அன்று பிரிட்டிஷ் இளவரசர் கன்னாட் கோமகன் அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்றது. இந்தச் சட்டமன்றம் தொடங்கப்பட்டதன் நூற்றாண்டு விழாவைத்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2–8–2021 அன்று முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழாவுடன் இணைத்து; கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக எளிமையாகவும், அதே நேரத்தில் வெகு சிறப்பாகவும் கொண்டாடினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கன்னாட் கோமகன் சட்டமன்றத்தைத் தொடங்கி வைத்தபோது விலிங்டன் பிரபு சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்தார். அவர் தம் துணைவியாருடன் 6–3–1922 அன்று பேரவைக்கு வருகை தந்தார். அப்போது, சிறப்பான வேலைப்பாடுகள் நிறைந்த இருக்கையைச் சட்டமன்றத் தலைவருக்குப் பரிசாக அளித்தார். எட்டு அடி உயரம் கொண்ட இந்த அழகான இருக்கை, தேக்கு மரத்தால் ஆனது. கலை நுணுக்கம்மிக்க இந்த இருக்கையே புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றத்தில் இன்றும் பேரவைத் தலைவரின் இருக்கையாக அமைந்துள்ளது.

### கட்சி அடிப்படையில் ஆட்சி முறை தொடங்கியது.

1919 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்தான் இந்தியாவில் கட்சி ஆட்சி முறை நடைமுறைக்குவர, வழிவகை செய்தது. இச்சட்டத்தின்படி முதல் தேர்தல் 30–11–1920, 1–12–1920, 2–12–1920 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்த முதல் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி கலந்துகொள்ளவில்லை. 98 இடங்களில் 63 இடங்களை வென்று நீதிக் கட்சி பெரும்பான்மை பெற்றது.

### பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை

முதல் சட்டமன்றத்தின் காலம் முடிவடைந்தபின் 1923, 1926 மற்றும் 1930 ஆம் ஆண்டுகளில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. 1921–இல் நடந்த தேர்தலில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை. எனவே, பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம், 1.4.1921 அன்று சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. எனினும், 1923–தேர்தலில்தான் அது நடைமுறைப்படுத்தப்பட்டது. பின்னர் 1926–இல் இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின்படி, தேர்தலில் நிற்கவும், நியமிக்கப்படவும் பெண்கள் உரிமை பெற்றனர். அதனையொட்டி, 1926 – இல் நடந்த தேர்தலுக்குப்பின் அமைந்த சட்டமன்றத்திற்கு, நியமிக்கப்பெற்ற முதல் பெண்மணி டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஆவார். 1930 –இல் அமைந்த சட்டமன்றத்தின் பதவிக் காலம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு 1936 இறுதி வரையில் நீடித்தது.

### 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்

இச்சட்டம், சட்டமன்ற வரலாற்றில் மற்றொரு முக்கியதிருப்பத்தைஏற்படுத்தியது. 1937–ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளன்று இச்சட்டம் நடைமுறைக்கு வந்தது. சென்னை உட்பட சில மாகாணங்களில் ஈரவைகள் கொண்ட சட்டமன்றங்களை (Bicameral Legislatures) இச்சட்டம் அறிமுகப்படுத்தியது. இவை சட்டமன்றப் பேரவை (Legislative Assembly) எனவும், சட்டமன்ற மேலவை (Legislative Council) எனவும் அழைக்கப்பெற்றன.

இச்சட்டத்தின்படி, மாகாணச் சட்ட மன்றங்களுக்கு முன்பிருந்ததைவிட அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. மத்தியப் பட்டியல் (Federal List), மாகாணப் பட்டியல் (Provincial List), பொதுப்பட்டியல் (Concurrent List) என்று துறைகள் மூன்றாகப் பிரிக்கப்பட்டன.

மாகாணப் பட்டியலில் வரும் பொருள்கள் குறித்தும், பொதுப் பட்டியலில் உள்ள பொருள்கள் குறித்தும் மாகாணச் சட்டமன்றங்கள் சட்டம் இயற்றலாம். எனினும், பொதுப் பட்டியலில் உள்ள பொருள் குறித்து மகாணச் சட்டமன்றம் சட்டம் இயற்றினாலும், அதே பொருள் குறித்து மத்தியச் சட்டமன்றம் சட்டம் இயற்றினால், அந்தச் சட்டமே மேலாண்மை பெறும். இந்திய அரசுச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின்படி உறுப்பினர்களுக்குச் சில சிறப்புரிமைகள் வழங்கப்பட்டன. சட்டமன்றத்தில் பேச்சுச் சுதந்திரமும், சட்டமன்றத்தில் ஆற்றும் உரைகளுக்குச் சட்ட நடவடிக்கைகளிலிருந்து காப்புரிமையும் அளிக்கப்பட்டன.

### சட்டமுன்வடிவின்மீது ஆளுநர் அதிகாரம்

மாகாணச் சட்டமன்றம் நிறைவேற்றிய சட்டமுன்வடிவிற்கு அனுமதி மறுக்கவும், கவர்னர்–ஜெனரல் பார்வைக்கு அனுப்பவும் அல்லது மீண்டும் சில திருத்தங்களைச் செய்வதற்காகச் சட்டமன்றத்தின் மறு ஆய்வுக்கு அனுப்பவும் ஆளுநருக்கு அதிகாரம் வழங்கப்பெற்றது.

சில வகையான சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்வதற்கு ஆளுநரின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். மாகாணத்தில் பொது அமைதியை நிலைநாட்டும் தனது சிறப்புப் பொறுப்புக்கு ஒரு சட்டமுன்வடிவு குந்தகம் விளைவிக்கும் என ஆளுநர் கருதினால், அச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்போ அல்லது பின்போ அது தொடர்பான நடவடிக்கைகளை ஆளுநர் நிறுத்தி வைக்கலாம். மிக அவசர நேர்வுகளில் சட்டமன்றம் கூடாத காலங்களில் அவசரச் சட்டத்தை வெளியிடலாம். அதே அளவுக்கு இல்லாவிட்டாலும், சற்று அவசரம் பொருந்திய நேர்வுகளில் ஆளுநர்

சட்டம் வெளியிட்டு, அதன் காரண காரியங்களை விளக்கிச் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைக்கலாம். சட்டமன்றம் அனுமதி மறுத்தாலும் தனது சிறப்புப் பொறுப்புக்குத் தேவையெனக் கருதக்கூடிய நேர்வுகளில் கோரப்பட்ட மானியத் தொகைகளுக்கு ஆளுநர் மானியம் வழங்கலாம். அது வாக்களித்து வழங்கப்பட்டதாகக் கருதப்பெறும்.

பிரிவு 93 – இன்கீழ், அவசர காலங்களில் அரசியல் சட்டத்தின் செயல்பாட்டை நிறுத்திவைத்து, நிருவாகத்தையும், சட்டம் இயற்றும் பணியையும் மேற்கொள்ள ஆளுநருக்கு உரிமை வழங்கப்பட்டது. பொதுவாக, இங்கிலாந்து மன்னரின் சார்பாகச் செயல்படும் ஆளுநரின் பெயரில் அனைத்து அரசாணைகளும் வெளியிடப்பட்டன.

இச்சட்டத்தின்கீழ், சட்டமன்றப் பேரவைக்கு 215 இடங்களும், மேலவைக்கு 56–க்கு மிகாத இடங்களும் அனுமதிக்கப்பெற்றிருந்தன. மேலவைக்கு 10 பேருக்கு மிகாதவர்களை ஆளுநர் நியமிக்கவும் வகை செய்யப்பட்டிருந்தது.

### வாக்காளர்க்கான தகுதிகள்

வரி செலுத்துதல், சொத்துகள் வைத்திருத்தல், குறிப்பிட்ட கல்வித் தகுதி பெற்றிருத்தல், இராணுவப் பணியில் ஈடுபட்ட அனுபவம் எனப் பல்வேறு தகுதிகள் வாக்காளருக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததால், பேரவைக்கான தேர்தலில் வாக்களிப்பதற்கான தகுதிகள் மாகாணத்திற்கு மாகாணம் வேறுபட்டன. கல்வியறிவுள்ள பெண்கள் வாக்களிக்க வகை செய்யப்பட்டிருந்தது. பொதுத் தொகுதிகளுடன் ஆதி திராவிடர்கள், இஸ்லாமியர்கள், ஆங்கிலோ – இந்தியர்கள், ஐரோப்பியர்கள், இந்தியக் கிறித்தவர்கள் ஆகியோருக்கெனச் சிறப்புத் தொகுதிகள் இடம் பெற்றிருந்தன. இவை தவிர, வணிகர்கள், நிலச்சுவான்தார்கள், பல்கலைக்கழகங்கள், தொழிலாளர்கள் மற்றும் பெண்களுக்கான பிரதிநிதித்துவமும் வழங்கப்பட்டிருந்தது.

### இராஜாஜி தலைமையில் அமைச்சரவை

1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி, பேரவைக்கு நடந்த முதல் தேர்தலில் மொத்தம் 215 இடங்களில் காங்கிரஸ் கட்சி 159 இடங்களை வென்று பெரும்பான்மை பெற்றது. 14–7–1937 அன்று இராஜாஜி அவர்கள் தலைமையில் காங்கிரஸ் அமைச்சரவை அமைந்தது. சட்டமன்றப் பேரவைக் கூட்டம் காலை 11–00 மணிக்குச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் செனட் மண்டபத்தில் முதன்முதலில் நடைபெற்றது. 27.1.1938 முதல் 26.10.1939 வரை பேரவைக் கூட்டம் சென்னை அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள, தற்போது இராஜாஜி மண்டபம் எனப்படும் விருந்தளிக்கும் மண்டபத்தில் ( Banquettling Hall) நடைபெற்றது.

1939 – இல் இரண்டாவது உலகப் போர் தொடங்கியபோது, போரில் இந்தியாவை ஈடுபடுத்தியதால் பிரிட்டிஷ் அரசை எதிர்த்து காங்கிரஸ் அமைச்சரவை 29–10–1939 அன்று பதவி விலகியது. 30–10–1939 முதல் 30–4–1946 வரை ஆளுநர் ஆட்சி நடைபெற்றது. இடையில் 1–10–1945 அன்று சட்டமன்றப் பேரவை ஆளுநரால் கலைக்கப்பட்டது.

### பிரகாசம் தலைமையில் அமைச்சரவை

போர்க் காலத்தில் மேலவைக் கூட்டம் நடைபெறாவிட்டாலும், மேலவை என்ற அமைப்பு இருந்து வந்தது. போர் முடிவடைந்தபின் மீண்டும் இரண்டாவது பொதுத் தேர்தல் நடைபெற்று, காங்கிரஸ் கட்சி ஆந்திரகேசரி திரு.டி.பிரகாசம் அவர்கள் தலைமையில், 30–4–1946 அன்று ஆட்சி அமைந்தது. பிரகாசம் அமைச்சரவை 23–3–1947 அன்று பதவி விலகியது.

### ஓமந்தூரார் – குமாரசாமி ராஜா தலைமையில் அமைச்சரவைகள்

பிரகாசம் அமைச்சரவை பதவி விலகிய அன்றே ஓமந்தூர் பி.இராமசாமி ரெட்டியார் தலைமையில் புதிய அமைச்சரவை அமைந்தது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த பெருமை இவருக்கே வாய்த்தது. 6–4–1949இல் இவர் பதவி விலகியதும் அன்றே திரு.பி.எஸ். குமாரசாமி ராஜா முதலமைச்சராகப் பொறுப்பேற்று 9–4–1952 வரை பதவியில் இருந்தார்.

### இந்தியா சுதந்திரம் அடைந்தபின்

1947 ஆம் ஆண்டு இந்திய சுதந்திரச் சட்டத்தின்படி 15 ஆகஸ்ட் 1947 முதல் இந்தியா, பாகிஸ்தான் என இரண்டு நாடுகளாகப் பிரிக்கப்பட்டு, சுதந்திரம் அளிக்கப்பட்டது. ஆளுநர்கள், அரசமைப்பின்படி மாநிலத்தின் தலைவர்களானார்கள். ஆளுநரிடமிருந்த சட்டமியற்றும் அதிகாரம் நீக்கப்பட்டது. சட்டமன்றம் கூடாத நாட்களில் மட்டும் அவசரச் சட்டம் இயற்றலாம். மத்தியிலிருந்த ஃபெடரல் சட்டமன்றத்தின் பொறுப்புகளை அரசமைப்பு அவை

ஏற்றுக்கொண்டு, இந்திய அரசமைப்புச் சட்டத்தை வகுத்தளித்தது.

### இந்தியா குடியரசானபின்

26–1–1950 – அன்று நடைமுறைக்கு வந்த இந்திய அரசமைப்புச் சட்டம், நாட்டின் பாதுகாப்பு, நிதித் தன்னிறைவு, பொது அமைதி ஆகியவற்றுக்குட்பட்டு, தன்னாட்சி உரிமை கொண்ட மாநிலங்களும், இறையாண்மை பெற்ற சட்டமன்றங்களும் உருவாக வழிகோலியது. இச்சட்டம் அமலுக்கு வந்தபோது இருந்த சட்டமன்றப் பேரவை 1952 வரை நீடித்தது.

சுதந்திரம் பெற்றபின் அரசமைப்புச் சட்டத்தின்படி 1952இல் முதல் தேர்தல் 1952 முதல், இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, பேரவை, மேலவை என இரு அவைகளைக் கொண்டதாக சட்டமன்றம் அமைந்தது. பேரவையின் பதவிக் காலம் 5 ஆண்டுகள் என நிர்ணயிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்களில் ஆங்கிலோ – இந்தியர் எவரும் இல்லையெனில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 333–இன் படி ஆங்கிலோ – இந்தியர் ஒருவரை ஆளுநர் நியமிப்பார். நிரந்தர அமைப்பான மேலவை உறுப்பினர்களின் பதவிக் காலம் 6 ஆண்டுகள் எனவும், மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர், ஒவ்வொரு இரண்டாண்டுகளுக்கும் ஒருமுறை பதவி விலகுவர் எனவும் இச்சட்டம் வரையறுத்தது. இரண்டாவது, நான்காவது, ஆறாவது ஆண்டுகளில் யார், யார் பதவி விலகுவது என்பது முதலில் குலுக்கல் முறையில் முடிவு செய்யப்பட்டது.

### இரண்டு அவைகளின் உறுப்பினர்களும் அமைச்சர்கள் ஆகலாம்

மேலவை, பேரவை இரண்டின் உறுப்பினர்களும் அமைச்சர்களாகப் பொறுப்பேற்கலாம் என வழிவகை செய்யப்பட்டது. மாநில அமைச்சர் மற்றும் மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் ஆகியோர் சட்டமன்றத்தின் இரு அவைகள் மற்றும் அவர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பெறும் சட்டமன்றக் குழுக்கள் ஆகியவற்றின் கூட்டங்களில் பங்குகொண்டு உரையாற்றலாம். எனினும், அவர்களுக்கு வாக்குரிமை கிடையாது.

### 1952இல் அமைந்த முதல் பேரவை – இராஜாஜி முதலமைச்சர்

1952–இல் நடைபெற்ற முதல் தேர்தலில் வயதுவந்த குடிமக்கள் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. அப்போது சென்னை மாகாணம் என்பது இன்றைய தமிழகம், தற்போதைய ஒடிசா, கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் உள்ள சில பகுதிகள் மற்றும் முன்னாள் நிஜாம் சமஸ்தானம் நீங்கலாக இந்நாள் ஆந்திர மாநிலம் முழுவதும் அடங்கியதாகும். சட்டமன்றப் பேரவைக்கு 309 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன; 375 உறுப்பினர்கள் வரையறுக்கப்பட்டனர். 243 தொகுதிகள் ஒருறுப்பினர் கொண்டவை; 62 தொகுதிகள் ஈருறுப்பினர்கள் கொண்டவை (ஓர் இடம் ஆதி திராவிடருக்கானது), 4 தொகுதிகள் ஈருறுப்பினர்கள் கொண்டவை (ஓர் இடம் பழங்குடியினருக்கானது). முதல் தேர்தலின்போது 372 இடங்களுக்குத் தேர்தல் நடைபெற்றது. 3 தொகுதிகளில் போட்டியில்லை. 1–3–1952 அன்று முதல் பேரவை அமைக்கப்பட்டது. மேலவை உறுப்பினராக, ஆளுநரால் நியமிக்கப்பட்ட திரு.சி.ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தலைமையில் 10–4–1952 அன்று அமைச்சரவை அமைந்தது.

### அரசினர் தோட்டத்தில் புதிய பேரவை மண்டபம்

பேரவையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 375 என்பதால் இட வசதிக்காக சென்னை, அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்றப் பேரவை மண்டபம் ரூ.10 இலட்சம் செலவில் கட்டப்பட்டு; 2–5–1952 அன்று மேதகு ஆளுநர் திரு. ஸ்ரீபிரகாசா அதைத் திறந்து வைத்தார். சிறந்த இருக்கை வசதியும், ஒலிபெருக்கி வசதிகளும் அங்குச் செய்யப்பட்டிருந்தன. 3.5.1952 அன்று பேரவையின் தற்காலிகத் தலைவர் திரு. பி.டி.இராசன் உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். 3–5–1952 முதல் 27–12–1956 வரை, பேரவை, அம்மண்டபத்தில் கூடியது. அம்மண்டபம் அமைந்த இடமே பின்னர் பாலர் அரங்கம் என்றும், பின் பல்வேறு புதிய வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டு கலைவாணர் அரங்கம் என்றும் பெயர்கள் கொண்டு பயன்பாட்டிற்கு வந்தன.

### இராஜாஜி பதவி விலக காமராஜர் பதவியேற்றார்

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தம் ஆட்சிக் காலத்தில் கொண்டுவந்த குலக்கல்வித் திட்டத்திற்குத் தமிழகம் முழுவதும் ஏற்பட்ட கடுமையான எதிர்ப்பு காரணமாக அவர் 13–4–1954 அன்று பதவி விலகினார்.

மூதறிஞர் இராஜாஜி பதவி விலகியதைத் தொடர்ந்து, பெருந்தலைவர் காமராசர்

தலைமையிலான அமைச்சரவை அதே நாளன்று பதவியேற்றது.

### மாநிலப் பிரிவினைகளும் பேரவை உறுப்பினர்கள் எண்ணிக்கையும்

ஆந்திர மாநிலம் தனி மாநிலமாக 1–10–1953 அன்று பிரிந்தது. முந்தைய பெல்லாரி மாவட்டத்தில் கன்னடர்கள் வாழும் பகுதி மைசூரோடு இணைந்தது. அதனால், சென்னை மாநிலத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 231 ஆகக் குறைந்தது. 1–11–1956 முதல் மொழிவாரி மாநிலங்கள் அமைந்ததால் 190 ஆக அது மேலும் குறைந்தது. 1956 ஆம் ஆண்டு தொகுதி வரையறைக்குப்பின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 205 என உயர்ந்தது. இவற்றில், ஒருறுப்பினர் கொண்ட தொகுதிகள் 129; ஈருறுப்பினர்கள் கொண்ட தொகுதிகள் 38 ஆகும். அந்த 38 தொகுதிகளின் இரண்டாவது உறுப்பினர்கள் 38 பேரில் 37 இடங்கள் ஆதி திராவிடர்களுக்கும், ஓர் இடம் பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டது. தொகுதி வரையறைக்குப்பின் உறுப்பினர் எண்ணிக்கை இறுதியில் 205 ஆகவே இருந்தது.

### இரண்டாவது பேரவை

1957 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னர் 1–4–1957 அன்று இரண்டாவது பேரவை அமைக்கப்பட்டது. பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 205 எனக் குறைந்ததால் 1957 முதல் பேரவை மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்திலேயே கூடியது. 1957–இல் அமைந்த பேரவையில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் முதன்முதல் இடம் பெற்றது என்பது நினைவுகூரத்தக்கது. இந்தப் பேரவையில் இரண்டாம் முறையாக, பெருந்தலைவர் காமராஜர் தலைமையிலான அமைச்சரவை 13–4–1957 அன்று பதவி யேற்றது.

### அரண்மூர் மாளிகையில் பேரவை

20–4–1959 முதல் 30–4–1959 வரையிலான காலத்தில் 9 நாட்கள் உதகை அரண்மூர் அரண்மனையில் (தமிழகம்) பேரவை கூடியது. அதேபோல், 4–5–1959 முதல் 9–5–1959 வரையிலான காலத்தில் 6 நாட்கள் மேலவைக் கூட்டமும் அங்கு நடைபெற்றது. 1959 – இல் ஆந்திரா மற்றும் தமிழகத்திற்கிடையே எல்லை சீரமைக்கப்பட்டபின் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 206 ஆக உயர்ந்தது.

1961 ஆம் ஆண்டு ஈருறுப்பினர் தொகுதிகள் ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, 38 ஈருறுப்பினர்கள் கொண்ட தொகுதிகள் ஒழிக்கப்பட்டு, அதே எண்ணிக்கையிலான ஒருறுப்பினர் தொகுதிகள் ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினர்களுக்கும் ஒதுக்கப்பட்டு, மொத்த எண்ணிக்கை 206 ஆகவே நீடித்தது.

### மூன்றாவது பேரவை – காமராஜர் விலக பக்தவத்சலம் முதல்வர் ஆனார்

1962 பொதுத் தேர்தலுக்குப்பின் மூன்றாவது பேரவை 3–3–1962 அன்று அமைக்கப்பட்டது. பெருந்தலைவர் காமராஜர் தலைமையிலான அமைச்சரவை 15–3–1962 அன்று மூன்றாவது முறையாகப் பதவியேற்றது. 2–10–1963 அன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கட்சி வளர்ச்சிக்காகப் பதவி விலகியதைத் தொடர்ந்து அதே நாளில் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையிலான அமைச்சரவை பதவி யேற்றது.

1965 ஆம் ஆண்டு தொகுதி வரையறைக்குப்பின், ஆளுநரால் நியமிக்கப்படும் நியமன உறுப்பினர் நீங்கலாகத் தேர்ந்தெடுக்கப்படும் இடங்கள், தமிழகத்தில் 234 ஆக உயர்ந்தது. இவற்றில் 42 இடங்கள் ஆதி திராவிடர்களுக்கெனவும் 2 இடங்கள் பழங்குடியினர்களுக்கெனவும் ஒதுக்கப்பட்டது. அது முதல் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை தொடர்ந்து 234 ஆகவே நீடிக்கிறது.

### நான்காவது பேரவை

நான்காவது பேரவை அமைக்கப்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் அமைச்சரவை 6–3–1967 அன்று பதவியேற்றது. மாநிலத்தின் பெயரை "மதராஸ் மாநிலம்" என்பதற்குப் பதிலாக "தமிழ்நாடு" என அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யக் கோரும் தீர்மானம் 18.7.1967 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அதனடிப்படையில், நாடாளுமன்றம் நிறைவேற்றிய 1958 ஆம் ஆண்டு ஒன்றியச் சட்டம் எண் 53 இன்படி, 14–1–1969 முதல் மாநிலத்தின் பெயர் "தமிழ்நாடு" என மாற்றப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள், "தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்" என்னும் பெயர் பலகையைக் கோட்டை உச்சியில் 14.4.1967 அன்று நிறுவித்

திறந்துவைத்தார்கள். அதைத் தொடர்ந்து, "மதராஸ் சட்டமன்றப் பேரவை" என்பது "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை" என மாற்றப்பட்டது, பேரறிஞர் அண்ணா அவர்களது மறைவிற்குப் பிறகு கலைஞர் மு. கருணாநிதி தலைமையிலான அமைச்சரவை 10–2–1969 அன்று பதவி ஏற்றது. 5.1.1971 அன்று பதவி விலகியது.

### ஐந்தாவது பேரவை

1971ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்குப்பின் 15–3–1971 அன்று ஐந்தாவது பேரவை அமைக்கப்பட்டு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையிலான அமைச்சரவை அன்றே பதவி ஏற்றது. 1975இல் பிரதமர் இந்திராகாந்தி நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்து மூத்த தேசியத் தலைவர்களை எல்லாம் கைதுசெய்து சிறையில் அடைத்தார்கள். பத்திரிகைகளுக்குக் கட்டுப்பாடுகளை விதித்தார்கள். அதனால், முதலமைச்சர் கலைஞர் இந்தியாவிலேயே முதன்முதலாக இந்திரா காந்தி அவர்களின் அரசை எதிர்த்து தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும்; பத்திரிகைகளுக்கான கட்டுப்பாடுகள் அகற்றப்பட வேண்டும்; நெருக்கடி நிலையை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும்; ஜனநாயகம் காப்பாற்றப்படவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தீர்மானம் நிறைவேற்றினார்கள். அதன் தொடர்ச்சியாக பிரதமர் இந்திராகாந்தி இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 356ஐ பயன்படுத்தி திமுக அரசைக் கலைத்தார். அதனைத் தொடர்ந்து சுதந்திரத்திற்குப் பின்னர், முதல் முறையாகக் குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழ்நாட்டில் 31–1–1976 அன்று அமைந்தது.

### ஆறாவது பேரவை

நெருக்கடி நிலை திரும்பப் பெறப்பட்டபின் 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப்பின் 30–6–1977 இல் ஆறாவது பேரவை அமைக்கப்பட்டு அதே நாளில் எம்.ஜி. இராமச்சந்திரன் தலைமையிலான அமைச்சரவை பொறுப்பேற்றது. 1979 ஆம் ஆண்டு தொகுதி வரையறை ஆணைக்குத் திருத்தம் செய்யப்பட்டு, உப்பிலியாபுரம் பொதுத் தொகுதி பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டது. இதனால், பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கை 3 ஆக உயர்ந்தது. 17–2–1980 அன்று பேரவை கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஆட்சி அமைந்தது.

### ஏழாவது பேரவை

1980 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.தி.மு.க வென்று 9–6–1980 அன்று ஏழாவது பேரவை அமைக்கப்பட்டு அவர் தலைமையிலான அமைச்சரவை அதே நாளன்று மீண்டும் பதவியேற்றது. பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் 30–10–1984 அன்று மறைந்ததால் பிரதமராகப் பொறுப்பேற்ற இராஜீவ் காந்தி பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டுத் தேர்தல் நடத்திட ஆணையிட்டார். அப்போது, முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுவந்தார். அந்நிலையில் பாராளுமன்றத் தேர்தலுடன் தமிழக சட்டப் பேரவைக்கும் தேர்தலை நடத்திட அதிமுக அரசு முடிவு செய்தது. அதனைத் தொடர்ந்து 15–11–1984 அன்று இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 174இன் கீழ் தமிழகத்தின் ஏழாவது பேரவை கலைக்கப்பட்டது.

### எட்டாவது பேரவை தோற்றம் – மேலவை நீக்கம்

1985 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடந்த தேர்தலில் அ.தி.மு.க. வென்றது. 16–1–1985 அன்று எட்டாவது பேரவை அமைக்கப்பட்டு 10–2–1985 அன்று எம்.ஜி.ஆர். தலைமையிலான அமைச்சரவை மூன்றாவது முறையாகப் பதவி ஏற்றது. எட்டாவது பேரவையின்போது தமிழ்நாட்டில் மேலவையை நீக்கிட 14–5–1986 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதற்கான சட்டமுன்வடிவு பாராளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேறி, குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்குப் பின்னால் இந்திய அரசுச் சட்டம் எண். 40 இன்படி 1–11–1986 முதல் மேலவை நீக்கப் பெற்றது.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவிற்குப் பின்னர் திருமதி ஜானகி இராமச்சந்திரன் அவர்கள் 7–1–1988 அன்று முதலமைச்சராகப் பொறுப்பேற்று 30–1–1988 வரை முதலமைச்சர் பொறுப்பில் இருந்தார். அப்போது அதிமுக கட்சி பிளவுபட்டதால் ஆட்சி கவிழ்ந்து, எட்டாவது பேரவை 30–1–1988 அன்று கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழகத்தில் மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### ஒன்பதாவது பேரவை

1989ஆம் ஆண்டு தமிழக சட்டப் பேரவைத் தேர்தலுக்குப் பின் 27–1–1989 அன்று ஒன்பதாவது பேரவை அமைக்கப்பட்டு, கலைஞர் மு.கருணாநிதி

அவர்கள் தலைமையிலான அமைச்சரவை அதே நாளில் பதவி ஏற்றது. இரண்டு ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், ஒன்றிய அரசின் பிரதமர் சந்திரசேகர் தோழமை கட்சிகள் தந்த அழுத்தம் காரணமாகக் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் உதவியோடு, அன்றைய ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் தி.மு.க அரசுக்கு எதிராக அறிக்கை அளித்திட மறுத்தபோதும், பிற காரணங்கள் (Otherwise) என்ற பிரிவில் திமுக ஆட்சி **30–1–1991** அன்று கலைக்கப்பட்டு தமிழ்நாட்டில் மறுபடியும் குடியரசுத் தலைவர் ஆட்சி செயல்படுத்தப்பட்டது.

### பத்தாவது பேரவை

**1991**ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்திற்கும், தமிழக சட்டப் பேரவைக்கும் சேர்ந்து தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலின்போது தமிழகத்திற்குப் பிரச்சாரத்திற்காக வந்த முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் திருப்பெரும்புதூரில் மனித வெடி குண்டினால் கொல்லப்பட்டதால்; தவறான பிரச்சாரங்கள் செய்யப்பட்டு தி.மு.க வெற்றி வாய்ப்பை இழந்தது. அ.தி.மு.க. வென்றது. அப்பொழுது பத்தாவது பேரவை **24–6–1991** அன்று அமைக்கப்பட்டு செல்வி ஜெ.ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவை அதே நாளில் பதவி ஏற்று **1996** வரை தொடர்ந்தது.

### பதினோராவது பேரவை

**1996** ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தி.மு.க. மாபெரும் வெற்றி கண்டதைத் தொடர்ந்து பதினோராவது பேரவை **13–5–1996** அன்று அமைக்கப்பட்டு கலைஞர் மு.கருணாநிதி தலைமையிலான அமைச்சரவை அதே நாளில் பொறுப்பேற்றது. அப்போது பல்வேறு புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. தகவல் தொழில்நுட்பத் தொழில்கள் பெருகின. தொழில் கல்விக்கான நுழைவுத் தேர்வு ரத்து செய்யப்பட்டது முதலான பல மகத்தான சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

### பன்னிரண்டாவது பேரவை

பன்னிரண்டாவது பேரவை **14–5–2001** அன்று அமைக்கப்பட்டு செல்வி ஜெ.ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவை அன்றே பதவி ஏற்றது. செல்வி ஜெ.ஜெயலலிதா சென்னை சிறப்பு நீதிமன்றத் தீர்ப்பின்படி ஊழல் வழக்கு ஒன்றில் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்று, பின் அப்பீல் செய்திருந்தார். **2001** பேரவைத் தேர்தலில் அவர் வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அவர் தேர்தலில் நிற்க முடியவில்லை. ஆயினும், அத்தேர்தலில் அ.தி.மு.க பெற்ற வெற்றி காரணமாக அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அதனால் ஜனதா கட்சித் தலைவர் திரு.சுப்பிரமணியன்சாமி ஊழல் வழக்கில் தண்டனை பெற்ற ஜெயலலிதா முதல்வர் பதவியில் நீடிக்கக்கூடாது என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார். அந்த வழக்கில் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு ஜெ.ஜெயலலிதா பதவி வகிப்பது சட்டவிரோதமானது என ஒருமனதாகத் தீர்ப்பளித்தது. உச்ச நீதிமன்றத்தின் அந்தத் தீர்ப்பு காரணமாக **21–9–2001** அன்று ஜெயலலிதா பதவி விலக நேர்ந்தது. அதைத் தொடர்ந்து **21–9–2001** அன்றே திரு. ஓ.பன்னீர்செல்வம் முதலமைச்சராகப் பதவியேற்றார். பின், செல்வி ஜெயலலிதா செய்த மேல்முறையீட்டைத் தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, **2–3–2002** அன்று அவர் மீண்டும் பதவி ஏற்க திரு. ஓ.பன்னீர்செல்வம் முதலமைச்சர் பதவியில் இருந்து விலகினார்.

### பதின்மூன்றாவது பேரவை

பதின்மூன்றாவது பேரவை **12.5.2006** அன்று அமைக்கப்பட்டு கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தலைமையிலான அமைச்சரவை **13–5–2006** அன்று பதவி ஏற்று **2011** மே திங்கள் வரை தொடர்ந்தது

### புதிய தலைமைச் செயலக–சட்டமன்ற வளாகம்

பதின்மூன்றாவது பேரவையின்போது சென்னை அண்ணா சாலையில் அமைந்துள்ள ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் சட்டமன்றத்திற்காகப் புதிய கட்டடம் ஒன்று கட்டுவது என முடிவு செய்யப்பட்டு **12–6–2008** அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு **13–3–2010** அன்று முதலமைச்சர் கலைஞர் தலைமையில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் வழிகாட்டும் குழுவின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள் முன்னிலையில் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. அந்தப் புதிய சட்டமன்ற வளாகத்தில் **19–3–2010** முதல் **10–2–2011** வரை **46** நாட்கள் பேரவைக் கூட்டம் நடைபெற்றது.

### பதினான்காவது பேரவை

பதினான்காவது பேரவை **14.5.2011** அன்று அமைக்கப்பட்டு செல்வி ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவை **16.5.2011** அன்று பொறுப்பேற்றது.

அவர் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்ட புதிய சட்டமன்றக் கட்டடத்தைப் புறக்கணித்துவிட்டு, புனித ஜார்ஜ் கோட்டையிலேயே சட்டப் பேரவை கூட்டங்களை நடத்தினார். அவர் சொத்துக் குவிப்பு வழக்கில் பெங்களூரு சிறப்பு நீதிமன்றம் வழங்கிய நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை காரணமாக 27–9–2014 அன்று பதவி இழந்தார். அதைத் தொடர்ந்து 29–9–2014 அன்று திரு.ஓ.பன்னீர்செல்வம் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அதன்பின்னர், மேல்முறையீட்டில் பெங்களூரு உயர்நீதிமன்றம், செல்வி ஜெயலலிதாவிற்குச் சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தண்டனையை இரத்து செய்தது. அதைத் தொடர்ந்து, அவர் 23–5–2015 அன்று மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். திரு.ஓ.பன்னீர்செல்வம் 22.5.2015 அன்று முதலமைச்சர் பதவியிலிருந்து விலகினார்.

### பதினைந்தாவது பேரவை

பதினைந்தாவது பேரவை 23.5.2016 அன்று அமைக்கப்பட்டு செல்வி ஜெ.ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவை அதே நாளில் பதவி ஏற்றது. அதன் பின்னர், முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா 5–12–2016 அன்று மறைந்ததைத் தொடர்ந்து 6–12–2016 அன்று திரு.ஓ.பன்னீர்செல்வம் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் 15.2.2017 அன்று திரு.ஓ.பன்னீர்செல்வம் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகிட எடப்பாடி திரு.கே.பழனிச்சாமி 16.2.2017 அன்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

### பதினாறாவது பேரவை

2021 ஏப்ரல் திங்களில் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் மகத்தான வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பதினாறாவது பேரவை 3–5–2021 அன்று அமைக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் திரு.முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் 7–5–2021 அன்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்கள்.

2.8.2021 அன்று மாலை 5 மணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டமன்ற நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

அப்போது, புனித ஜார்ஜ் கோட்டை பேரவை மண்டபத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் வரவேற்புரை வழங்கிட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், மேதகு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள் தலைமையில் மேதகு குடியரசுத் தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் அவர்கள் தமிழக சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்தும், தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தும் உரை நிகழ்த்திப் பெருமைப்படுத்தினார்கள்.

15–8–2021 அன்று இந்தியச் சுதந்திரத்தின் 75 ஆம் ஆண்டு விழாவையொட்டி, கோட்டைக் கொத்தளத்தில் மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முதன்முதலாகத் தேசியக் கொடியை ஏற்றிவைத்துச் சுதந்திர தின உரை நிகழ்த்தினார்கள்.

காமராஜர் சாலையில் நேப்பியர் பாலம் அருகில் 75 ஆம் ஆண்டு சுதந்திர தின விழா நினைவுத் தூண் ஒன்றை நிறுவித் திறந்துவைத்தார்கள்.

இப்படி, 1921இல் தொடங்கப்பட்டு 2021இல் நூற்றாண்டு விழா கண்ட தமிழகச் சட்டமன்றம் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு இலவசக் கல்வி, வழங்கியது, தொழிற்கல்வி நுழைவுத் தேர்வை ரத்து செய்தது, மாநிலத்திற்குத் தமிழ்நாடு எனப் பெயர் சூட்டியது, சுயமரியாதைத் திருமணம் செல்லும் எனச் சட்டம் ஆக்கியது, இரு மொழிக்கொள்கையைத் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தியது, வகுப்புவாரி கொள்கையை உயர்த்திப் பிடித்துச் சமூக நீதிக்காக 69 சதவீத இட ஒதுக்கீடுகள் வழங்கியது, நிலமற்றவர்களுக்கு இலவச நிலம் வழங்கியது, வீடு இல்லாதவர்களுக்கு இலவச வீட்டு மனை வழங்கியது, இலவசமாக வீடுகட்டித் தந்தது, கல்வி, தொழில், வேலைவாய்ப்புகளுக்கான உரிமைகள், சலுகைகள் அளித்தது, பெண்கள் முன்னேற்றம், விவசாயிகள், நெசவாளர்கள் உள்ளிட்ட தொழிலாளர் சமுதாய மேம்பாட்டிற்காக நலச் சட்டங்கள், பேருந்து போக்குவரத்து நாட்டுடைமை, தொழில் வளர்ச்சித் திட்டங்கள், சாலைகள், பாலங்கள், பிரம்மாண்டமான கட்டடங்கள், கலைச் சின்னங்கள் முதலியவற்றை ஏற்படுத்தக்கூடிய சட்டங்களையும் திட்டங்களையும் உருவாக்கித் தமிழகத்தை இந்தியாவில் முன்னணி மாநிலமாக உயர்த்தி இந்தியாவின் பிற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டும் வகையில் ஜனநாயகக் கடமைகள் ஆற்றிய மிகச் சிறந்த சட்டமன்றம் என்று புகழ் முத்திரைகள் பதித்து, இந்திய வரலாற்றில் பாராட்டுகளைத் தொடர்ந்து குவித்து வருகிறது.

# சுதந்திரத்திற்குப் பின் தமிழக சட்ட மன்றப் பேரவை கூட்டத் தொடர்கள் - ஒரு கண்ணோட்டம்

| வ. எண். | பேரவைகள் விவரம் | பேரவை தொடங்கிய நாள் | பேரவை முடிவுற்ற நாள் | பேரவை கூட்டத் தொடர் எண்ணிக்கை | பேரவை கூடிய மொத்த நாட்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | முதல் ( 1952 – 1957 ) | 3–5–1952 | 27–12–1956 | 9 | 314 |
| 2 | இரண்டாவது ( 1957 – 1962 ) | 29–4–1957 | 15–12–1961 | 10 | 305 |
| 3 | மூன்றாவது ( 1962 – 1967 ) | 29–3–1962 | 9–11–1966 | 9 | 252 |
| 4 | நான்காவது ( 1967 – 1971 ) | 15–3–1967 | 2–12–1970 | 9 | 195 |
| 5 | ஐந்தாவது ( 1971 – 1976 ) | 22–3–1971 | 12–11–1975 | 14 | 325 |
| 6 | ஆறாவது ( 1977 – 1980 ) | 4–7–1977 | 13–2–1980 | 6 | 179 |
| 7 | ஏழாவது ( 1980 – 1984 ) | 19–6–1980 | 15–10–1984 | 9 | 301 |
| 8 | எட்டாவது ( 1984 – 1988 ) | 25–2–1985 | 28–1–1988 | 6 | 175 |
| 9 | ஒன்பதாவது ( 1989 – 1991 ) | 6–2–1989 | 25–1–1991 | 6 | 104 |
| 10 | பத்தாவது ( 1991 – 1996 ) | 1–7–1991 | 1–3–1996 | 11 | 218 |
| 11 | பதினொன்றாவது ( 1996 – 2001 ) | 22–5–1996 | 2–2–2001 | 11 | 258 |
| 12 | பன்னிரண்டாவது ( 2001 – 2006 ) | 22–5–2001 | 27–1–2006 | 12 | 182 |
| 13 | பதின்மூன்றாவது ( 2006 – 2011 ) | 17–5–2006 | 10–2–2011 | 15 | 220 |
| 14 | பதினான்காவது ( 2011 – 2016 ) | 23–5–2011 | 20–2–2016 | 11 | 191 |
| 15 | பதினைந்தாவது ( 2016 – 2021 ) | 25–5–2016 | 27–2–2021 | 10 | 162 |
| 16 | பதினாறாவது ( 2021 – ) | 11–5–2021 | 24–6–2021 | 1 | 5 |




தமிழ் வாழ்க

# சட்டமன்றப் பேரவை
## நடைபெற்ற இடங்கள்

சென்னை புனித ஜார்ஜ் கோட்டை 1640–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அது ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிக மையமாக முதலில் செயல்பட்டு, காலப்போக்கில் படிப்படியாகக் கம்பெனியின் நிருவாகத் தலைமையிடமாக மாறியது. 1687 முதல் 1692 வரை கோட்டைக்குப் பொறுப்பேற்றிருந்தவர் திரு.யேல் என்பவர். அவர் பேரவை மண்டபத்தை உள்ளடக்கிய கோட்டை இல்லத்தில் வாழ்ந்து வந்தார். அந்த இல்லம் 1694–1695–ல் இடிக்கப்பட்டு, ஆளுநருக்காக அங்கே மூன்றடுக்குக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டது. அதுவே இன்றைய தலைமைச் செயலகக் கட்டடமாகும். இதன் பக்கவாட்டில் உள்ள கட்டடங்கள் பிற்காலத்தில் கட்டப்பட்டு இதனுடன் சேர்க்கப்பட்டன.

### மூன்று மாகாணங்கள் :

இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகள் மதராஸ் மாகாணம், பம்பாய் மாகாணம், கொல்கத்தா மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்களாக அமைக்கப்பட்டன. பின்னர் 1773–ஆம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, மாகாணங்களின் ஆளுநர்களுக்குச் சட்டமியற்றும் அதிகாரம் வழங்கப்பட்டது.

### ஆளுநரின் நிர்வாகச் சபையும் பட்டயச் சட்டமும்

இந்தியாவில் 1799 முதல் சட்டமியற்றும் அதிகாரம் கொண்ட ஆளுநரின் நிருவாகச் சபை என்ற ஓர் அமைப்பு இருந்து வந்தது; எனினும் 1833–ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர்தான் சட்டமன்றம் என்ற அமைப்பு முறைப்படுத்தப்பட்டது.

இதன்மூலம் மாகாண ஆளுநர்களின் சட்டமியற்றும் அதிகாரங்கள் கவர்னர் ஜெனரலின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. 1853–ஆம் ஆண்டு பட்டயச் சட்டத்தின்படி கவர்னர் ஜெனரலின் சபை உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

### கம்பெனி நிர்வாகம் முடிவடைந்து இங்கிலாந்து அரசின் நேரடி நிர்வாகம்

1857–ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணி பிரகடனத்தின்மூலம் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகத்திலிருந்த இந்திய நாட்டின் பகுதிகள் இங்கிலாந்து மகாராணியின் நேரடி ஆட்சிக்குக் கொண்டுவரப்பட்டது, கம்பெனியின் பொறுப்புகளை இங்கிலாந்து பாராளுமன்றம் எடுத்துக்கொண்டது.

1861–ஆம் ஆண்டு இந்தியச் சட்டமன்றங்கள் சட்டத்தின்படி, மாகாணங்களின் சட்டமியற்றும் அதிகாரம் திரும்ப அளிக்கப்பெற்று, ஆளுநரின் கவுன்சிலில் அரசு தலைமை வழக்குரைஞர் மற்றும் 8 உறுப்பினர்கள் வரை நியமிக்கப்பட வகை செய்யப்பட்டது.

### இந்தியச் சட்டமன்றங்கள் சட்டம் 1892

1892–ஆம் ஆண்டு இந்தியச் சட்டமன்றங்கள் சட்டத்தின்படி, மதராஸ் சட்டமன்றத்தின் கூடுதல் உறுப்பினர் எண்ணிக்கை 20 ஆக உயர்த்தப்பட்டது. மின்டோ–மார்லி சீர்திருத்தங்களின் அடிப்படையில் 1909–ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தினால் சட்டமன்ற உறுப்பினர்கள் முழுவதுமாக நியமிக்கப்படும் முறை சற்று மாறினாலும், மக்களால் நேரடியாக உறுப்பினர்கள் பெருமளவு தேர்ந்தெடுக்கப்படும் வழக்கம் நடைமுறைக்கு வரவில்லை; எனினும், சட்டமன்றத்தில் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 20–லிருந்து 50–ஆக உயர்த்தப்பட்டதோடு, சட்டமன்றத்தில் அதிக எண்ணிக்கையில் இந்தியர்கள் இடம்பெறவும் இச்சட்டம் வழி செய்தது.

### புனித ஜார்ஜ் கோட்டையில் சட்டமன்றத்திற்கென புதிய கட்டடம்

உறுப்பினர் எண்ணிக்கை 50 என அதிகரித்ததை அடுத்து, சட்டமன்றத்திற்கெனப் புதிய கட்டடம் புனித ஜார்ஜ் கோட்டையில் 1910–ஆம் ஆண்டு கட்டப்பட்டது. பிரெஞ்சுக்காரர்கள் 1759இல் கோட்டையை முற்றுகையிட்டபோது எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் 1761–ல் திரும்பப் பெறப்பட்ட 32 கரும்படிகத் தூண்களில் 20 தூண்கள் இக்கட்டடத்தில் நிறுவப்பட்டு, அதன் தோற்றத்திற்கு இன்று வரை அவை அழகூட்டி வருகின்றன.

1911 அக்டோபர் 31 ஆம் நாள் நடைபெற்ற கூட்டத்தில் அப்போதைய ஆளுநர் சர் ஆர்தர் லாலி மற்றும் அவரது கவுன்சில் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### இந்திய அரசுச் சட்டம் 1919–இன்படி நூற்றாண்டு விழா கண்ட சட்டமன்றத்தின் தோற்றம்

1919–ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி சென்னை மாகாணத்தில் முதன்முறையாகத் தேர்தல்கள் நடைபெற்று அமைக்கப்பட்ட சட்டமன்றம், 127 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

### முதல் சட்டமன்றம் கூடிய இடம்

புனித ஜார்ஜ் கோட்டை சட்டமன்ற மண்டபத்தில் இம்மன்றம் 1921–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 12-ஆம் நாள் கன்னாட் கோமகன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அதுதான் முதல் சட்டமன்றம். அந்தச் சட்டமன்றத்திற்குத்தான் தற்போது நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

அந்தச் சட்டமன்ற மண்டபத்திற்கு 6–3–1922–ஆம் நாளன்று சென்னை மாகாண ஆளுநர் விலிங்டன் பிரபு மற்றும் அவரது துணைவியார் வருகை தந்து பேரவைத் தலைவர் அமரும் அழகிய இருக்கையைப் பரிசளித்தனர்.

### இரண்டாம் இடமாக பல்கலைக் கழகச் செனட் மண்டபத்தில் பேரவைக் கூட்டம்

1935–ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி சட்டமன்றத்தில் பேரவை, மேலவை எனச் சென்னை மாகாணத்தில் இரண்டு அவைகள் முதன் முதலில் அமைந்தன. அந்தச் சட்டப்படி நடைபெற்ற 1937 தேர்தலுக்குப் பின்னர் 14.7.1937 அன்று அமைந்த இராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 127ஆக இருந்தது. அதனால் அப்பேரவையின் கூட்டங்கள் 1937–ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவை (செனட்) மண்டபத்தில் நடைபெற்றது. ஆக தமிழகச் சட்டப்பேரவை முதன்முதல் கூடிய நாள் 14.7.1937 இதைக் கணக்கில் வைத்தே பேரவையின் பொன்விழா, வைரவிழாக்கள் கொண்டாடப்பட்டன. 31–8–1937 அன்று செனட் மண்டபத்தில் நடைபெற்ற இரு அவை உறுப்பினர்களும் பங்குகொண்ட முதல் கூட்டுக் கூட்டத்தில் மேலவைத் தலைவர் திரு.யு.இராமாராவ் தலைமையில், அவரது இருக்கைக்கு அருகில் பேரவைத் தலைவர் திரு.புலுசு சாம்பமூர்த்தி அமர்ந்திருக்க, ஆளுநர் உரை மிகச் சுருக்கமாக ஆற்றப்பெற்றது. காங்கிரஸ் கட்சியின் கொள்கையின்படி, அரசமைப்பு நிர்ணய சபை வேண்டுமென்ற தீர்மானத்தை முதல் நாள் பேரவைக் கூட்டத்திலேயே இராஜாஜி அவர்கள் முன்மொழிந்தார். 1–9–1937 அன்று முதலமைச்சர் இராஜாஜி அவர்கள் முதல் நிதிநிலை அறிக்கையைச் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்தார். 14–7–1937 முதல் 24–12–1937 வரை பேரவைக் கூட்டம் செனட் மண்டபத்தில் நடைபெற்றது.

### சட்டமன்றம் கூடிய மூன்றாம் இடம்

27–1–1938 முதல் 26–10–1939 வரை பேரவையின் கூட்டம் அரசினர் தோட்டத்திலுள்ள இராஜாஜி மண்டபம் என்று பின்னர் பெயரிடப்பட்ட, விருந்தளிப்பு மண்டபத்தில் (Banquet Hall) நடைபெற்றது.

அப்போது புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள மண்டபத்தில் சட்டமன்ற மேலவை மட்டும் நடைபெற்று வந்தது.

### இராஜாஜி பதவி விலகினார்

இரண்டாம் உலகப் போரில் இந்தியாவை ஈடுபடுத்துவது குறித்து இங்கிலாந்து அரசு எடுத்த நிலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து காந்தியடிகளின் அறிவுரைப்படி ஆட்சியில் இருந்த இராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் அமைச்சரவை 29–10–1939–இல் இராஜிநாமா செய்தது. அதனால் 30–4–1946 வரை மாகாணத்தில் ஆளுநரின் ஆட்சி நடைபெற்றது. இடையில் 1–10–1945 அன்று சட்டமன்றப் பேரவை ஆளுநரால் கலைக்கப்பட்டது. மேலவை என்ற அமைப்பு தொடர்ந்து இருந்தாலும் கூட்டங்கள் நடைபெறவில்லை.

### 1946–தேர்தலுக்குப் பின் புனித ஜார்ஜ் கோட்டையில் பேரவைக் கூட்டம் :

1946–இல் மாகாண சட்டசபைக்குத் தேர்தல் நடைபெற்ற பின்னர் பேரவை 24–5–1946 முதல் 27–5–1952 வரை மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்த சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் கூடியது. அதன் அருகிலிருந்த நிருவாக சபை மண்டபம் விரிவுபடுத்தப்பட்டு மேலவை மண்டபமாகச் செயல்பட்டது.

### 1952 முதல் பொதுத் தேர்தல் – நான்காம் இடமாக அரசினர் தோட்டத்தில் பேரவைக்குப் புதிய மண்டபம்

இந்திய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு, இந்தியா குடியரசாக மலர்ந்த பின்னர் 1952–ஆம் ஆண்டு, முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அன்றைய சென்னை மாகாணம் என்பது இன்றைய தமிழகம், தற்போதைய ஒடிசா, கர்நாடகம், கேரளம், ஆகிய மாநிலங்களில் உள்ள சில பகுதிகளும் முன்னாள் ஐதராபாத் சமஸ்தானம் நீங்கிய ஆந்திர மாநிலம் முழுவதும் அடங்கிய மாகாணம். இந்த அனைத்துப் பகுதிகளிலும் 21 வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டு, 375 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புனித ஜார்ஜ் கோட்டை சட்டப் பேரவை மண்டபத்தில் 375 உறுப்பினர்களும் அமர இடவசதி இல்லாததால் சட்டமன்றப் பேரவை, சென்னை அரசினர் தோட்டத்தில் ரூ.10 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டது. அந்தப் பேரவை மண்டபத்தை 2–5–1952 அன்று ஆளுநர் ஸ்ரீபிரகாசா திறந்து வைத்தார். அந்தப் புதிய சட்டமன்றக் கட்டடத்தில் பேரவை 3–5–1952 முதல் 27–12–1956 வரை அப்பேரவைக் காலம் முழுவதும் கூடியது.

### 1957–க்குப் பின் புனித ஜார்ஜ் கோட்டையில் மீண்டும் பேரவைக் கூட்டம்

1–10–1953 அன்று ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டது. 1.11.1956 அன்று மொழிவாரி மாநிலங்கள் அமைந்து, தொகுதி மறுவரையறை செய்யப்பட்ட பின்னர் சென்னை மாநிலம் தனியே அமைந்தது. அதனால், சென்னை மாநிலத்திற்கு 1957–ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது உறுப்பினர் எண்ணிக்கை 205 ஆகக் குறைந்தது.

1957சட்டமன்றத் தேர்தலுக்குப்பின் பேரவைக் கூட்டம் 29–4–1957–ஆம் நாள் முதல் மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்திலேயே நடத்தப்பட்டது.

புனித ஜார்ஜ் கோட்டையில் இருந்த சட்டமன்றப் பேரவை செவ்வக வடிவில் அமைந்தது. தென்புறம் அமைந்த பேரவைத் தலைவர் இருக்கைக்கு இருபுறமும் தலா ஏழு வரிசைகளில் மொத்தம் 6 பிளாக்குகளாக, படிப்படியாக உயரும் இருக்கைகள் உறுப்பினர்களுக்கென அமைக்கப்பட்டிருந்தன. சென்னை அரசினர் தோட்டத்தில் 1952–ஆம் ஆண்டில் கட்டப்பட்ட சட்டமன்றக் கட்டடத்தில் அமைக்கப்பட்ட நவீன இருக்கைகள் மற்றும் ஒலிபெருக்கி சாதனங்கள் புனித ஜார்ஜ் கோட்டை சட்டமன்றப் பேரவை மண்டபத்திற்குக் கொண்டுவரப்பட்டு பொருத்தப்பட்டன. பேரவை மாடங்கள் மறு வடிவமைப்பு செய்யப்பட்டன. அரசினர் தோட்டத்திலிருந்த பழைய சட்டமன்றக் கட்டடம் முதலில் பாலர் அரங்கம் என்றும், பின்னர் கலைவாணர் அரங்கம் என்றும் பெயர் கொண்டது.

### மூன்று பார்வையாளர் மாடங்கள்


புனித ஜார்ஜ் கோட்டை பேரவை மண்டபத்திற்கு மேல்புறம் உப்பரிகையில் மூன்று பார்வையாளர் மாடங்கள் இருந்தன. பேரவைத் தலைவர் இருக்கைக்கு எதிர்ப்புறம் மேலே அமைந்துள்ள மாடம் பேரவைத் தலைவர் மாடம் என அழைக்கப்பட்டது. இடப்புறம் அமைந்திருந்த மாடத்தின் ஒரு பகுதி பெண்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்தது. பேரவைத் தலைவர் இருக்கைக்கு நேர்மேலே அமைந்த மாடம் பேரவை நடவடிக்கைகளை ஆளுநர் அமர்ந்து பார்க்க ஏதுவாக அமைக்கப்பட்டு, "ஆளுநர் மாடம்" என அழைக்கப்பட்டது. அதே வரிசையில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மேலவை உறுப்பினர்களும் அமரக்கூடிய மாடங்களும் உள்ளன. 1957–ல் மறுசீரமைப்புக்குப் பின் பார்வையாளர்கள் மாடத்தில் 190 ஆண்களும், 42 பெண்களும், பேரவைத் தலைவர் மாடத்தில் 48 பேரும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கியமானவர்கள் அமரும் மாடத்தில் 12 பேரும் அமர இட வசதி செய்யப்பட்டிருந்தது.

பேரவைத் தலைவர் இருக்கைக்கு வலதுபுறம் தலைமைச் செயலக மற்றும் துறை அலுவலர்கள் அமருவதற்கான அலுவலர் மாடம் அமைக்கப்பட்டிருந்தது. பேரவையின் புறத் தாழ்வாரத்திலிருந்து அதற்கு வழி அமைக்கப்பட்டிருந்தது.









### பத்திரிகையாளர்களுக்கு இருக்கை வசதிகள்

1957–க்கு முன்னர் பத்திரிகையாளர்களுக்குக் குறைந்த அளவிலான இருக்கை வசதிகளே பேரவையில் செய்யப்பட்டிருந்தது. எனவே, பேரவைத் தலைவர் இருக்கைக்கு இடது புறம் ஏற்கெனவே இருந்த இடங்களோடு மேற்குப் புறத்திலும், பேரவைத் தலைவர் இருக்கைக்கு வலதுபுறத்தில் அலுவலர்கள் மாடத்தையொட்டிய பகுதியிலும் கூடுதல் இடங்கள் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டன. மேலும், மேற்குப் புறமிருந்த பார்வையாளர் மாடத்தில் முதல் வரிசையும் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. பேரவைச் செயலகத்தால் அடையாள அட்டை வழங்கப்பட்ட பத்திரிகையாளர்கள் பேரவை நடவடிக்கைகளைப் பார்வையிட்டுச் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். அடையாள அட்டை வழங்கும் பணியில் உதவுவதற்காக பத்திரிகையாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட பத்திரிகை ஆலோசனைக் குழு ஒன்றை அமைப்பதென 1957–ஆம் ஆண்டு பேரவைத் தலைவரால் முடிவு செய்யப்பட்டது. பேரவையில் பத்திரிகையாளர்களுக்கு இருக்கைகளை ஒதுக்குவது குறித்து இக்குழு பேரவைத் தலைவருக்குப் பரிந்துரைகளைச் செய்கிறது.

இம்மண்டபத்தில் பேரவையின் முதல் ஐந்து கூட்டத் தொடர்கள் 29–4–1957 முதல் 30–3–1959 வரை நடைபெற்றன.

### ஐந்தாவது இடத்தில் பேரவைக் கூட்டம் உதகமண்டலம் அரண்மூர் மாளிகையில் 6வது பேரவைக் கூட்டத் தொடர்

பேரவையின் அலுவல் ஆய்வுக் குழு முடிவிற்கிணங்க, பேரவையின் ஆறாவது கூட்டத் தொடர் 20–4–1959 முதல் 30–4–1959 வரை உதகமண்டலத்திலுள்ள அரண்மூர் மாளிகையில் 9 நாட்கள் நடைபெற்றது. அங்கு, சட்டமன்ற மேலவை 4–5–1959 முதல் 9–5–1959 வரை 6 நாட்கள் நடைபெற்றது.

### மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் பேரவைக் கூட்டம்

31–8–1959 முதல் பேரவை தொடர்ந்து புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்திலேயே கூடிவந்துள்ளது. 1957 முதல் கோட்டையிலுள்ள சட்டமன்ற மண்டபத்தில் பேரவை மீண்டும் நடைபெறத் தொடங்கியபோது, அதன் அருகிலேயே விரிவாக்கப்பட்ட மேலவை மண்டபத்தில் மேலவையின் கூட்டம், 1986–இல் மேலவை கலைக்கப்படும் வரை நடைபெற்றது.

பதின்மூன்றாவது பேரவையின் பன்னிரண்டாவது கூட்டத் தொடரின் நிறைவு நாளான 11–1–2010 வரை புனித ஜார்ஜ் கோட்டையில் பேரவை கூடியது.

### ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் ஆறாவது இடமாக புதிய சட்டமன்ற வளாகம்

புனித ஜார்ஜ் கோட்டை வளாக சட்டமன்றத்தில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டதை தொடர்ந்து, புதிய சட்டமன்ற வளாகம் கட்டப்பட வேண்டுமெனும் தேவை எழுந்தது. அதன் காரணமாக, அரசு முடிவு செய்தபடி ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வடிவமைத்துக் கட்டிய புதிய சட்டமன்ற வளாகக் கட்டடம் 13.3.2010 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் திருமதி சோனியா காந்தி அவர்களின் முன்னிலையில் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் திறந்து வைத்தார்கள். அதன் பின் பதின்மூன்றாவது பேரவையின் கூட்டத் தொடர் 19–3–2010 முதல் 10–2–2011 வரை 46 நாட்கள் ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் திறக்கப்பட்ட புதிய சட்டமன்றக் கட்டடத்தில் பேரவைக் கூட்டம் நடைபெற்றது.

### மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் பேரவைக் கூட்டங்கள்

2011 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தது. முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா முடிவின்படி பதினான்காவது பேரவை புனித ஜார்ஜ் கோட்டையில் 14.5.2011 அன்று தொடங்கி, அதன் காலம் முழுவதும் நடைபெற்றது. அதேபோல, 2016 தேர்தலில் வென்ற பின்பும் பதினைந்தாவது பேரவையின் கூட்டம் 15–5–2016 முதல் தொடங்கி 24–3–2020 வரை புனித ஜார்ஜ் கோட்டையிலேயே நடைபெற்றது.

### புதிய கலைவாணர் அரங்கில் பேரவைக் கூட்டங்கள்

உலகையே அச்சுறுத்தி லட்சக்கணக்கான உயிர்களைப் பலிகொண்ட கொரோனா நோய்த் தொற்று காரணமாகப் பேரவையை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் கலைவாணர் அரங்கில் நடத்திட அ.தி.மு.க. அரசு முடிவு செய்தது. அதன்படி 14–9–2020 முதல் 27.2.2021 வரை பேரவைக் கூட்டங்கள் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள கலைவாணர் அரங்கத்திலேயே நடைபெற்றன.

### 2021–இல் 16–வது பேரவைக் கூட்டங்கள்

**2021 சட்டமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்று 6வது முறையாக ஆட்சியமைத்தது.**

**திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் 7–5–2021 அன்று கிண்டி ஆளுநர் மாளிகையில் முதல்முறையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்கள்.**

11–5–2021 அன்று மாண்புமிகு பேரவை உறுப்பினர் பதவியேற்பு நிகழ்ச்சியும் 12–5–2021 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர்கள் பதவியேற்பும் நிகழ்ந்தன.

21–6–2021 அன்று மேதகு ஆளுநர் உரை நிகழ்த்தினார்.

22–6–2021 முதல் 24–6–2021 வரை ஆளுநர் உரை மீதான விவாதம் நடைபெற்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 24–6–2021 அன்று ஆளுநர் உரை விவாதத்திற்குப் பதிலுரை வழங்கினார்கள்.

13–8–2012 அன்று 2021–2022 நிதியாண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையும், 14–8–2021 அன்று வேளாண்மை நிதிநிலை அறிக்கையும் அவையில் அளிக்கப்பட்டன.

16–8–2021 முதல் 19–8–2021 வரை 2021–2022 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை, வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியனமீது விவாதங்கள் கலைவாணர் அரங்கிலேயே நடைபெற்றன.

23–8–2021 முதல் 13–9–2021 வரை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்கள் நடைபெற்றன. 8–9–2021 அன்று பேரவை மாலையிலும் கூடியது.

இப்படித் தமிழக சட்டப் பேரவைக் கூட்டங்கள்

1. புனித ஜார்ஜ் கோட்டை 2. பல்கலைக் கழகச் செனட் மண்டபம் 3. உதகமண்டலம் அரண்மூர் மாளிகை 4. இராஜாஜி மண்டபம் 5. அரசினர் தோட்டத்தில் புதிய சட்டமன்றக் கட்டடம் 6. ஓமந்தூரார் தோட்டம் புதிய சட்டமன்றக் கட்டட வளாகம். 7. புதிய கலைவாணர் அரங்கக் கட்டடம் என 7 இடங்களில் நடைபெற்றுள்ளன. எனினும், 1921 முதல் 1937 வரை 1946 முதல் 1952 வரை, 1957 முதல் 2010 வரை, 2011 முதல் 14–9–2020 வரை எனப் பல ஆண்டுகள் பேரவைக் கூட்டங்கள் புனித ஜார்ஜ் கோட்டையிலேயே நடைபெற்றுள்ளன.

# சட்டமன்ற உறுப்பினர் விடுதிகள்

சென்னைமாகாணத்தின், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சட்டமன்றத்திற்கு வரும் உறுப்பினர்களின் அல்லல்களைக் குறைக்கும் வகையில் அவர்களுக்குத் தங்கும் விடுதிகள் கட்டிக் கொடுக்க அரசு முடிவு செய்தது. அதன்படி சில, பழைய கட்டடங்களை ஏற்பாடு செய்ததுடன் புதிய கட்டடங்களையும் கட்டித் தந்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவிகள் செய்தது. அப்படி அமைக்கப்பட்ட விடுதிகள் :

### 1. சட்டமன்ற உறுப்பினர் பழைய விடுதி

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் இருந்த அட்மிரால்டி ஹவுஸ் என அழைக்கப்படும் சட்டமன்ற உறுப்பினர் பழைய விடுதி, 1749 ஆம் ஆண்டிற்கு முன் கட்டப்பட்டது. தரை மற்றும் மூன்று தளங்களைக் கொண்ட அக்கட்டடத்தின் கதவுகள், சாளரங்கள், படிக்கட்டுகள் ஆகியவை பர்மா தேக்கு, கருங்காலி முதலிய உயர் வகை மரங்களால் அமைக்கப்பட்டிருந்தன.

கி.பி.18ஆம் நூற்றாண்டில் சுல்தான் தாவீது என்பவரிடமிருந்து அந்தக் கட்டடத்தைக் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்த லார்ட் தாமஸ் ரூம்பால்ட் என்பவர் வாங்கி தோட்ட வீடு எனப் பெயரிட்டுப் பயன்படுத்தி வந்தார்.

இராபர்ட் கிளைவ் மகன் லார்டு எட்வர்டு கிளைவ் காலத்தில் அக்கட்டடம் விரிவுபடுத்தப்பட்டு அட்மிரால்டி ஹவுஸ் என அழைக்கப்பட்டது.

அதன் பின்னர், லார்ட் எட்வர்டு கிளைவ் காலத்தில் அக்கட்டடத்தின் சுற்றுப்புறத்திலுள்ள குடியிருப்புகளை அப்புறப்படுத்தி விரிவுபடுத்தப்பட்டு, ‘அட்மிரால்டி ஹவுஸ்’ என்றழைக்கப்பட்டு வந்தது. இத்தோட்ட வீடானது, 1797–1798இல் ஆளுநரின் முதல் அலுவலக வீடாகப் பயன்படுத்தப்பட்டது.

1946இல் கிண்டி ராஜ்பவன் மாளிகைக்கு ஆளுநர் இல்லம் மாற்றப்பட்டபின் சட்டமன்றப் பேரவை –மேலவை உறுப்பினர்களின் விடுதியாகப் பயன்படுத்தப்பட்டு, பின்னாளில் சட்டமன்ற உறுப்பினர் பழைய விடுதி என அழைக்கப்பட்டது.

இந்தக் கட்டடத்தின் பிரதான அறைகளில் 1985மே வரை சட்டமன்றக் கட்சிகளின் அலுவலகங்கள் இயங்கி வந்தன.

இக்கட்டடத்தில் 3.12.1994 முதல் காவல்துறை கூடுதல் இயக்குநர் அலுவலகம், குற்றப் புலனாய்வுத் துறை தலைமை அலுவலகம் ஆகியவை செயல்பட்டு வந்தன. அதன் முக்கியப் பகுதிகள் சிதைந்த நிலையில் அக்கட்டடம் 2008இல் இடிக்கப்பட்டது.

ஏ, பி, சி, டி – என 4 கட்டடங்கள்
தலா 10 தளங்கள் 240 குடியிருப்புகள்



### 2. பெருந்தலைவர் காமராஜர் காலத்தில் புதிய சட்டமன்ற உறுப்பினர் விடுதி

1956–1957 ஆம் ஆண்டில் சென்னை மாகாண முதலமைச்சர் பெருந்தலைவர் கு.காமராஜ் அவர்களின் ஆணைக்கிணங்க ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் ரூ.1.42 கோடி செலவில் சட்டமன்ற உறுப்பினர் விடுதி (Erstwhile New Legislators Hostel) கட்டப்பட்டது. இந்த விடுதி கீழ்த்தளம் மற்றும் இரு தளங்களுடன் மொத்தம் 105 அறைகளைக் கொண்டிருந்தது.

இவ்விடுதி 2000 ஆண்டிற்குப் பின் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் தங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது. அது புதிய சட்டமன்றப் பேரவை வளாகம் கட்டப்படுவதற்காக 2008ஆம் ஆண்டு இடிக்கப்பட்டது.

### 3. அண்ணா காலத்தில் அடுக்குமாடி சட்டமன்ற உறுப்பினர் விடுதி

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் 5.1.1968 அன்று முதலமைச்சர் பேறிஞர் அண்ணா அவர்களால் புதிய அடுக்குமாடி சட்டமன்ற உறுப்பினர் விடுதி (Multi Storeyed Legislators' Hostel) கட்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. கீழ்த்தளம் மற்றும் 6 தளங்கள் கொண்ட எழிலார்ந்த அடுக்குமாடி சட்டமன்ற உறுப்பினர் விடுதியின் கட்டுமானப் பணி 1967ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 3 கோடியே 76 லட்சத்து 46 ஆயிரம் ரூபாய்ச் செலவில் ஓராண்டில் கட்டி முடிக்கப்பட்டது.

1968 முதல் 12.6.2000 வரை இவ்விடுதியில் உறுப்பினர்கள் தங்கி வந்தனர். பின்னர் இந்த விடுதி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் விருந்தினர்கள், வெளி மாநிலச் சட்டமன்றக் குழுவினர் தங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது. பின்னர் கட்டடம் பழுதடைந்ததால் இடிக்கப்பட்டு; அந்த இடத்தில் முன்னாள் உறுப்பினர்கள் வெளியூரில் இருந்து வந்தால் தங்குவதற்கு வசதியாகப் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

### 4. கலைஞர் காலத்தில் கட்டப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகம்

முத்தமிழறிஞர் கலைஞர் 1996இல் ஆட்சிப் பொறுப்பேற்றபின் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய குடியிருப்பு வளாகம் ஒன்றைக் கட்டுவதற்குத் திட்டமிட்டார். அதன்படி 5.36 ஏக்கர் நிலத்தில் 44 கோடியே 61 லட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 240 அடுக்கு மாடி குடியிருப்புகள் ஹட்கோ நிறுவனக் கடன் உதவியுடன் கட்டுவதற்கு 19.3.1997 அன்று நிர்வாக அனுமதி வழங்கினார்.

ஏ, பி, சி, டி என்னும் நான்கு கட்டடங்கள் – ஒவ்வொரு கட்டடத்திலும் 10 தளங்கள், ஒவ்வொரு தளத்திலும் இரு படுக்கை அறைகள் கொண்ட 6 குடியிருப்புகள் மொத்தம் 60 வீடுகள் 1553 சதுர அடி பரப்பளவு கெண்ட 240 குடியிருப்புகள் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கட்டிமுடிக்கப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 12–6–2000 அன்று இந்தக் குடியிருப்பு வளாகத்தைத் திறந்து வைத்தார்கள். அந்த வளாகம் சிறந்த முறையில் இன்றுவரை பயன்பட்டு வருகின்றது.

### 2009 இல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான உடற்பயிற்சிக் கூடம்

இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்த காலத்தில் இந்தக் குடியிருப்பு வளாகத்தில் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கான புதிய தொழில்நுட்பங்களுடன்கூடிய உடற்பயிற்சிக் கூடம் அமைக்கப்பட்டு 16.7.2009 அன்று திறந்து வைக்கப்பட்டது.

### 2021 இல் இறகுப் பந்து விளையாட்டுத் திடல்

சட்டமன்ற உறுப்பினர்களின் நலனில் அரசு கொண்டுள்ள அக்கறையைப் புலப்படுத்தும் வகையில் ஓமந்தூரார் அரசினர் வளாகத்தில் சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்புப் பகுதியில் இறகுப் பந்து விளையாட்டு மையம் ஒன்றை அமைத்து, அதனை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13–9–2021 அன்று மாலையில் திறந்துவைத்தார்கள்.

அத்துடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பேரவை உறுப்பினர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களுடனும் மாண்புமிகு காலநிலை மாற்றம் சுற்றுப்புறச் சூழல் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோருடனும் சற்று நேரம் இறகுப் பந்து விளையாட்டில் கலந்து கொண்டு எல்லோருக்கு மகிழ்ச்சியையும், விளையாட்டில் ஆர்வத்தையும் ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

# பார் போற்றும் ஞாயிறு

மு.க. ஸ்டாலின்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

வரலாற்று மாட்சி கொண்ட தமிழ்நாடு சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவும், தமிழுக்கும், தமிழர்களுக்கும், தமிழ்நாட்டுக்கும் அளப்பரிய தொண்டாற்றிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது திருவுருவப் படத் திறப்பு விழாவும், ஒருங்கே கொண்டாடப்பட்ட இவ்வேளையில், விழாவிற்குப் பெருமை சேர்க்கும் வகையில் விழா மலர் வெளியிடப்படுவது சட்டமன்றத் தகைமைக்குரிய ஒன்றாகும்.

நூற்றாண்டு விழாக் காணும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குப் பல சிறப்புகள் உண்டு. 1921–இல் இடஒதுக்கீடு ஆணையை நீதிக்கட்சி பிறப்பித்தது, மகளிருக்கு வாக்குரிமை அளித்தது, இந்தச் சட்டசபையின் தொடக்க காலத்தில்தான். 1967–இல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகுதான் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று நமது மாநிலத்துக்குஇருந்த அந்தப்பெயரைத்தமிழ்மணம்கமழ,தமிழ்த்தாய்உளம்மகிழ, 'தமிழ்நாடு'



என்று பெயர் மாற்றித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 'தமிழர் தந்தை' சி.பா.ஆதித்தனார் அவர்கள் பேரவைத் தலைவராக இருந்த அக்காலத்திலிருந்துதான் திருக்குறளைத் தொடக்கவுரையாகப் படித்து, அதன் பொருளையும் கூறி அவையைத் தொடங்கும் முறை கொண்டு வரப்பட்டது. சமூகநீதிக் கொள்கைகளை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் தொடர்ந்து விளங்கி வந்துள்ளது. அதற்கான ஒரு தொடக்கப்புள்ளிதான் 1921 ஆம் ஆண்டு அமைந்த சட்டமன்றமும், நீதிக்கட்சி ஆட்சியும். அதன் நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாடு கொண்டாடுவது மிகவும் பொருத்தமானது.

தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றின் இந்த நூறாண்டுகளில், அறுபது ஆண்டு காலத்துக்கும் மேலாக, அதன் ஓர் அங்கமாய்ப் பல்வேறு பொறுப்புகளில் இருந்து, "இதற்கு முன்பு இவர் போல் யாரும் இருந்ததில்லை; இனி எவர் ஒருவரும் இவர் போல் தோன்ற முடியாது" என்ற சாதனைச் சரித்திரத்தைச் சட்டமன்றத்தில் படைத்து, தரணியில் தனக்கெனத் தனி முத்திரை பதித்த, தனித்துவம் வாய்ந்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது திருவுருவப் படம், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தை இன்றைக்கு அலங்கரிக்கிறது!

தமிழ்நாடு சட்டமன்றத்தில் தன்னிகரற்ற தமிழாய் மலர்ந்து, முத்தமிழாய் வளர்ந்து, மூத்த தமிழாய்த் திகழ்ந்த தலைவர் கலைஞர் அவர்கள், பேரவையில் நுழைந்த நாள்தான் தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் ஒரு பொன்னாள்; சரித்திரத்தில் என்றென்றும் நிலைத்திருக்கும் ஒரு இனிய நன்னாள். தமிழ்நாடு சட்டமன்றத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரைகள், நிறைவேற்றிய திட்டங்கள், எதிர்வரும் அரசுகளுக்கும், வருங்காலங்களில் இங்கே அமரப்போகும் உறுப்பினர்களுக்கும் பாடமாக விளங்கும்.

தமிழ்நாடு சட்டமன்றத்தின் வரலாற்றில் அங்கம் வகித்துப் பொன்விழாக் கண்ட கலைஞர் அவர்களுக்குச் சட்டமன்றத்தில் நடந்த பாராட்டு விழாவின் போது அவர் பேசிய பேச்சுகள் இன்றும் என் நெஞ்சில் நிழலாடுகின்றன.

'இந்த மன்றத்தைப் பல ஆண்டுக் காலமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்; நான் பழைய நினைவுகளை எல்லாம் சேகரிக்கிறேன். நினைவில் அப்படிச் சேகரிக்கும்போது, எனக்கு இங்கே அமர்ந்திருந்த பெருந்தலைவர் காமராஜர் தெரிகிறார்; அவரை வணங்குகிறேன். இங்கே அமர்ந்திருந்த பெரியவர் பக்தவத்சலம் தெரிகிறார்; வணங்குகிறேன். இங்கே அமர்ந்திருந்த என் ஆசான் அண்ணா தெரிகிறார்; அவரை வணங்குகிறேன். இங்கே அமர்ந்திருந்த என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தெரிகிறார்; அவரை ஆரத்தழுவி அன்பைப் பரிமாறிக்கொண்டு இங்கே பேசுகின்றேன். நான், என்னால் இயன்ற அளவிற்கு என்னுடைய அமைச்சரவைச் சகாக்களின் துணை கொண்டு, இந்த மாமன்றத்தில் அமர்ந்திருந்த எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களின் துணை கொண்டு ஆற்றிய காரியங்களை, நான் ஆற்றியதாகவே இங்கு என்னைச் சிறப்பிப்பதற்காக எடுத்துச் சொல்லப்பட்டாலும் கூட, 'ஆமாம்; நான் தான் இந்தக் காரியங்களை ஆற்றினேன், வேறுயாரால் இதை ஆற்ற முடியும்'என்று சொல்லுகின்ற வீம்பு, வீறாப்பு, ஆணவம், அகம்பாவம் எனக்கு ஏற்பட்டதும் இல்லை; ஏற்படப் போவதும் இல்லை. அதற்குக் காரணம், என்னை ஆளாக்கிய தந்தை பெரியாரும், வழிநடத்திய பேரறிஞர் அண்ணாவும் அந்தப் பாடத்தை எனக்குக் கற்றுத்தரவில்லை. எனவே, அவர்களுடைய வழியில் பொது வாழ்வை நான் நடத்தியிருக்கிறேன். எனவே, இந்த மாமன்றத்தின் வரலாற்றிலே பல அத்தியாயங்கள், சீர்திருத்த அத்தியாயங்கள், புரட்சிகரமான அத்தியாயங்கள், நாட்டை முன்னேற்ற வேண்டிய அத்தியாயங்கள், பலப்படுத்தக்கூடிய அத்தியாயங்கள் அனைத்தும் நிறைவேறியிருக்கின்றன .''

– என்று அவர் உரையாற்றியது மறக்கவொண்ணா நிகழ்வாகும்.

நூற்றாண்டு விழா காணும் இந்தச் சட்டமன்றத்திலேதான் இருமொழித் திட்டம் நிறைவேற்றப்பட்டது. பேருந்துகளை நாட்டுடைமையாக்க முதல் தடவையாக இந்தியாவிலேயே இந்த மாமன்றத்திலேதான் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மின்சார விளக்கு இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது என்று சூளுரைத்து, அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்புத் தருவதற்கான திட்டம் இங்கேதான் வகுக்கப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளிலே மகளிருக்கு 33 சதவிகித ஒதுக்கீடு

செய்து அறிவித்ததும் இந்த மன்றத்திலேதான்! பெரியாரின் கொள்கையாகச் சமத்துவக் கொள்கையை நிறைவேற்றுவதற்கு வழிவகுத்ததும் இந்த மாமன்றத்தில்தான். உருது அகாடமி உருவாக்கியதும் இந்த மாமன்றத்தில்தான்.

புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா கிடைக்கும் எனச் சட்டம் செய்ததும் இந்த மாமன்றத்தில்தான். அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று ஆணை பிறப்பித்து, தந்தை பெரியாருடைய நெஞ்சிலே இருந்த முள்ளை அகற்றுவதற்குச் செய்த ஏற்பாடும் இந்த மாமன்றத்தில்தான்! அரசியல் கொள்கை ரீதியாகப் பல நேரங்களில் வேறுபாடுகள் இருந்தாலும் கூட, வணக்கத்துக்குரியவர், போற்றுதலுக்குரியவர், பின்பற்றுதலுக்குரியவர் என்ற நிலையில் காமராசர் புகழ் நிலைத்திட அவர் பிறந்த நாளை 'கல்விக் கண் திறந்த நாள்' என்று அறிவித்து சட்டம் நிறைவேற்றப்பட்ட இடமும் இதுதான்.

தேசியப் பார்வையோடு தமிழ்நாட்டின் நலனையும், உரிமைகளையும் பெற தலைவர் கலைஞர் அவர்களது சிந்தனையும், செயலும் என்றென்றும் வரலாற்றில் நிலைத்து நிற்கக்கூடியவை. மாநிலங்களுக்குள் ஒரு சகோதர பாசத்தோடு பிரச்சினைகளைத் தீர்ப்பது இன்றியமையாதது. அந்த அளவில் கலைஞர் அவர்களின் சமயோசிதத்தால் 19 ஆண்டுகள் பெங்களூருவில் திறக்க முடியாத ஐயன் திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்டது. அதுபோன்று சென்னையில் கன்னட கவிஞர் சர்வக்ஞர் சிலையும் திறக்கப்பட்டது. இதுவே தலைவர் கலைஞர் அவர்களுடைய இராஜதந்திரத்திற்கும் பெருந்தன்மைக்கும் சான்று ஆகும்.

'நான், நீ என்றால் உதடுகள் ஒட்டாது; நாம் என்று சொல்லும்போதுதான் உதடுகள்கூட ஒட்டும்' என்றார் தலைவர் கலைஞர். அவரது வழிநின்று, 'வாருங்கள்! நாம் என்ற உணர்வுடன் இணைந்து பயணிப்போம் – இனப்பகையை முறியடிப்போம். தேர்தல் களத்தில் வெற்றிகளைக் குவிப்போம் – அதனைத் தலைவர் கலைஞருக்கு இலட்சியக் காணிக்கையாக்குவோம்!' என்று தேர்தல் களத்திலே நின்று அறைகூவல் விடுத்து, இன்றைக்கு மக்களாட்சியை மலரச் செய்து, அரியணையில் அமர்ந்திருக்கிறோம். 'இது எனது அரசு அல்ல. நமது அரசு. இதுதான் என்னுடைய கொள்கை'. அந்த அடிப்படையில் நாம் அனைவரும் ஒருங்கே நின்று, மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை பெருமை வாய்ந்த இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி, வரலாறு படைப்போம்.

மாநில அதிகாரங்களைக் கேட்டுப் பெறுவதற்கும், தமிழ் மொழியின் மாண்பைக் கட்டிக்காப்பதற்கும், தமிழனின் அரசியல், பொருளாதார, சமூக உரிமைகளைப் போராடிப் பெறுவதற்கும் என்ன விலை கொடுக்கவும் தயார் என்ற சமரசமற்ற உறுதியோடும், தெளிவோடும், தலைவர் கலைஞர் அவர்களின் வழியில் நாம் பீடு நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம்.

தலைவர் கலைஞர் அவர்களிடம் இன்றைய அரசியல்வாதிகள் கற்க வேண்டியவை ஏராளம். சட்டமன்றப் பேரவையில் அமைச்சராகவும், முதலமைச்சராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த காலங்களில் ஒரு நாளும் நேரம் தவறாமல் அவைக்கு வந்து, முழுமையாக இருந்து அவை நடவடிக்கைகளைக் கவனித்தவர் அவர். அலுவல் காரணமாக முதலமைச்சர் அறைக்குச் சென்றாலும், அங்கே ஒலிபெருக்கியில் அவையில் பேசுவோரின் பேச்சுகளைக் கேட்பதுடன், குறிப்பும் எடுத்து வைத்துக் கொள்வார். அவைக்கு வரும்போது தேவைப்படும் போது அவற்றைப் பயன்படுத்துவார்.

புதுப்பொலிவு பூண்ட தமிழகத்தின் தந்தையாகக் கருதப்படும் தமிழினத் தலைவர் கலைஞர், தமிழகத்தில் உருவாக்கியுள்ள கட்டமைப்புகள் காலாகாலத்துக்கும் கலைஞரின் திருப்பெயரைச் சொல்லும். அவரது சிந்தனையில் சிலிர்த்தெழுந்து நிற்பதுதான் இன்றைய தமிழகம் ஆகும். அவரது வழியில் நாமும் செயல்பட்டு, 'தமிழ்நாடு தழைத்தோங்கிட என்றென்றும் பாடுபடுவோம்; நூற்றாண்டு விழா காணும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் எண்ணற்ற மக்கள் நலன் சார்ந்த திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவோம்' என்று உறுதியேற்போம்.

**கு. பிச்சாண்டி,** எம்.ஏ.,
பேரவை துணைத் தலைவர்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தலைமைச் செயலகம்
சென்னை–600 009

நாள்: 11/10/2021.



## வாழ்த்துச் செய்தி

செந்தமிழ்த் திருநாட்டின் முதலமைச்சராக முதன்முறையாகப் பொறுப்பேற்று நாடும்–ஏடும், உற்றாரும்–மற்றாரும், போற்றும் வகையில், தந்தை பெரியார், பேறிஞர் அண்ணா, **முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர்** வழியில் நல்லாட்சி மேற்கொண்டு, நாட்டிலிருக்கிற முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராய் இந்திய மக்களால் பாராட்டப்பட்டு, பீடு நடைபோடும் நம் **முதலமைச்சர் தலைவர் தளபதி** அவர்கள், 2021 ஆகஸ்ட் திங்கள் 2ஆம் நாள் அன்று தமிழ் நாடு சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழா மற்றும் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருவுருவப் படத் திறப்பு விழா என, சீர்மிகு விழாக் கண்டு அதனை நினைவுகூரும் வகையில் சிறப்பு மலர் வெளியிடப்படுவது நெஞ்சிற்கினிய நிகழ்வாகும்.

சீரோடும், சிறப்போடும் நடந்தேறிய அந்தச் சிந்தை கவரும் விழாவினைத் தொடர்ந்து வெளியிடப்படும் இந்தச் சிறப்பு மலர் தமிழ்நாடு சட்டமன்றத்தின் நூற்றாண்டு கால வரலாற்றுப் பெருமைகள், அங்கே நிறைவேற்றப்பட்ட சமுதாயச் சீர்திருத்தச் சட்டங்கள் மன்றத்தைத் தனது சிறப்பு மிகுந்த தொண்டால் பேராற்றலால் அலங்கரித்த சான்றோர்கள், அறிஞர் பெருமக்கள் ஆகியோரின் பெயருக்கும், பெருமைக்கும் நீங்காப் புகழ்சேர்க்கும் வகையில் மணம்மிகுந்த வாசனை மலர் மாலையாக–காலத்தால் கரையாத நினைவுகளைச் சுமந்து வரும் கருவூலமாக மிளிர விழைகிறேன். குறிப்பாக ஆதிக்க சக்திகளை வீழ்த்திட இயக்கம் கண்ட 18 ஆண்டுகளில் அதனைப் பாராள வைத்ததுடன் தான் நின்ற தேர்தலில் எல்லாம் வென்று வெற்றி வாகை சூடி, ஐந்துமுறை தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்று அரிய பல சாதனைகள் புரிந்து உலகத் தமிழச் சமுதாயத்தின் நலம் பேண அரண் அமைத்துக் காத்து, தமிழருக்கும், தமிழ் மண்ணிற்கும் பெருமை சேர்த்து மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சாம் கூட்டில் கொலுவிருக்கும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை, இந்திய திருநாட்டின் குடியரசுத் தலைவர் அவர்களின் திருக்கரத்தால் சிறப்பு வாய்ந்த சட்டமன்றப் பேரவையில் திறந்து வைத்துள்ளது தங்க மகுடத்தில் வைரம் பதித்தது போன்ற வரலாற்று நிகழ்வாகும்.

1989–லிருந்து இந்த மாமன்றத்தில் ஆறு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றிய காலத்தில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழா–சட்டமன்றப் பேரவை வைர விழா என அனைத்துச் சரித்திரப் புகழ் வாய்ந்த விழாவின் அங்கமாக நானும் பங்கு கொண்டுள்ளேன் என்பது நான் பெற்ற பேறாகும்.


வரலாற்றுக்குப் பெருமை சேர்க்கும் நினைவுகளைத் தாங்கி வரும் இந்தச் சிறப்பு மலர், தேன் மலர்ப் பூக்களின் கூட்டமாக, வண்ணப் பூந்தோட்டமாக வளர்ந்து, வசந்த கால வாசனைப் பூக்களின் அணி வகுப்பாய் வரலாற்றுப் பெட்டகமாகப் பவனிவந்து பாரெங்கும் புகழ் மணம் பரப்பும் காலக் களஞ்சியமாக மலர்ந்திட எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள் !

**அன்புடன்**

கு. பிச்

**(கு. பிச்சாண்டி)**

# இந்தியக்
# குடியரசுத் தலைவர்கள்




டாக்டர். இராஜேந்திர பிரசாத்
26–1–1950 –– 13–5–1962



சர்வபள்ளி ராதாகிருஷ்ணன்
13–5–1962––13–5–1967



ஜாகீர் உசேன்
13–5–1967––3–5–1969



வி. வி. கிரி
3–5–1969 –– 20–7–1969
24–8–1969 ––24–8–1974



பக்ருதின் அலி அகமது
24–8–1974––11–2–1977




நீலம் சஞ்சீவ ரெட்டி
25–7–1977––25–7–1982



கியானி ஜெயில் சிங்
25–7–1982––25–7–1987




ஆர். வெங்கட்ராமன்
25–7–1987––25–7–1992



சங்கர் தயாள் சர்மா
25–7–1992––25–7–1997



கே. ஆர். நாராயணன்
25–7–1997––25–7–2002




ஏ. பி. ஜே. அப்துல் கலாம்
25–7–2002––25–7–2007



பிரதீபா பட்டீல்
25–7–2007––25–7–2021



பிரணாப் முகர்ஜி
25–7–2012––25–7–2017



ராம் நாத் கோவிந்த்
25–7–2017 முதல்


# பிரதம அமைச்சர்கள்



பண்டித ஜவஹர்லால் நேரு
15-8-1947--27-5-1964



திரு. குல்சார் லால் நந்தா
27-5-1964--9-6-1964
11-1-1966--24-1-1966




திரு. லார்பகதூர் சாஸ்திரி
9-6-1964--11-1-1966



திருமதி. இந்திரா காந்தி
24-1-1966--24-3-1977
14-1-1980--31-10-1984



திரு. மொரார்ஜி தேசாய்
24-3-1977--28-7-1979



திரு. சரண்சிங்
28-7-1979--14-1-1980